விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித பார்சல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலையைனத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-4518)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 16 ஞாயிற்றுக்கிழமை (02.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 348

## ஐ.தே.கவை கூட்டமைப்பு வழிநடத்தி வருகின்றது

### ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியை தமிழ் தேசியக் கூட்டமைப்பே வழி நடத்துவதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அதன் தவிசாளர் ஜீ.எல். பீரிஸ் இதனை தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியை மாத்திரம் அல்லாது, ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள அனைத்து கட்சிகளையும் தமிழ்த் 15

## பிரதமருக்கான எமது தெரிவு ரணிலே; ஐ.தே.க. அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி பிரதமர் பதவிக்காக ரணில் விக்கிரம சிங்கவின் பெயரை தெரிவு செய்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

இதன் பிரதியொன்று ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஐ.தே.கவின் தவிசாளர் கபீர் ஹாஷிம் இந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கும், ஐ.தே.முன்னணிக்குமிடையில் அரசியல் குழப்பத்தை தீர்க்கும் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. இதன்போது, ரணில் தவிர்ந்த வேறொரு வேட்பாளரை பிரதமர் பதவிக்கு பிரேரிக்கும்படி மைத்திரிபால கேட்டிருந்தார். எனினும், ஐ.தே.க. அதற்கு 15

## சாவகச்சேரியில் கைக்குண்டு மீட்பு

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி - அல்லாரை பகுதியில் வைத்து ஒரு தொகை கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

அல்லாரை கடல் ஏரியை அண்டிய பகுதியில் நீர்தேங்கிய ஒரு இடத்தில் இருந்து குறித்த குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 16

அமெரிக்க முன்னாள் அதிபர்

## ஜார்ஜ் ஹெர்பர்ட் காலமானார்



16

# ரணிலை பிரதமராக்கவும் மாட்டேன்

# பாராளுமன்றத்தை கலைக்கவும் மாட்டேன்

### ஐக்கிய தேசிய முன்னணியிடம் ஜனாதிபதி மைத்திரி வாக்குறுதி

(கொழும்பு)

பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பாக வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பை மீளப்பெறப்போவதாக தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமராக ரணிலை மீளவும் நியமிக்கமாட்டேன் என திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். மேற்படி தகவலை ஐக்கிய தேசிய முன்னணியுடனான சந்திப்பின் போது கூறியுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



## முச்சக்கரவண்டி கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

முச்சக்கர வண்டிகளுக்கான ஆரம்பக் கட்டணம் (கட்டணமானி பொருத்தப்பட்டவை) 10 ரூபாயால் குறைக்கப்படுவதாக முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் புதிய கட்டண மாற்றம் இன்று முதல் நடை 15

## மகிந்தவுக்கு ஆதரவாக யாழில் மக்கள் போராட்டம்




15

பொலிஸார் சுட்டுப் படுகொலை

## முன்னாள் போராளி ஒருவர் கிளிநொச்சி பொலிஸில் சரண்

(பரந்தன்)

மட்டக்களப்பு - வவுணதீவு சோதனைச்சாவடியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தனக்குத் தொடர்பு உள்ளது எனத் தெரிவித்து முன்னாள் போராளி ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

கிளிநொச்சி - வட்டக்கச்சியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் 15

## வடக்கு, கிழக்கு இணைக்கப்படுவதனை தடுக்கவே ஜனாதிபதி மகிந்தவை பிரதமராக்கினார்

### எஸ்.பி.திசாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை தடுக்கவே ஜனாதிபதி, மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கியதாக அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய 15

## பிரதமர் பதவியை ஏற்கவே மாட்டேன்

### சஜித் பிரேமதாஸ உறுதி

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் பிரதமர் பதவியை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிதத்துள்ளார். 03

மகாராஜா பொதிகள் சேவை
ParcelLk DHL GTV Express SRI LANKA aramex
(C-4576)
பண்டிகை காலத்திற்கான விஷேட விலை கட்டண கழிவுடன் விஷேட சேவை ஆரம்பம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுவீடன் பெல்ஜியம் நெதர்லாந்து பிரான்ஸ் இத்தாலி டென்மார்க் பின்லாந்து | 750/- | நோர்வே சுவிட்சர்லாந்து | 900/- | அமெரிக்கா கனடா | 1000/- |
| | | ஜேர்மனி | 650/- | அவுஸ்திரேலியா | 850/- |
| | | லண்டன் | 600/- | | |

ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம் (11Kgக்கு மேல் 1Kgக்கான கட்டணம்)

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 225,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி. |
| 021 2224338 021 4925024 | 021 4930099 | 024 4930200 076 6908961 | 021 4930330 |

புதுக்குடியிருப்பு, சுதந்திரபுர பிரதேசத்தில்

## புலிகளின் ஒரு தொகை யுத்த ஆயுதங்கள் மீட்பு



16

அரசியல் நிலைமையால்

## பொதுமக்களுக்கு அழுத்தம் கூடாது

### ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நிலைமைகள் காரணமாக நாட்டு மக்களின் வாழ்க்கையில் எந்தவித மான அழுத்தங்களும் 15

# மகிந்தவுக்கு ஆதரவாக நெடுங்கேணியில் போராட்டம்

(பனிக்கன்குளம்)

வவுனியா நெடுங்கேணி பேருந்து நிலையத்தில் நேற்று பிற்பகல் 4 மணியளவில் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்தராஜபக்ஷவிற்கு ஆதரவாக மக்களுக்கான உரிமையை மக்களிடம்



விட்டுவிடுங்கள். வாக்களிக்க இடமளியுங்கள் எனத் தெரிவிக்கும் பதாகையைத் தாங்கியவாறு போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நெடுங்கேணி மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று பிற்பகல் 4மணியளவில் ஒன்றிணைந்த மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறும் மக்களின் ஆணையை நாங்கள் ஏற்க தயார் தேர்தலை நடத்துவோம் எனத் தெரிவிக்கும் பதாகைகளுடன் பேருந்து நிலையத்தைச் சுற்றி போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர். இப்போராட்டத்தில் 10 இலட்சம் கையெழுத்து பெறும் நடவடிக்கையும் இடம்பெற்றது.

ஆண்கள், பெண்கள் எனப்பலரும் கலந்துகொண்ட போராட்டத்தில் முன்னாள் வடமத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் கலந்து கொண்டிருந்தார். (ம-281)


## விற்பனைக்கு

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் பழைய வீடு விற்பனைக்குண்டு.
பார்வை நேரம்: பி.ப 4.00 - 6.00
தொடர்பு: 0772299566

## உடன் விற்பனைக்கு

வங்கி முகாமையாளர் பாவித்த SUZUKI CHEVERLET CRUZE கார் WP KK XXXX, Full Option, Centre Antona, Tuch A/C விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772991810

## விண்ணப்பங்கள் கோரல்

அதிதீரன் மின்சார பொறியியல் இலக்கு எனும் நிறுவனத்தினால் கீழ்க்காணும் பணிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- மின்னியல், இலத்திரனியலாளர்
- DTP, MS Office, Internet, Browsing
- மேசன் கட்டுமான பணியாளர்
- வீட்டுத்தோட்ட பணியாளர்

விண்ணப்பதாரரால் குறிப்பிடப்படும் பணி நிலைக்கான வெளிப்படுத்துகைகளை கு.பிரிய தர்சன், இல.55/24, வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில் எனும் முகவரிக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு அனுப்பவும். (6646)


# மரண அறிவித்தல்

## திருமதி சங்கநிதி தபானந்தம்



தோற்றம்: 09.07.1935 - மறைவு: 28.11.2018

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கநிதி தபானந்தம் அவர்கள் 28.11.2018 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - தபானந்தம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகளும், செல்லத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பதுமநிதி மற்றும் தவநிதி ஆகியோரின் அருமை சகோதரியும், அருணாசலம் (தமிழன் பாசறை, குளப்பிட்டி கொக்குவில்), பழனிவேற்பிள்ளை (ஓய்வுநிலை அதிபர்) மற்றும் காலஞ்சென்றவர்களான பவளம்மா, வியாழம்மா, பரமானந்தம், அருளானந்தம் ஆகியோரின் அருமை மைத்துனியும், கிருபவானி (ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் யாழ் கல்வி வலயம்), ஒளிவண்ணன் (கோட்டக்கல்வி அலுவலகம், வேலணை), சோமமாலினி (கனடா), கோகுலவண்ணன், விஜயபாமன் (பிரான்ஸ், முன்னாள் உத்தியோகஸ்தர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் (ICRC) கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சரவணபவன் (ராசா) மற்றும் வசந்தமாலினி (ஆசிரியை, யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), நந்தகுமார் (கனடா), வசந்த றோகினி (தாதிய உத்தியோகஸ்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), சுசிலா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும், கிருபவன் (பிரான்ஸ்), சாம்பவன், பிரணவன், சாயுக்ஸன், கேதாரணி (முகாமைத்துவ உதவியாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்), தவகேதன், பிரியங்கன் (கனடா), லதுசன் (கனடா), கோபிராம், கிருஸ்ணி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.12.2018 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.59, பொற்பதி வீதி,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 021 222 0063

(சி-4565)


## ஆண் உதவியாளர் தேவை

இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு சமையல் மற்றும் ஏனைய வீட்டு வேலைகள் செய்வதற்கு முழு நேரமாகவோ (பகல், இரவு) அல்லது பகுதி நேரமாகவோ (பகல் மட்டும்) ஆண் உதவியாளர் தேவை. விண்ணப்பதாரி குடும்பப் பொறுப்புக்கள் அற்றவராகவும் நல்லொழுக்கம், நல்ல உடல் நலமும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
முழுநேரமாக வேலை செய்ய விரும்புபவருக்கு உணவுடன் இலவச தங்குமிட வசதி செய்து தரப்படும். தொடர்புகளுக்கு:
தொ.பே இல.: 071 521 3201 - சாவகச்சேரி

## புளோரன்ஸ் நைற்றிங்கேல்

தாதியர் பயிற்சிப் பாடசாலை

தாதியராக வைத்தியசாலையில் தொழில்புரிய ஆசைப்படுகின்றீர்களா?



- ஒரு வருட பயிற்சிப் பாடநெறி
- மூன்று மாதம் தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள்
- பாட முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

தகைமை:-
- O/L
- A/L
- வயது 18 - 35

(C-4585)

முகவரி:-
குஞ்சர் கடையடி,
கரணவாய் மத்தி, நெல்லியடி.
தொலைபேசி அழைப்புகளுக்கு
021 433 8919, 076 222 6438
Hotline:- 0777186438

கே.கே.எஸ்.றோட்,
மருதனார்மடம்.
021 492 8916
077 298 4849
F/b - F/N-School of Nursing

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்

## காங்கேசு சிவராசா



வேலணை கிழக்கு 2-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பூந்தோட்டம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட காங்கேசு சிவராசா 29.11.2018 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காங்கேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துவேலு - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும் அருட்செல்வியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இராஜேஸ்வரி (சுவிஸ்), இராசலட்சுமி (பிரான்ஸ்), மகாலட்சுமி, தங்கலட்சுமி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரரும் மணிதீபன் (லண்டன்), துவாரகி (பிரான்ஸ்), சுதன், கௌசிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவிதா (லண்டன்), பரமேஸ்வரன் (பிரான்ஸ்), கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கெவின், கோபிதாஸ், கேதானுசன், தன்சிகா, கியூனிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் றமணிசோதி, திருநாவுக்கரசு (அமரர்), தர்மபாலன் (அமரர்), கோபாலபிள்ளை (அமரர்), இராஜேந்திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் 2-ம் வட்டாரம் அம்மன் கோவிலடி வேலணை கிழக்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2-ம் வட்டாரம், அம்மன் கோவிலடி,
வேலணை கிழக்கு, வேலணை.

தகவல்: குடும்பத்தினர்
077 852 4364

(6634)

# பொட்டம்மான் இறக்கவில்லை

# நோர்வேயில் உயிருடன் உள்ளார்

## கருணா பகீர் தகவல்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் புலனாய்வு பிரிவின் தலைவர் பொட்டம்மான் இறுதி யுத்தத்தில் இறக்கவில்லை. அவர் நோர்வேயில் உயிருடன் இருக்கின்றார் என முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.**



கொழும்பு சிங்கள ஊடகத்திற்கு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இரு பொலிஸார் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் காரணமாகயிருக்கலாம் என கருணா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு மீண்டும் புத்துயிர் ஊட்டும் நடவடிக்கை இது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொட்டம்மான் நோர்வேயில் மறைந்து வாழ்கின்றார் எனவும் கருணா தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் நாட்டின் புலனாய்வு பிரிவை செயலிழக்கச் செய்துள்ளதுடன் தேசிய பாதுகாப்பை புறக்கணித்து பாதுகாப்பு படையினருக்கு அவமரியாதையை ஏற்படுத்தியுள்ளது எனவும் கருணா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக விடுதலைப்புலிகள் மீண்டும் தலை தூக்குவது ஆச்சரியமளிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள கருணா விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு நானும் உதவியுள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## தற்போதைய சூழ்நிலையில் பிரதமர் பதவியை ஏற்கேன்

### சஜித் பிரேமதாஸ உறுதி

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் பிரதமர் பதவியைத் தான் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் இரவு நடத்திய பேச்சுக்களின் போதும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே, பிரதமர் பதவியைத் தற்போது தான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சஜித் தெரிவித்தார்.

"இந்த நேரத்தில் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளும் நோக்கம் இல்லை. ஆனால் எதிர்கால நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கவின் கட்சியின் பிரதமர் வேட்பாளராக இருக்கக்கூடும். எனினும், அதுபற்றி கட்சியின் செயற்குழு தான் முடிவு செய்யும்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்க வேண்டும் என்பதே கட்சியின் உறுதியான நிலைப்பாடு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(இ-7)

## அடுத்த இரண்டு ஆண்டுகளில் மூன்று தேர்தல்கள் நடைபெறும்

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த இரண்டு ஆண்டுகளில் மூன்று தேர்தல்கள் நடைபெறும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் மாகாண சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டு, 2020 நவம்பர் 13 ஆம் திகதி தேர்தல் ஆணையத்தின் பதவிக்காலம் முடிவடையும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும் எல்லை நிர்ணய அறிக்கையின் தாமதமே மாகாண சபைத் தேர்தல்கள் பிற்போட காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு நாடாளுமன்றம் அல்லது நீதிமன்றம் தேர்தலை நடத்துமாறு கட்டளை பிறப்பித்தால் எந்த நேரத்திலும் தேர்தலை நடத்தத் தேர்தல் ஆணையகம் தயாராக இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மைத்திரியிடம் மனம்விட்டு பேசிய மனோ

(கொழும்பு)

ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது பல விடயங்கள் தொடர்பில் மனம் விட்டு பேசியதாக நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு - முகத்துவாரம் இந்துக்கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் சில முடிவுகள் எட்டப்பட்ட போதும், சில முடிவுகள் இன்னும் எட்டப்படாமல் பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐக்கிய தேசிய முன்னணிக்கே பெரும்பான்மை இருப்பதை ஜனாதிபதி ஒத்துக்கொண்டுள்ளார்.

அடுத்ததாக நாடாளுமன்ற கலைப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை திரும்பப்பெறுவதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்ற ஒரு கட்சி தங்களது பிரதமர் தெரிவுக்கான யோசனையை முன் வைக்கும் போது அதை தட்டிக்கழிப்பதற்கு அதிகாரம் இருக்கின்றதா? என்ற கேள்விக்கு ஜனாதிபதியால் பதில் கூற முடியவில்லை.

எனினும் உங்கள் கட்சியிலிருந்து ரணில் அல்லாத ஒருவரை பிரதமர் பதவியில் அமர்த்துவதாக இருந்தால் அது குறித்து தாம் தீர்மானம் எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். மேலும், இது தொடர்பில் இன்று மீண்டும் ஒரு சந்திப்பு நடத்த உள்ளதாக மனோகணேசன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் செல்லுபடியற்றவை

### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அண்மையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் செல்லுபடியற்றவை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

ஒரு ஒழுங்குமுறையின்றி முன் வைக்கப்பட்டுள்ள இந்த யோசனைகளை நிறைவேற்றுவதற்கு எவரும் கடமைப்பட்டவர்களில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## வவுணதீவில் பொலிஸார் கொலை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் நேற்று ஆரம்பம்

(வவுணதீவு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேசத்தில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்றுக்காலை முதற்கட்ட விசாரணையை ஆரம்பித்துள்ளது.

பிரதேசத்தின் களப் பரிசோதனை நடவடிக்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுணதீவு வலையிறவு பாலத்திற்கு அருகிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் இரவு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் நேற்று முன்தினம் அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்டனர்.


இச் சம்பவத்தையடுத்து பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் மாலை ஸ்தலத்திற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் முன்னேற்றம்

### ஆனால் முடிவுகள் இல்லை-அகில

(கொழும்பு)

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையிலான சந்திப்பு முன்னேற்றகரமானதாக இருந்தது" என பாராளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.




ஐக்கிய தேசிய முன்னணிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அகிலவிராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் சந்திப்பு முன்னேற்றகரமானதாக இருந்த போதிலும் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை என்றும் சந்திப்பின் தொடர்ச்சியாக இன்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதியை மீண்டும் சந்திக்க போவதாகவும் அகிலவிராஜ் தெரிவித்தார். (இ-7)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 03 - 11 - 1945 | 30 - 11 - 2018 |



# சின்னப்பு ஜோசவ் செல்வநாயகம்

**(உரிமையாளர் - ஆசிர்வாதம் ஸ்ரோர்ஸ், ஆசிர் வணிக நிலையம்)**

இல.16/3, கச்சேரி நல்லூர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு ஜோசவ் செல்வநாயகம் கடந்த 30.11.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - சூசானம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரப்பியப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும் மாகிறேற், காலஞ்சென்றவர்களான ஞானம்மா, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அலெக்ஸ் நிக்ஸன் (ஆசிர் வணிக நிலையம்), காலஞ்சென்ற றெக்ஸ் ராஜ்குமார் மற்றும் அனிற்றா, ரஜீவ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபத்திரா, கிருபாகரன் சேவியர் (ஆசிரியர் - நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), வினோதா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் செல்வநாயகம், அருளானந்தம், காலஞ்சென்ற இம்மானுவேல், வேதநாயகம், சிங்கராசா, ஜெயநாயகம் ஆகியோரின் மைத்துனரும் றெக்ஸ் ஹரிஸ், அக்ஷயா, றோஷன், றேஷ்மி, சஞ்சுதன், ஜொவினா, ஜெலைனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (03.12.2018) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் புனித திரேசாள் ஆலயத்தில் (றக்கா வீதி) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.16/3, கச்சேரி - நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 772 1740, 021 222 4454**

# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் "சமூகஜோதி" உயர்திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் 67 ஆவது அகவையின் நன்னாளில் நற்பணிகளுக்காக ஒரு கோடி ரூபாவினை வாரி வழங்குகின்றார்



02.12.2018

திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்கள் புலம் பெயர்ந்து வாழும் எமது மக்களின் முன்னோடியாக தான் பிறந்த தாய்நாட்டிற்கு அளப்பரிய சேவையாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தோடு இதுவரை பலகோடி ரூபாய்களை சமூகசேவை செயற்பாடுகளுக்காக செலவழித்துள்ளார். தனது சொந்த நிதிப்பங்களிப் புடன் இலங்கை முழுவதும் மூவின மக்களுக்கும் சேவை செய்யும் முன்னோடி நிறுவனமாக தியாகி அறக் கொடை நிறுவனம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**இவர் பிறந்த தினமான இன்று மட்டும் பின்வரும் விசேட செயற்றிட்டங்களுக்கு ஒரு கோடி ரூபாயினை ஒதுக்கியுள்ளார்**

1) திருமணமாகாத மகளிருக்கான நிலையான வைப்புத்திட்டம் ஒன்றை அங்குராப்பணம் செய்ய வுள்ளார்

2)வீடமைப்பு திட்டத்திற்காக பல கோடி பெறுமதி யான காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வரும் அதேவேளை எமது பணியாளர் ஒருவருக்கு வீட்டுத் திட்டப் பத்திரமும் வழங்கப்படவுள்ளது

3) St. John Bosco வித்தியாலயத்திற்கு Pavilion அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

4) பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உப கரணங்கள் வழங்கப்படவுள்ளன.

5) செம்மணி இந்து மயானத்தில் இவரினால் நடப்பட்ட 200 மரங்களின் பராமரிப்பிற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

6) முதியோரை கௌரவப்படுத்துவதற்காக புதிய ஓய்வூதிய திட்டம் ஒன்று தொடங்கப்படவிருக்கின்றது

7) பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படவிருக்கின்றன.

8)சமய செயற்பாடுகளுக்கும் நிதி ஒதுக்கப்பட் டுள்ளது—கைலாசபிள்ளையார் கோவில் மற்றும் தென் பகுதியில் பௌத்த விகாரை ஒன்றிற்கும் புனரமைப்பு செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

9) எமது நிறுவன ஊழியர் நலன்புரி திட்டத்திற் கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

10) விசேட தேவையுடையவர்களுக்கு மூன்று சில்லு சைக்கிள்கள் வழங்கப்பட இருக்கின்றது.

11) பார்வை குறைபாடுடைய பாடசாலை மாணவர் களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவிருக் கின்றது.

12) சூழல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1000 தென்னங்கன்றுகள் வழங்கப்படும் அதேவேளை வேறு பல பயனுள்ள மரக்கன்றுகளும் வழங்கப்பட வுள்ளன.

13) முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவி— பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மிகவும் வசதி குறைந்த முன்பள்ளி பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான உதவி வழங்கப்படவுள்ளது.

14) சுயமுயற்சி திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற் குட்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

15) வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் மூன்று வியாபார நிலையங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வியாபாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

16) நடமாடும் வியாபாரக் கொட்டகை ஒன்று பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

17) TCT Multi Trade Centre இல் வேலைசெய்யும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வும் வழங்கப்படவுள்ளது.

18) வடமாகாண கிரிக்கெட் சங்கம் ஒன்றிற்கு துடுப்பாட்ட வீரர்களுக்காக 2 இலட்ச ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

19) மாணவர்களுக்கு இரண்டு சில்லு சைக்கிள் களும் வழங்கப்படவுள்ளன.

20) வசதி குறைந்த தெரிவு செய்யப்பட்ட ஆட்டோ சாரதிகளுக்கு கடன் வசதி செய்து கொடுக்கப்படவுள்ளன.


**இவர் பல ஆண்டுகளாக கோடிக் கணக்கான ரூபாய்களை மாதாந்தம் பின்வரும் வாழ்வாதார செயற்றிட்டங்க ளுக்கு வாரி வழங்குகின்றார் என்பதனை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்**

1.கல்வி ஊக்குவிப்பு செயற்றிட்டம் :-

❖ முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவி

பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மிகவும் வசதி குறைந்த முன்பள்ளிப் பாடசாலைகளில் சேவைபுரியும் ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பு தொகையும் வழங்கப்படுகின்றது.

❖ அத்தடன் பார்வைக் குறைபாடுடைய மாணவர் களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் மாதாந்தம் வழங்கப் படுகின்றது.



❖ பாடசாலைமாணவர்களுக்கான உதவி

மிகவும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மேம் பாட்டிற்காக மாதாந்தம் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதில் ஆயிரக்கணக்கானோர் பயனடைகின்றனர்.

❖ பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்வித் தேவைக்காக மாதாந்தம் தலா 1000வழங்கப்படுகின்றது.

அத்துடன் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கு மாதாந்த உதவியும் வழங்கப்படுகின்றது.

2.பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிச் செயற்றிட்டம்

❖ கணவனை இழந்த அல்லது கணவனால் கைவி டப்பட்ட மிகவும் வறிய நிலையில் இருக்கும் குடும் பங்கள் பொருளாதார முயற்சியில் வருமானத்தையீட்ட தொடங் கும் வரை அவர்களின் குடும்ப நிலைக்கேற்ப மாதாந்தம் தலா 500/- தொடக்கம் 2000/- வரை வழங்கப்படுகின்றது.

❖ பொருளாதார முயற்சியில் ஈடுபட்டுள்ள மாதர் சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்த வசதி செய்து கொடுக்கப்ப டுகின்றது.

3. மருத்துவ உதவிச் செயற்றிட்டம்

❖ புற்றுநோயாளருக்கான உதவி

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய நிலையில் உள்ள நோயாளர்களுக்கு மருத்துவ செலவிற் க்காக மாதாந்தம் தலா 1000/- வழங்கப்படுகின்றது.

❖ முதியவர்களுக்கான மருத்துவ உதவி

பிரதேச செயலகங்களின் ஊடாக மாவட்ட அலுவலகர் சமூக சேவை திணைக்களத்தினால் வைத்திய உதவி போதியளவு பெறமுடியாத வறுமைக்குட்பட்ட முதியோர் கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழ மைகளில் இலவச மருத்துவ சேவை எம்மால் வழங் கப்படுகின்றது. அத்துடன் இவர்களுக்கு இலைக்கஞ்சியும், போக்குவரத்து வாகன வசதிகளும் வழங்கப்படுகின்றது.

❖ ஏனைய மருத்துவ உதவி

மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் மிக வும் வசதி குறைந்த நோயாளருக்கு போக்கு வரத்துச் செலவுக்காகவும், மருந்துச் செலவுக்காகவும் உதவி வழங்கப்படுகின்றது

4.ஆதரவற்ற முதியவர்களுக்கான உதவிச் செயற்றிட்டம்

❖ ஆதரவற்று வறுமைக்கோட்டின் கீழ் வாழும் முதியோர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு தலா 500/- வழங்கப்படுகின்றது.

5.மகளிர் மீள் எழுச்சித்திட்டம்

❖ பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பெண்களுக்கு மாதாந்தம் 1000/- ரூபா உதவித் தொகையாக வழங்கப்பட்டு அவர்கள் பொருளா தார முயற்சிகளில் ஈடுபடுவதற்கான சந்தை வாய்ப் பினை ஏற்படுத்திக் கொடுப்பதே இத் திட்டத்தின் நோக்க மாகும்.

6.தாய் சேய் நலத்திட்டம்.

❖ வறுமைக்கோட்டிற்குட்டபட்ட ஒரு வருடத்திற் குட்பட்ட குழந்தையையுடைய தாய்மாருக்கு மாதா ந்தம் 1000/- பெறுமதியான சத்துணவுப் பொதி வழங்கப்படுகின்றது.

7.சூழல் பாதுகாப்புத்திட்டம்

❖ இத்திட்டத்தின் ஊடாக செம்மணி இந்து மயானம் தெரிவு செய்யப்பட்டு, இங்கு 200 நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் மாதந்தோறும் இம்மயானத்தின் பராமரிப் புக்காகவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கடந்த காலங்களில் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களினால் மேற் கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க சமூக சேவைத் திட்டங்கள்**

1)நோயாளர்களின் நலன் கருதி வவுனியா பொது வைத்தியசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கான பொறிமுறைக்கு 4,000,000 நாற்பது இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

2) யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு நுழை வாயில் அமைத்துக் கொடுத்ததிற்கு ஆறு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

3) புனித பத்திரிசியார் கல்லூரிக்கு டெனிஸ் மைதா னம் ஆறு இலட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக் கப்பட்டது.

4) எழிலூர் கிராமத்திற்கு எட்டு இலட்சம் ரூபா செல வில் முன்பள்ளி ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

5) மதவாச்சியில் சுயதொழில் முயற்சியாளர் ஒருவருக்கு நான்கு இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

6) வேம்படி மகளிர் கல்லூரியின் இருமாடி கட்டடத் திற்கு மின் இணைப்பிற்காக இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

7) சென்ஜோன்ஸ் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலுக்கு 10 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

8) முதியோர் தின மற்றும் சிறுவர் தின நிகழ்வுக ளுக்கு குறிப்பிட்ட சில பிரதேச செயலகங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

9) தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சத்திரசிகிச்சை பிரிவின் புனரமைப்பிற்கு கணிசமான பங்களிப்பு வழங்கப்பட்டது.

10) அத்துடன் பல வருடங்களாக தொடர்ச்சியாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் முதியோருக்கு இலவச மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுவதோடு இவர்களுக்கான இலவச போக்குவரத்து வசதிகளும் வழங்கப்படுகின்றன.

11) யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் கற்றல் வளநிலையம் 5 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டது.

(C-4584)

**"பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு என்பது சரித்திரமாக இருக்கட்டும்"**

**சி.மாணிக்கராசா, பிரதிக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்**





யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி செயன்முறை தொழில்நுட்ப மன்றத்தினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற செயன்முறைத் தொழில்நுட்பத் திறன்கள் கண்காட்சி கல்லூரி அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கண்காட்சியில் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்லூரி ஆசிரியர்கள், அயற் பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதில் மாணவர்களின் பல்வேறு துறைசார் புத்தாக்கங்கள் வெளிக்கொணரப்பட்டது. மன்றப் பொறுப்பாசிரியர் க.சுவாமிநாதன் இக் கண்காட்சியை ஒழுங்கு செய்திருந்தார்.

## கொழும்பு பல்கலைக்கழகம் நடத்தும் விஞ்ஞான தொழில்நுட்பக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பத்தின் நிலையான அபிவிருத்திக்கான விஞ்ஞானம் என்னும் கருப்பொருளுடன் இலங்கையின் 70 வருட சுதந்திரத்தைக் கொண்டாடும் முகமாக கொழும்பு பல்கலைக்கழகம் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்துடன் இணைந்து நடத்தும் ''விஞ்ஞான தொழில்நுட்ப கண்காட்சி 70'' எதிர்வரும் 5 முதல் 8 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பௌதிகவியல், இரசாயனவியல், தாவர விஞ்ஞானம், விலங்கியல் மற்றும் சூழல் விஞ்ஞானம், அணுக்கரு விஞ்ஞானம், கணிதம், புள்ளி விபரவியல் தொடர்பாள விடயங்களின் காட்சிப்படுத்தல்கள் விளக்கத்துடன் உட்படுத்தப்பட்டுள்ளன.

எனவே மேற்படி கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன்பெறுமாறு பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆர்வமுடையோரைக் கேட்டுக்கொள்கின்றோம் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)



பருத்தித்துறை வேலும்மயிலும் பவுண்டேசன் நிறுவனத்தினரால் நிறுவுநர் வே.தயானந்தராஜாவின் பணிப்புரையின் பேரில் பருத்தித்துறையில் அமைந்துள்ள தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளில் தேவையுடைய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## நல்லூரில் யோகா பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா உலகம் நல்லூர்த் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசைமண்டபத்தில்புதியயோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றது. இதன் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமைமாலை 4.30மணிக்கு சுதேசமருத்துவர்க.சோதிதாசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் யோகக்கலைக்கான வருகைப் போதனாசிரியர் எஸ்.உமாசுதனின் ''ஆரோக்கியத்தைமேம்படுத்தும்யோகா வழிமுறைகள்'' என்னும் விடயம் பற்றிய கருத்துரை இடம்பெறும்.

இதனைத்தொடர்ந்துயாழ். யோகா உலகம் தொனிப்பொருளில் கருத்துரையை வழங்குவதோடுசிரிப்பு யோகா பயிற்சியினையும் வழங்குவார். யோகா உலக மாணவர்களின் யோக அசைவுகள் (Live Show) நிகழ்வும் நடைபெறும்.

யோகாவகுப்புக்கள்காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணி தொடக்கம் 7 மணி வரை இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும். இவை தவிர்ந்த நேரங்களிலான வகுப்புக்களுக்கான பதிவுகள் நடைபெறும்.

ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிராணாயாமம், தியானம்மற்றும்சாந்த வழிமுறைகள், அனுபவம் உள்ள ஆசான்களால்நுணுக்கமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன்மருத்துவர்களின்ஆலோசனைகளும் வழங்கப்படும்.

யோகா பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் அறிமுக நிகழ்வில் கலந்து கொள்வது அவசியமானது. ஆர்வமுள்ள அனைவரும் யோகா பயிற்சி நெறிகளில் இணைந்து பயனடைய முடியும் என்று யோகா உலகம் அமைப்பினர் அறிவித்துள்ளனர். (இ)

## விவசாயிகளுக்கு சூரிய சக்தியில் இயங்கும் மின்பிறப்பாக்கிகளை வழங்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு சூரிய சக்தியில் இயங்கும் மின்பிறப்பாக்கிகளை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி அஞ்சலாதேவி இத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு தற்போது இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

மத்திய அரசாங்கத்தின் நிதிப்பங்களிப்புடன் செயற்படுத்தப்படும் இத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 16 விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் குறித்த மின்பிறப்பாக்கி வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தில் உள்வாங்கப்படும் விவசாயிகள் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவராக இருப்பதோடு நான்கு பரப்புக் காணிக்கு மேல் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவராய் இருக்க வேண்டும்.

குறித்த தகைமையுடைய விவசாயிகள்தற்போது தெரிவு செய்யப்பட்டு வருகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மரம் நாட்டும் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த மரம் நாட்டும் விழா இன்று 2 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக சித்த ஆயுள்வேத வைத்தியர்ஐ.தில்லைவாசன்(பழைய மாணவர்), சிறப்பு விருந்தினராக மாகாண சாரணர் பயிற்சியாளர் எஸ்.தேவரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## ஜெய்ப்பூர் நிறுவனத்தில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 6,7,8 ஆம் திகதிகளில் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவன வளாகத்தில் கண்காட்சி இடம்பெறவுள்ளது. (இ-5)

## இராசி பலன்

02.12.2018

கார்த்திகை 16, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு

தசமி பிற்பகல் 4.09 மணிவரை

அத்தம் பின்னிரவு 5.10 மணிவரை

சுபநேரம் 9.15-10.45 மணிவரை

இராகுகாலம் 4.45-6.15 மணிவரை

அமிர்தசித்தம்

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | | | ராகு |
| கேது | | | |
| சனி | குரு. சூரி | புத. சுக் | சந் |

சந்திராஷ்டமம்

உத்தரம்- அத்தம்

**மீனம்** உறவினர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மேடம்** கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** மகிழ்ச்சி தரும் வகையில் தொலைபேசித்தகவல்கள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், பொதுக் காரியங்களில் நாட்டம் செல்லும்.

**கும்பம்** குடும்பத்தினர்களிடம் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, விரயங்கள் கூடும் நாள், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம், தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், கனிவாகப்பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மகரம்** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் மகத் துவம் காண வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும்.

**சிம்மம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**தனுசு** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு.

**துலாம்** சுபகாரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக சற்று அலையும் நிலை ஏற்படலாம், கூட்டாளிகளிடம் கூடுதல் கவனம் தேவை.

**கன்னி** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகளை நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

## இராமேஸ்வரத்தில் மீனவர்கள் வேலைநிறுத்தம்

# இலங்கைக் கடற்படையின் மீது மெரைன் பொலிஸார் வழக்கு

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரின் அத்துமீறலை கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதோடு, இலங்கை கடற்படையின் மீது தமிழக மெரைன் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை 26 ஆம் திகதி இரவு கச்சதீவு அருகே இலங்கை கடற்படைக் கப்பல் மோதி இராமேஸ்வரத்தைச் சேர்ந்த வேலாயுதம் என்பவருக்கு சொந்தமான படகில் சென்ற நான்கு மீனவர்கள் நடுக்கடலில் படகு மூழ்கியதால் அவர்களை மீட்ட இலங்கைக் கடற்படையினர் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

ஒப்படைக்கப்பட்ட மீனவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது குறித்த 4 மீனவர்களையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந் நிலையில் நடுக்கடலில் மூழ்கடிக்கப்பட்டு படகிலிருந்த நான்கு மீனவர்களையும் சட்டவிரோதமாக கைது செய்து கொண்டு சென்றதற்கு கண்டனம் தெரிவிப்பதுடன், படகுக்கு நிவாரணத்தொகை வழங்கிட கோரியும், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் நேற்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்கம் அறிவித்துள்ளது.

இதனிடையே படகின் உரிமையாளர் வேலாயுதம் தனது படகை இந்திய எல்லையில் வைத்து இலங்கை கடற்படை ரோந்து கப்பலால் மோதி மூழ்கடித்து படகில் இருந்த நான்கு மீனவர்களையும் கைது செய்துள்ளதால் இலங்கை கடற்படை மீது உடனடி நடவடிக்கை எடுக்கக்கோரி முறைப்பாடு அளித்ததன் பெயரில் மண்டபம் மெரைன் பொலிஸ் நிலையத்தில் இலங்கை கடற்படை மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயர் நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்காது காலம் தாழ்த்தும் ஜனாதிபதி மைத்திரி -ஜே.வி.பி

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் அரசியலமைப்பு பேரவை அனுமதி வழங்கி ஒரு மாதம் கடந்தும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உயர் நீதிமன்றத்திற்கான இரண்டு நீதியரசர்களை இன்னும் நியமிக்காது இருந்து வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு பேரவையின் தலைவரான சபாநாயகர் கரு ஜெயசூரிய, எஸ்.துரைராஜா மற்றும் ஈ.ஏ.ஜீ.ஆர். அமரசேகர ஆகியோரை உயர் நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்க அனுமதி வழங்கியிருந்தார்.

இந்நிலையில் இந்த விடயத்தில் தலையிடுமாறு விஜித ஹேரத், சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இது குறித்து ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார். (இ-7)


## மலிவு விற்பனை

நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு
மாபெரும் தளபாட மலிவு விற்பனை.

ஏசியன் தளபாட நிலையம்,
230, நாவலர் றோட் (இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்), யாழ்ப்பாணம்.

T.P.077 358 3879, 076 821 9418,
021 492 7791

(4574)

## விற்பனைக்குண்டு

வாழைக்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
077 172 6839

(6586)

## மணமக்கள் தேவை

பெண் லண்டன் PR.
பெண் நெதர்லாந்து PR.
பெண் ஜேர்மனி PR.
பெண் கொம்யூட்டர் என்சினியர் PR பிரான்ஸ்
ஆண் UK PR 1977
ஆண் UK PR லண்டன் 1976
ஆண் BSC 1980
ஆண் BSC 1980

தொடர்புகளுக்கு
077 579 1686

(6638)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1993 இல் பிறந்த சைவ போசனம் மட்டும் உடைய பட்டதாரி ஆசிரியை கிரக பாவம் 17 3/4, 12 இல் செவ்வாய் பூரட்டாதி 3 ஆம் பாதம் உடைய மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 172 6839

(6587)

மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியம் காப்போம்.

## நம்பிக்கை இழக்க வேண்டாம்.

உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.
எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

### கை கொடுக்கும் நண்பர்கள்

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அருகே)
077 900 8776 ( தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00 )




## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## அறிவித்தல்

இலங்கை அரசாங்கத்தில் பதிவு பெற்றதும், இலங்கை ஜனநாயகக் குடியரசின் 1917 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நம்பிக்கைச் சொத்துக் கட்டளைச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கருத்திற்கு உட்பட்டவாறு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுமான "நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்" எனும் பெயரில் உலகில் எந்த ஒரு இடத்திலும் ஆலயம் அமைத்துச் செயற்படுவதற்கோ, நிதியோ அன்றிப் பொருட்களோ வசூல் செய்வதற்கோ எந்தவொரு தனி நபருக்கோ, நபர்களுக்கோ அன்றி நிறுவனங்களுக்கோ மேற்படி சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபையினரால் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்பதை இத்தால் சகல பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம். இதனை மீறி நடக்கும் தனி நபருக்கோ, நபர்களுக்கோ அன்றி நிறுவனங்களுக்கோ எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வியாபார நோக்கோடு இத்தகைய செயற்பாடுகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அடியார்களாலும் நயினாதீவைச் சேர்ந்த அன்பர்களாலும் எமக்குத் தொடர்ந்து முறைப்பாடுகள் வந்த வண்ணம் உள்ளது என்பதனால், அம்பிகையின் அடியார்கள் எமது இவ் அறிவித்தலின் உண்மை நிலையினை தெளிவாகப் புரிந்து கொண்டு விளிப்புடன் இருக்குமாறு எம்மால் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

"நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு நிதியுதவி செய்ய விரும்பும் அடியார்கள் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் வங்கிக் கணக்குகளுக்கோ அன்றி "பொருளாளர் அறங்காவலர் சபை, நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு, ஸ்ரீலங்கா" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம் என்பதை அறியத்தருவதோடு வங்கி மூலமாகப் பணத்தினை அனுப்புவோர் அது பற்றிய விபரத்தினை எமக்கு அறியத்தரும் பட்சத்தில் நிதிக்குரிய பற்றுச்சீட்டினையும், அம்பாளின் பிரசாதத்தையும் அனுப்பி வைக்க எமக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென்பதனையும் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

**வங்கிக் கணக்கு விபரம்**

- க/கு இல 012426285-01 வர்த்தக வங்கி, பெற்றா,- கொழும்பு
- க/கு இல 1060012330 வர்த்தக வங்கி - வேலணை
- க/கு இல 007687860 இலங்கை வங்கி - வேலணை

(C-4572)

தொலைபேசி இல:-
+94- 021 321 3024,
021 320 7785

அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் கோவில்,
நயினாதீவு.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>தகைமை/தொழில்: Engineer, தனியார்,லண்டன்P.R<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/9036 | பிறப்பு: 1978 NonR.C<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: B.A,Dip.inEdu,ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தனியார்தொழில், விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/9067 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 61<br>உயரம்: 5' 6"<br>தகைமை தொழில்B.sc,M.BA,CIMA, தனியார்<br>எதிர்பார்ப்பு:CIMA,கொழும்பில் வேலை<br>தொ.இ: B/9037 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 30 செவ் 7 இல்<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/9072 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 36 சூரி செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:O/L,வாகன ஓட்டுநர், தனியார்,பெல்ஜியம் P.R<br>எதிர்பார்ப்பு: A/L,வெளிநாடு<br>தொ.இ: B/9040 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 46 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 155 CM<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/9073 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்:Paralegal(Lawyer), Daycare,Manager<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/9041 | பிறப்பு:1988R.C<br>நட்சத்திரம்: சதயம்<br>செவ் 2 இல்<br>உயரம்: 5' 5"<br>தக்கைமை/தொழில்:B.B.M, இறுதி வருடம், வங்கிஅலுவலர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிஅரச, தனியார் தொழில்,வெளிநாடு (அவுஸ்திரேலியா)<br>தொ.இ: G/9075 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறப்பு







இலட்சக் கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கு வளம் சேர்க்கும் மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து விடப்பட்டன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரஜரட்ட மக்களுக்காக கண்ட நீண்டகால கனவை நனவாக்கும் வகையில் அவரது முழுமையான கண்காணிப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட துரித மகாவலி திட்டத்தின் இறுதித் திட்டமான மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் நேற்று முன்தினம் முற்பகல் திறக்கப்பட்டன.

நீர்த்தேக்கத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்து நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் முதன்முறையாக வான் கதவு மட்டத்தை அடைந்துள்ள நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீர்த்தேக்க வளாகத்தை பார்வையிட்டார்.

நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் நாட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாரிய பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் மொரகஹகந்த - களுகங்கை நீர்த்தேக்கமாகும் என்பதுடன், இது இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் முக்கியமானதொரு சந்தர்ப்பமாகும். இதன் மங்கள நீரோட்ட நிகழ்வு கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு பராக்கிரம சமுத்திரத்தைப் போன்று சுமார் நான்கு மடங்காகும் என்பதுடன், இதன் மூலம் 82 ஆயிரம் ஏக்கர் வயல் காணியில் விவசாயம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சுமார் 2,000 சிறிய மற்றும் பெரிய குளங்களுக்கு நீர் வழங்கப்படவுள்ளதுடன், வடமத்திய மாகாணத்தில் 1,600 குளங்களுக்கும் வடமேல் மாகாணத்தின் 303 குளங்களுக்கும் நீர் வழங்கப்படவுள்ளது.

அந்த வகையில் அம்மாகாணங்களின் 3 இலட்சம் ஏக்கர் காணிகளில் விளைச்சலை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பதுடன் 15 இலட்சம் குடும்பங்கள் இதன்மூலம் பயனடையவுள்ளனர். மேலும் 3 இலட்சம் குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் வசதியும் வழங்கப்படவுள்ளது.

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதுடன், நீர்த்தேக்கத்தின் மின் பிறப்பாக்கிகளினால் உற்பத்தி செய்யப்படும் 25 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்படவுள்ளது. இதன்மூலம் வருடாந்தம் 336 மில்லியன் ரூபாய் பெறுமதியான எரிபொருளை சேமிக்க முடியும். இந்நீர்த்தேக்கத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நன்னீர் மீன் உற்பத்தி வருடாந்தம் 3 ஆயிரம் தொன்களாகும் என்பதுடன், இதன்மூலம் எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் 225 மில்லியன் ரூபாவாகும். மொரகஹகந்த நீர்த்தேக்க வளாகத்தை பார்வையிட்ட ஜனாதிபதி, அதனைத் தொடர்ந்து களுகங்கை நீர்த்தேக்க வளாகத்திற்கும் சென்று அதன் நிர்மாணப் பணிகளையும் பார்வையிட்டார்.

மொரகஹகந்த நீர்த்தேக்கத்துடன் இணைந்த அடுத்த பாரிய நீர்த்தேக்கம் களுகங்கை நீர்த்தேக்கமாகும். மாத்தளை மாவட்டத்தின் தும்பர, பள்ளத்தாக்கின் நக்கிள்ஸ் மலைத்தொடரில் அமைந்துள்ள களுபஹன பிரதேசத்தில் ஆரம்பமாகும் களுகங்கை லக்கல, பல்லேகம பிரதேசங்களில் மறிக்கப்பட்டு களுகங்கை நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்படுகிறது.

இதன் மொத்த கொள்ளளவு 248 மில்லியன் கனமீற்றர்களாகும். அதாவது 200,880 ஏக்கர் அடிகளாகும். இந்த நீர்த்தேக்கத்தின் பிரதான அணைக்கட்டு 618 மீற்றர் நீளமும் 68 மீற்றர் உயரமும் உடையதாகும்.

இந்நீர்த்தேக்கத்திலும் நீர் நிரப்பும் பணிகள் கடந்த ஜூலை 23ஆம் திகதி ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தற்போது இதன் நீர்மட்டம் துரிதமாக அதிகரித்து வருவதுடன், நிர்மாணப் பணிகளும் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

திட்ட வளாகத்தை பார்வையிட்ட ஜனாதிபதி களுகங்கை நீர்த்தேக்கத் திட்டத்தின் நன்மைகளை துரிதமாக விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு திட்ட அதிகாரிகளுக்கும் பொறியியலாளர்களுக்கும் பணிப்புரை விடுத்தார்.

ஜயந்தி சிறிசேன இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் வசந்த பெரேரா, மகாவலி பணிப்பாளர் நாயகம் கலாநிதி டி.எம்.எஸ். திஸாநாயக்க, மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டத்தின் பணிப்பாளர் டி.பி.விஜேரத்ன் உள்ளிட்ட மகாவலி அதிகார சபை அதிகாரிகள் இந்நிகழ்வில் பங்குபற்றினர். (இ-7)

# ரவி கருணாநாயக்கவை கைது செய்யாதது ஏன்?

(கொழும்பு)

அரச நிதியை முறைகேடாகப்பயன்படுத்தி அதனை இரகசிய வங்கிக் கணக்கில் 39 பேருக்கு பரிமாற்றிய முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை இன்னும் கைது செய்யாமல் இருப்பது ஏன். நாட்டுக்காக போராடிய அட்மிரல் ரவீந்திர விஜயகுணரத்னவின் விடயத்தில் எவ்வாறு சட்டம் செயற்பட்டதோ அதே போன்று ரவி கருணாநாயக்க விவகாரத்திலும் செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தில் நிதியமைச்சில் இடம்பெற்ற பல மோசடிகள் குறித்து பொதுஜன பெரமுனவினர் பல முறைப்பாடுகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் தாக்கல் செய்தோம். ஆனால் இதுவரையில் எவ்விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இனியாவது விசாரணைகளை விரைவுபடுத்தி உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் என்றார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# உலகில் எங்கும் நடக்காத அதிசயம் இலங்கையில்!



(குருநாகல்)

உலகில் எங்கும் நடக்காத அதிசய நிகழ்வு ஒன்று இலங்கையில் இடம்பெற்றுள்ளதாக பேராசிரியர் சந்தன ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் குருநாகலில் முகில் திரள் போன்ற ஒன்று வயல்வெளியில் திடீரென ஏற்பட்டமையால் மக்கள் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

இது குறித்து தீவிர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பேராசிரியர் கருத்து வெளியிட்டுள்ளார்.

குருநாகல் கட்டுவான பிரதேசத்தில் வயல் பகுதி ஒன்றில் 40 அடி உயரத்திலான முகில் போன்ற வடிவத்திலான பனித்தட்டு போன்ற ஒன்று கீழே விழுந்திருந்தது. எனினும் இதனை முகில் என்று உறுதியாக கூற முடியாது.

எப்படியிருப்பினும் பனிமூட்டம் அல்லது புகை போன்று ஒன்றினால் இது ஏற்பட்டிருக்கலாம். இது தொடர்பில் உறுதியான சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இறுதி முடிவுக்கு வர முடியாது. இவ்வாறான சம்பவம் எந்தவொரு நாட்டிலும் இதுவரை பதிவு செய்யப்படவில்லை என பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் 2018.12 02

❖1843-யாழ்ப்பாணத்தில் கடும் சூறாவளி வீசியதில் பலத்த அழிவுகள் ஏற்பட்டன.

❖1851-புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரெஞ்சு அரசுத் தலைவர் சார்ல்ஸ் லூயி பொனபார்ட் பிரான்சின் இரண்டாம் குடியரசைக் கலைத்தார்.

❖1984-ஒதியமலைப் படுகொலைகள்: முல்லைத்தீவு மாவட்டம், ஒதியமலை கிராமத்தில் இலங்கை இராணுவத்தினரால் 32 தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

❖1995-யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கை இராணுவத்திடம் வீழ்ச்சி அடைந்தது.

❖2002-இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஒஸ்லோவில் ஆரம்பமாயின.

பிறப்புகள்

❖1885-ஜார்ஜ் மினாட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க மருத்துவர் (இ. 1950)

❖1910-ரா.வெங்கட்ராமன், இந்தியாவின் 8 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 2009)

❖1912-நாகிரெட்டி, திரைப்படத் தயாரிப்பாளர், பத்திரிகையாளர் (இ. 2004)

❖1933-கி.வீரமணி, திராவிடர் கழகத் தலைவர்

❖1937-மனோகர் ஜோஷி, மகாராட்டிராவின் 15 ஆவது முதலமைச்சர்

❖1960-சில்க் ஸ்மிதா, தென்னிந்திய நடிகை(இ. 1996)

❖1963-சிவா ஐயாதுரை, இந்திய-அமெரிக்க கணினி அறிவியலாளர், தொழிலதிபர்

❖1963-நெப்போலியன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர், அரசியல்வாதி

❖1982-முருகதாசன், தீக்குளித்து இறந்த ஈழத்தமிழன் (இ. 2009)

இறப்புகள்

❖1911-பாண்டித்துரைத் தேவர், தமிழறிஞர்(பி. 1867)

❖1971-வீ.கே.வெள்ளையன், இலங்கைத் தொழிற்சங்கவாதி, மலையக அரசியல்வாதி(பி.1918)

❖1973-வை.பொன்னம்பலம், தமிழ்ப் புலவர், தமிழாசிரியர் (பி. 1904)

❖2006-வீ.துருவசங்கரி, இலங்கைத் தமிழ் அறிவியலாளர் (பி. 1950)

❖2008-மு.கு.ஜகந்நாதராஜா, பன்மொழிப்புலவர்(பி. 1933)

❖2014-ஏ.ஆர்.அந்துலே, மகாராட்டிராவின் 8 ஆவது முதலமைச்சர் (பி. 1929)

❖2015-எம்.ஏ.எம்.ராமசாமி, இந்தியத் தொழிலதிபர், அரசியல்வாதி (பி 1931)

❖2016-கோ.சி.மணி, தமிழக அரசியல்வாதி(பி. 1929)

சிறப்பு நாள்

❖சர்வதேச அடிமை முறை ஒழிப்பு தினம்

❖தேசிய நாள் (லாவோஸ்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 180 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 95 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 400 | 420 | 500 |
| தக்காளி | 300 | 300 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 100 | 100 | 150 | 100 |
| கரட் | 200 | 220 | 200 | 350 |
| பூசணி | 80 | 50 | 40 | 80 |
| புடோல் | 120 | 120 | 150 | 100 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 90 | 120 |
| பாகற்காய் | 300 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 130 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 300 | 200 | 200 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 150 | 240 |
| பீற்றூட் | 160 | 160 | 60 | 200 |
| கறிமிளகாய் | 300 | 240 | 220 | 300 |
| முருங்கைக்காய் | 600 | — | 200 | 400 |
| போஞ்சி | 150 | 140 | 150 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 130 | 100 |
| கீரை - 1பிடி | 60 | 70 | 40 | 60 |
| தேசிக்காய் | 400 | 400 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 300 | 160 | — | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 100 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 30 |
| ஈரப்பலா | 70 | 60 | 130 | 100 |

# நாடாளுமன்றக் கலைப்பு உத்தரவை மீளப்பெற ஜனாதிபதி மைத்திரி திட்டம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைத்து கடந்த மாதம் 9ஆம் திகதி வெளியிட்ட, சர்ச்சைக்குரிய வர்த்தமானி அறிவிப்பை மீளப்பெறுவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தீவிரமாக ஆலோசித்து வருவதாக, அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தத் தகவலை சர்வதேச ஊடகமான ரொய்ட்டர் வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பாக அளிக்கப்படும் தீர்ப்பு தமக்குப் பாதகமாக அமையக் கூடும் என்ற அச்சத்திலேயே ஜனாதிபதி இந்த முடிவு குறித்து ஆராய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீது, எதிர்வரும் 7ஆம் திகதி உயர் நீதி மன்றம் தீர்ப்பளிக்கவுள்ளது.

இந்த நிலையில் அதற்கு முன்னதாக- பெரும்பாலும் வரும் 5ஆம் திகதி, நாடாளுமன்றத்தைக் கலைத்து வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி இரத்துச் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## ரொய்ட்டர் தகவல்

ஜனாதிபதியுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடும் ஒருவர், இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில், வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி மீளப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகள் இருப்பதாக தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கலைப்பு தவறானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் என்பதில் தனக்கு எந்தச் சந்தேகமும்இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தமானி அறிவிப்பை மீளப் பெறும் திட்டம் தொடர்பாக தான் எதையும் அறியவில்லை என்று, ஜனாதிபதியின் பேச்சாளர் தர்ம சிறி ஏக்கநாயக்க கூறினார்.

இதேவேளை, உயர் நீதிமன்றம் தனக்குச் சாதகமாக தீர்ப்பளிக்கும் சாத்தியம் இல்லாததால், இந்தச் சிக்கலில் இருந்து கௌரவமாக வெளியேறுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது. (இ-7)

## இரண்டு பொலிஸார் படுகொலைக்கு முன்னாள் போராளிகளே காரணம்

(வவுணதீவு)

விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் போராளிகளே பொலிஸாரைப் படுகொலை செய்துள்ளனர் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார் என ஐலண்ட் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் பலமான கோட்டையாக முன்னர் விளங்கிய வவுணதீவுப் பகுதியில் இரு பொலிஸார் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்த விசாரணைகளை நேரில் கண்காணிப்பதற்காக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர சம்பவம் இடம்பெற்ற இடத்திற்ச் சென்றுள்ளார்.

பூஜித ஜெயசுந்தரவுடன் சிஐடியின் முக்கிய அதிகாரிகளும் அப்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இரு பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து உடனடியாக அப்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் நட்வடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைகள் கட்டப்பட்ட நிலையில் இரு பொலிஸாரின் சடலங்கள் மீட்கப்பட்டன அவர்கள் மிக அருகிலிருந்து சுடப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் போராளிகளே பொலிஸாரைப் படுகொலை செய்துள்ளனர் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார் என ஐலன்ட் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்த முடிவிற்குப் பின்னர் பொலிஸார் மீது நேரடியாக வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தெளிவுபடுத்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் பொலிஸாரின் கைத்துப்பாக்கிகளை எடுத்துச்சென்றுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் போது பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். என அதிகாரியொருவர் தெரிவித்தார் எனக் குறிப்பிட்டுள்ள ஐலன்ட் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளே இந்தத் தாக்குதல்லை மேற்கொண்டனர் என்பது குறித்து எந்த சந்தேகமும் இல்லை எனவும் குறிப்பிட்டார் எனத் தெரிவித்துள்ளது.

கூரான பொருளைப் பயன்படுத்தித் தாக்குதலை மேற்கொண்ட பின்னர் அவர்கள் அந்தப் பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர், விடுதலைப்புலிகளின் தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை பொலிஸார் தடுத்ததன் காரணமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என அந்த அதிகாரி தெரிவித்தார் எனவும் ஐலன்ட் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## பிணைமுறி மோசடி வழக்கின் மீது 4ஆம் திகதி முதல் தொடர் விசாரணை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பான வழக்கை, எதிர்வரும் 4 ஆம் திகதி முதல், தொடர்ச்சியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள, நீதிச் சேவைகள் ஆணைக்குழ தீர்மானித்துள்ளதாக, கொழும்பு கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க அறிவித்தார்.

அந்தவகையில், இந்த வழக்கை எதிர்வரும் 4ஆம் திகதி முதல், கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள, மேற்படி ஆணைக்குழ தீர்மானித்துள்ளதென, கோட்டை நீதவான் அறிவித்தார். இது தொடர்பான வழக்கு, கடந்த 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதிச் சேவைகள் ஆணைக் குழுவால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதம் குறித்து மன்றில் அறிவித்த நீதவான், இந்த வழக்குடன் தொடர்புடைய சந்தேநபர்களை, 4 ஆம் திகதியன்று, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு, நீதவான் உத்தரவிட்டார். அத்துடன், பிணைமுறி வழக்கின் சந்தேகநபர்களான, அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகிய இருவரையும் அன்றைய தினம் வரை தொடர்ந்து விளக்கமறியலில்வைக்குமாறும், நீதவான் உத்தரவிட்டார். (இ-7)


### விற்பனைக்கு

மாம்விறகு விற்பனைக் குண்டு (6608)

தொடர்பு:- 021-222-8105



### Northern Group of Company

யாழ்.மண்ணில்!

- ஆண், பெண் இருபாலாருக்குமான பதவி வெற்றிடம்
- முழுநேர மற்றும் பகுதிநேர வேலை வாய்ப்பு, தகைமைகள்:- O/L,A/L கற்றவர்கள், உடல், உள ஆரோக்கியமுள்ளவர்கள், வயதெல்லை: 18-30 வரை
- கணக்காளர்-பெண் (மாநகரசபை எல்லைக்குட்பட்டவர் விரும்பத்தக்கது.)

முகவரி: 340 K.K.S.Road, Jaffna (c 4581)

தொடர்புகளுக்கு:- 021790 4574,077 518 9963



### வேலைவாய்ப்பு

கொழும்பில் இயங்கும் சேவை நிறு வனம் ஒன்றிற்கு வாடிக்கை யாளர் சேவை அலுவலர்கள் தேவை

தகைமைகள்:- A/L சித்தி,மும் மொழி தேர்ச்சி

-அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்

- கொழும்பில் இருந்து பணியாற்ற வேண்டும்

(c 4582) தொடர்புகளுக்கு:- 0764594800


## டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சுகாதார வைத்தியப் பிரிவினரால் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்றிட்டம் அளவெட்டிப் பிரதேசத்தில் இடம் பெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளக்கிய இச் செயற்றிட்டம் நாளை 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ)


### வேலைக்கு ஆட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் பிரபல்யமான அழகுக்கலை நிலையம் ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை வயது 17-24 வயதுக் குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (4582)

தொடர்புகளுக்கு:- 077 474 9101, 077 691 4123




யாழ்.சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் இடம்பெற்றபோது இவ் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவும் பெற்றோர் தினமும் நிகழ்வின் போது...





கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின் வாசிப்பு மாத போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வாசிப்பு மாத போட்டியில் சித்திரம், சுவரொட்டி வாசிப்பு, திருக்குறள் மனனம், சஞ்சிகை, ஆக்கம், கதை கூறல், விநாடி வினா ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடத்தைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. பிரிட்டிஷ் கவுன்சில் அமைப்பினால் நடத்தப்பட்ட ஓவியப்போட்டியில் வெற்றி பெற்ற இரண்டு மாணவர்களுக்கு புத்தகமும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அடிப்படைச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்த தரம் 2 மாணவர்களுக்கு தாவரச் சான்றிதழும் வழங்கப்பட்டன.

(படங்கள்:- விஜயவாசன்)

# வெடுக்குநாறிமலை ஆதிகோணேஸ்வர ஆலயத்தைப் பாதுகாக்க நடவடிக்கை



(கொழும்பு)

தொன்மைவாய்ந்த வெடுக்குநாறிமலை ஆதி கோணேஸ்வரர் ஆலயத்தை புனரமைப்பதுடன் அங்கே மகா சிவராத்திரியை அனுஷ்டிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இந்துமத அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துவருவது தொடர்பாக வேந்தர் சி. பத்மநாதன் மற்றும் இந்து மத திணைக்களப் பணிப்பாளர் உமா மகேஸ்வரன் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

நேற்று அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில், வெடுக்குநாறிமலை ஆதிகோணேஸ்வரர் ஆலயத்தின் தொன்மையை பாதுகாக்கவும் அங்கே அடியார்களுக்கு வசதியாக படிக்கட்டுக்கள் அமைத்தல், பாதையை சீரமைத்தல், குழாய்க் கிணறுகளை அமைத்தல் என்பவற்றைச் செய்து சிவராத்திரி பூஜைகள் சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை செய்வதுடன் தொல்பொருள் திணைக்களத்தின் தேவையற்ற தலையீடுகளை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. (இ-7)

# மைத்திரியின் மனைவியிடம் கோரிக்கை விடுத்த ஹிருணிகா



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மனைவி ஜயந்தி சிறிசேனவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர முக்கிய கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மனநிலை பாதிக்கப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது. இலங்கையில் முடியாவிட்டால் இரகசியமாக சரி அவரை வெளிநாட்டிற்கு அழைத்துச் சென்று தேவையான சிகிச்சை வழங்குமாறு ஹிருணிகா கேட்டுக் கொண்டுள்ளார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சர்வதேச ஊடகவியலாளர்களிடம் ரணில் விக்கிரமசிங்க மீது மைத்திரி பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தினார்.

அந்த குற்றச்சாட்டுகள் உண்மை என்றால் அதனை ஏன் நிரூபிக்காமல் இருக்கின்றார். பிணை முறி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்தார். அதன் அறிக்கையை ஜனாதிபதி தன்னிடம் வைத்து கொண்டுள்ளார்.

அதன் மூலம் ரணில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளாரா என நான் ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகின்றேன். அப்படி என்றால் அதனை தற்போது பகிரங்கப்படுத்த முடியும்.

அத்துடன் ஜனாதி பதி செயலகத்தில் சம்பளம் பெறும் நபர் ஒருவர் ஜனாதி பதியை கொலை செய்ய முயற்சிப்பதாக கூறி நாடு முழுவதும் பிரபல்யமாகினார்.

தற்போது ஜனாதிபதி சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற ரீதியில் பொலிஸ்மா அதிபரை குற்ற விசாரணை திணைக்களத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிடுகின்றார்.

தவறு செய்தவர்களை தண்டிக்க முடியும். எனினும் ஏன் அப்படி செய்யாமல் இருக்கின்றார். இந்த ஜனாதிபதி குறித்து எங்களுக்கு ஆச்சரியமாக உள்ளது.

இவரது கருத்துக்களில் பல மாற்றங்கள் உள்ளது. இவர் மன ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளது உறுதியாகியுள்ளது.

அவரை வெளிநாட்டிற்கேனும் அழைத்து சென்று சிகிச்சை வழங்குமாறு ஜனாதிபதியின் மனைவி -மகளிடம் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஒத்திவைக்கப்பட்டது நாமலின் வழக்கு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அறுவரின் வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றம் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

சட்டவிரோதமாக 30 மில்லியன் ரூபா நிதியை நிறுவனமொன்றில் முதலீடு செய்தமை தொடர்பாக குறித்த அறுவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போதே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி வழக்கை ஒத்தி வைத்தார்.

பிரதிவாதிகள் தரப்பின் சிரேஷ்ட சட்டத்தரணிகள் மற்றுமொரு வழக்கு விசாரணையில் ஆஜராகியுள்ளமையால் குறித்த வழக்கை ஒத்தி வைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே இவ் வழக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# யான் ஓயா பாலத்திற்கு அருகிலிருந்து பெருந்தொகை ஆயுதங்கள் மீட்பு

(ஹொரவபொத்தான)

ஹொரவபொத்தானை, அளுத்ஓயா வீதியின் யான் ஓயா பாலத்திற்கு அருகிலிருந்து நேற்று முன்தினம் பெருந்தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




பையொன்றில் போடப்பட்ட நிலையில் சில ஆயுதங்கள் காணப்படுவதாக கெப்பிட்டி கொல்லாவ விஷேட பொலிஸ் அதிரடிப் படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இந் நிலையில் குறித்த இடத்திற்கு விரைந்த விசேட அதிரடிப்படையினர் நகரத்தை சுற்றி தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது பையொன்றிலிருந்து 56 துப்பாக்கி தோட்டாக்கள், டீ-56 எல்.எம்.ஜி தோட்டாக்கள், டி-56 துப்பாக்கியின் பாகங்கள் மற்றும் எல்.எம்.ஜி ரம்ஸ் எமோ பெல்ட் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மீட்கப்பட்ட ஆயுதங்கள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் கெப்பிட்டி கொல்லாவ நீதவான் நீதிமன்றத்தில் அறிக்கை சமர் ப்பிக்கப்படவுள்ளதாக ஹொரவ பொத்தானை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# வவுணதீவில் கொலை செய்யப்பட்ட பொலிஸாருக்குப் பதவியுயர்வு

(வவுணதீவு)

மட்டக்களப்பு, வவுணதீவுப் பிரதேசத்தில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த இருவருக்கும் கான்ஸ்டபிள் தரத்தில் இருந்து பொலிஸ் சார்ஜன்ட் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர ஆகியோர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்குச் சென்றிருந்தனர்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட பொலிஸ் குழுவொன்று மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வவுணதீவு, வலையிறவுப் பாலத்திற்கு அருகிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் இரவு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் நேற்று முன்தினம் அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பிரசன்ன மற்றும் தினேஸ் ஆகிய இரண்டு பொலிஸ் அலுவலர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பதவி விலகப் போவதாக ரணிலிடம் கூறிய மகிந்த!

(கொழும்பு)

பிரதமர் பதவியிலிருந்து விலகத் தயாராக இருப்பதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமரும் ஐக்கிய தேசிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் மகிந்த இது தொடர்பில் தெரிவித்துள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர், ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் நாடாளுமன்ற நூலகத்தில் திடீரென சந்தித்த சந்தர்ப்பத்தில் அவர், தான் இராஜினாமா செய்யவுள்ளதால் பிரதமர் பதவி ஏற்குமாறு ரணிலிடம் கூறியுள்ளார்.

எனினும், அவ்வாறு பதவி விலகத் தேவையில்லை, மைத்திரிபால சிறிசேன பதவியிலிருந்து நீக்கும் வரை தொடர்ந்து செயற்படுமாறும் பிரதமர் பதவியில் நியமித்த ஜனாதிபதியே அந்தப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க, மகிந்தவைச் சந்தித்த போது குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# சாதாரண தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

## பரீட்சைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட் சைக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன. நாடு முழுவதும் நாளை பரீட்சைகள் ஆரம்பமாகும்" என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பி பூஜித தெரி வித்தார்.

"கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 12 ஆம் திகதி நிறைவடைய வுள்ளது.

6 இலட்சத்து 56 ஆயிரத்து 641 பரீட்சார்த்திகள் இம்முறை பரீட்சையில் தோற்றவுள்ளனர். நாடு முழுவதும் 4 ஆயிரத்து 561 பரீட்சை நிலையங்களும், 541 பரீட்சை இணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பரீட்சை நடவடிக்கைகளுக்காக 47 ஆயிரம் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இரத்மலானை சிறப்புத் தேவையுடையோர் வித்தியா லயம் மற்றும் தங்கல்ல, மாத்தறை, சிலாபம், கொழும்பு மகசீன் சிறைச்சாலை போன்றவற்றில் சிறப்பு பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 13 கைதிகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இவர்களில் 12 பேர் வெலிக்கடை மற்றும் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைகளில் அமைக்கப்படவுள்ள மத்திய நிலையங்களில் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

மற்றுமொரு கைதி வட்டரெக்க சிறைச்சாலையில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையத்தில் தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்.

"பேராதனை போதனா வைத்தியசாலை, மஹர கம புற்றுநோய் வைத்திய சாலை போன்றவற்றிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன" என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பி பூஜித மேலும் தெரிவித்தார். (இ-7)

# 123 டெங்கு நோயாளர்கள் தெல்லிப்பழையில் இனங்காணல்

(யாழ்ப்பாணம்)

இவ் வருடம் ஜனவரி மாதத்திலிருந்து இதுவரை தமது பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் 123 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் தொடக்கம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது. இருப்பினும் நல்லூர் பிரதேச பகுதிகளில் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது குறைவான டெங்கு நோயாளர்களே இவ்வருடம் இனம் காணப்பட்டதாக பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவே இந்த ஆட்சி மாற்றம்

## வாசுதேவ நாணயக்கார விளக்கம்

(கொழும்பு)



எதிர்த்தரப்பினர் அரசாங்கத்தை முதலில் ஏற்றுக் கொண்டால் மாத்திரமே பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியும். தற்போது பாராளுமன்றம் எதிர்த்தரப்பினரது பொழுதைக் கழிக்கும் ஒரு இடமாகவே காணப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிர்த்தரப்பினரது ஆதரவு ஒருபோதும் தேவையில்லை. எங்களுக்குத் தேவையான விடயங்களை முறையாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வோம். இடைப்பட்ட காலத்தில் மீண்டும் ஒரு ஆட்சி மாற்றம் இடம்பெறாது எனவும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தில் பாரிய குறைப்பாடுகள் காணப்பட்டன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை இடைப்பட்ட காலத்தில் நிறைவேற்றவே ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தினார்.

மகிந்த தலைமையிலான இடைப்பட்ட அரசாங்கமே தொடரும். இதில் எவ்வித மாற்றமும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கடலில் நீராடச் சென்ற சிறுவர்கள் உயிரிழப்பு

(திருமலை)

திருகோணமலை மாபிள் கடலில் நேற்று முன்தினம் மாலை நீராடச் சென்ற சிறுவர்கள் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறுவர்கள் 13 மற்றும் 15 வயதுடையவர்கள் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த சிறுவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் அவை உறவினர்களிடம் கையளிக்கப்படும் என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அரசாங்கத்தில் எந்த நெருக்கடியுமில்லை

## கெஹலிய கூறுகிறார்

(கொழும்பு)



அரசாங்கத்தில் எந்த நெருக்கடியுமில்லை எனவும் பிரதமர் செயலகம் உட்பட அமைச்சுக்கள் அனைத்தும் முறையாகச் செயற்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அரசியலமைப்பையோ நிலையியற்கட்டளையையோ மதிக்காமல் செயற்படும் சபாநாயகராலேயே நெருக்கடிகள் உருவாகியுள்ளன. காகிதத் துண்டுக்கு மதிப்பளித்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை அனுமதிப்பது வெட்கக்கேடான விடயமாகும் என்றும் அவர் தெரிவித்தார். ஆளும் கட்சி ஏற்பாடு செய்திருந்த விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது. அமைச்சர்கள் எஸ்.பி. திஸாநாயக்க, கெஹலிய ரம்புக்வெல, எஸ்.எம்.சந்திரசேன ஆகியோர் இம்மாநாட்டில் விளக்கமளித்தனர்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இங்கு மேலும் தெரிவித்ததாவது. அரசாங்கத்தில் எந்த நெருக்கடியும் கிடையாது பிரதமர் செயலகம் செயற்படுகிறது. நிதியமைச்சு உட்பட அனைத்து அமைச்சுக்களும் செயற்படுகின்றன. நெல்லுக்கான நிர்ணய கொள்வனவு விலை 41 ரூபாவிலிருந்து 45 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் அரசாங்கம் எவ்வித தடையுமின்றி செயற்படுகின்றது.

பாராளுமன்றத்தை ஸ்ரீ கொத்தாவாக்கி செயற்படுவதே பிரச்சினையாகியுள்ளது. சபாநாயகரின் செயற்பாடு தவறானது. இதனால் தற்போது இடம்பெறுவது போன்று பாராளுமன்றத்தை கொண்டு செல்ல முடியாது. பாராளுமன்றத்தின் தற்போதைய அனைத்து செயற்பாடுகளும் சட்டத்துக்கு முரணானது. நிலையியற் கட்டளைகளுக்கு எதிராகவே செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

ஜனாதிபதியால் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டு அமைச்சரவையும் செயற்பட்டு வருகிறது. அதேவேளை ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இடைக்காலத் தடை முடிவுறுவதற்கு இன்னும் 10 நாட்களே உள்ளன. பாராளுமன்றம் செயற்படுவது தவறல்ல. இந்தப் பாராளுமன்றத்தை சபாநாயகர் கூட்டிய முறை தவறானது. அரசியலமைப்பில் இதற்கான விதிகள் தெளிவாகவுள்ளன.

14 ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கூட்டியது ஜனாதிபதியே. அன்றைய தினத்தில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் விசேட உரையும் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதுமே ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தில் நெருக்கடியை ஏற்படுத்தியது சபாநாயகரே.

நாட்டின் அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற்கட்டளைக்கிணங்க ஜனாதிபதி செயற்பட்டுள்ளார். இத்தகைய நிலையில் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆளும்கட்சி கொண்டு வராததேன்? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பியபோது அதற்குப் பதிலளித்த அமைச்சர்,

பாராளுமன்றம் முறையாக நடக்குமானால் அங்கு காட்டுச் சட்டமன்றி நடைமுறைச்சட்டம் பின்பற்றப்படுமானால் நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரத் தயார். சிறு காகிதத் துண்டு ஒன்றின் மூலம் நாட்டின் பிரதமரை பதவி நீக்குமாறு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுகிறது. எந்த வெட்கமுமில்லாமல் சிறு காகிதத்துண்டுக்கு சபாநாயகர் இணங்குகின்றார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 20 பேர் கையெழுத்திட வேண்டும். அது முறைப்படியானது என்பதை பாராளுமன்ற செயலாளர் நாயகம் சபாநாயகருக்கு உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும். ஒழுங்குப்பத்திரத்தில் அது உள்ளீர்க்கப்படுவதுடன் ஐந்து நாட்கள் அதற்கு காலம் வழங்கப்பட வேண்டும் அவ்வாறு எதுவும் முறையாக இடம்பெறவில்லை. அதனால் அது செல்லுபடியற்றதாகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கருணா அமைதியாக இருக்க வேண்டும்

# நான் பீல்ட் மார்ஷல் என்பதை மறந்துவிட வேண்டாம்

## சரத் பொன்சேகா பகிரங்க எச்சரிக்கை

(கொழும்பு)



முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனை (கருணா) எச்சரிக்கும் வகையில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கருத்து வெளியிட்டுள்ளார்.

நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தாத வகையில் கருணா அமைதியாக இருக்க வேண்டும். இல்லையேல் அடக்கி வைக்க நேரிடும். நான் பீல்ட் மார்ஷல் என்பதை மறந்து விட வேண்டாம் என பொன்சேகா எச்சரித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுவதாகவும், தான் யார் என்பது தெரியாமல் விளையாடுவதாக கருணா கருத்து வெளியிட்டிருந்தார்.

கருணா தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த தகவலை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் மட்டக்களப்பில் பணியில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸார் நேற்று முன்தினம் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

இந்த மரணத்தின் பின்னணியில் கருணா இருப்பதாக நாடாளுமன்றதில்வைத்து, நளின் பண்டார குற்றம் சாட்டியிருந்தார். இந்நிலையில் கருணாவை கடுமையாக எச்சரிக்கும் வகையில் பொன்சேகா கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)



நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான தென்மராட்சி இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையில் ஒரு தொகுதி நூல்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலைகள் மற்றும் நூலகங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வழிகாட்டல் புத்தகங்களும், சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகம் மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி நூலகத்திற்கான நூல்கள் ஆகியன முதற்கட்டமாக வழங்கப்பட்டன. (படங்கள்:- சுபேசன்)

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்ட களத்தில் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள்

வவுனியாவில் கடந்த 648 நாட்களாக தொடர்ந்து சுழற்சி முறையில் போராட்டம் மேற்கொண்டு வரும் காணாமல்போன உறவினர்களின் போராட்ட களத்திற்கு நேற்று முன்தினம் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் விஜயம்மேற்கொண்டு காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடர்பாகவும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டதாக தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள ஜேர்மன் நாட்டு ஆண் ,பெண் இரு ஊடகவியலாளர்களே வவுனியா போராட்ட களத்திற்குச் சென்றுள்ளனர். கடந்த ஒருவருடத்திற்கு மேலாக தமது போராட்டங்களின் போது வெளிநாட்டுத்தலையீட்டையே கோரி போராட்டம் மேற்கொண்டு வந்த உறவினர்களைச் சந்தித்து அவர்களின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட தொடக்கம் இன்றுவரையிலும் நடைபெற்றவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் புகைப்படம்குரல்என்பன ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியல் மாற்றம் புதிய பிரதமர் வருகை என்பனவும் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட வழக்கில் முதன்மை சந்தேக நபரான பாதுகாப்பு படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில் அது தொடர்பாகவும் காணாமலாக்கப்பட்ட உறவினர்களிடம் கேள்வி எழுப்பிய வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் இக்கைது வெளிநாட்டு தலையீட்டை தடுக்கும் நடவடிக்கையே என்று தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் இணைப்பாளர் கே. ராஜ்குமார் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

## உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு வாகன விழிப்புணர்வு பேரணி







உலக எயிட்ஸ்தினம் மார்கழி மாதம் முதலாம் திகதி சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வாகன விழிப்புணர்வு பேரணி ஒன்று நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் வவுனியா மாவட்ட பாலியல் நோய் தடுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் கு.சந்திரகுமார் தலைமையில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஹனீபா விழிப்புணர்வு பேரணியை ஆரம்பித்து வைத்தார்.

வவுனியா மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் . சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், வவுனியா போக்குவரத்து பொலிஸாரின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலைக்கு முன்பாக ஆரம்பமான வாகன விழிப்புணர்வு பேரணியானது மன்னார் வீதியூடாக நகர்ந்து புகையிரத நிலைய வீதியூடாக வவுனியா மணிக்கூட்டு சந்தியை வந்தடைந்து பஜார் வீதியூடாக ஹொரவப்பொத்தானை வீதியூடாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையை சென்றடைந்தது. (2-281)

## வவு.தமிழ் மத்திய மகா வித்திக்கு துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் அமைப்பு

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட துவிச்சக்கரவண்டி தரிப்பிடமானது பாடசாலையின் அதிபர் தா.அமிர்தலிங்கம் முன்னிலையில் கல்லூரியின் முன்னாள் அதிபர் தர்மாம்பிகை சிவஞானத்தினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டு மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டது.

சுமார் 400 இற்கு மேற்பட்ட துவிச்சக்கரவண்டிகளை எவ்வித இடையூறுமின்றி தரித்து நிறுத்தக் கூடிய வகையில் சுமார் 38 இலட்சம் ரூபா பெறுமதியான இத் துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் அமைக்கப் பட்டுள்ளது. (2-281)

வன்னி வலம்

## கிளிநொச்சி பொதுச் சந்தையினுள்

## வெள்ளநீர் தேங்கும் பகுதிகள் கிரவல் போடப்பட்டு சீர் செய்யப்படுகின்றன

### வேலைகள் நேற்று ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தைக்குள் மழை நீர் ஆங்காங்கே தேங்கி நிற்பது கரைச்சி பிரதேச சபையினால் அவதானிக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் அப்பகுதிகளுக்குக் கிரவல் மண் போடப்பட்டு சீர் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கரைச்சி பிரதேசசபை செயலாளர் க.கம்சநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது ஏற்கனவே குறித்த சந்தைப்பகுதியின் விடயங்கள் கரைச்சிப் பிரதேச சபையினால் அவதானிக்கப்பட்டு ஒவ்வொரு விடயங்களுக்கும் மதிப்பீடுகள் செய்யப்பட்டு வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக சந்தையின் இரு கட்டடங்களின் தொகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்பது சபையினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனை சீர் செய்வதற்கு உகந்த காலநிலை காணப்படின் குறித்த பகுதியை கொங்கிறீட் இடுவதன் மூலம் சீர் செய்யப்படும். இவ்வாறு படிப்படியாக அங்குள்ள நிலைமைகளை மேம்படுத்த பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (2)

### தகுந்த ஆதாரம்காட்டி ஆபரணத்தை பெற்றுக்கொள்க!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் 31.10.2018 புதன்கிழமை கரைச்சி பிரதேச செயலக வளாகத்தில் பெறுமதிமிக்க தங்க ஆபரணம் ஒன்று எமது செயலக உத்தியோகத்தர்களால் கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் 31.12.2018 ஆம் திகதிக்கு முன்னர் கரைச்சி பிரதேச செயலகத்தில் தகுந்த ஆதாரத்தை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு கரைச்சி பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.(2)

## வவுனியா வர்த்தக நிலையத்தில் தீ;

## பெறுமதியான உபகரணங்கள் எரிந்து நாசமாகின

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் கண்டி வீதியிலுள்ள எலக்ரோனிக் சுப்பர்மார்க்கட்டில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக வர்த்தக நிலையத்தின் நிலக்கீழ் அறையில் களஞ்சியப்படுத்தப்பட்ட பெருமளவு மின்சார உபகரணங்கள். சொசுகு கதிரைகள். பிளாஸ்டிக்கதிரைகள் என பல கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள் எரிந்து போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

குறித்த எலக்ரோனிக் சுப்பர் மார்க்கட்டில் நேற்று முன்தினம் இரவு வர்த்தக நிலையத்தை மூடிவிட்டுச் சென்றுள்ள உரிமையாளர் நேற்றுக்காலை 8.30 மணியளவில் வர்த்தக நிலையத்தை திறக்கச் சென்றபோது வர்த்தக நிலையத்தில் வழமைக்கு மாறான நிலைமைகள் காணப்பட்டுள்ளதை அவதானித்துள்ளதுடன் எரிந்தும் காணப்பட்டுள்ளது. இது குறித்து பொலிஸார் மற்றும் நகர சபை. வர்த்தகர் சங்கத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற தீயணைப்புப் படையினர், நகரசபைஉறுப்பினர்கள்,பொலிஸார், வர்த்தக சங்க உறுப்பினர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் வர்த்தக நிலையத்திற்குள் சென்று பார்வையிட்டபோது நிலக்கீழ் அறையிலிருந்த அனைத்துப் பொருட்களும் எரிந்து கருகிய நிலையில் காணப்பட்டது. குறித்த வர்த்தக நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு மின் ஒழுக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று மாடிகளைக் கொண்ட குறித்த வர்த்தக நிலையத்தில் நிலக்கீழ் அறையிலேயே மின் ஒழுக்கு ஏற்பட்டுள்ளதுடன் மின் இணைப்புக்கள் அனைத்தும் எரிந்த நிலையில் காணப்பட்டுள்ளன.(2-281)

## பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்த பண்ணை அமைப்பு

### முதல் கட்ட வேலைகள் நிறைவு



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கூழாமுறிப்பு பகுதியில் போரால் பாதிப்புக்களுக்குள்ளான பகுதியில் அல்லலுறும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான ஒருங்கிணைந்த பண்ணை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

போரால் பாதிப்புக்களுக்குள்ளான பகுதியில் அல்லலுறும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ஊடாக முல்லைத்தீவில் உள்ள சப்தமி பெண்கள் அமைப்புக்கு கனடா செந்தில்குமரன் நிவாரண அமைப்பினுடன் ஏற்படுத்தி விடப்பட்ட தொடர்பின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கூழாமுறிப்பு பகுதியில் இரண்டரை ஏக்கர் காணியை பெற்றுக்கொண்ட சப்தமி பெண்கள் அமைப்பு அதில் கனடா செந்தில்குமரன் நிவாரண அமைப்பின் பத்து இலட்சத்து இருபத்தாறாயிரத்து ஐநூறு ரூபா செலவில்ஒருங்கிணைந்த பண்ணை ஒன்று அமைப்பதற்கான முதற்கட்ட வேலைகள் நிறைவு செய்யப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தை கனடா செந்தில்குமரன் நேற்றையதினம் குறித்த பகுதிக்கு வருகைதந்து சப்தமி பெண்கள் அமைப்புக்கு உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா. புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சத்தியசீலன். சப்தமி பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

## பாலிநகரில் வாள்கள், பொல்லுகளுடன் கடைகளுக்குள் இளைஞர்குழு அடாவடி

### இரவு வேளைகளில் மக்கள் அச்சத்தில்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாலிநகர் பகுதியில் இளைஞர்குழு ஒன்று அடாவடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாலிநகர் பகுதியில் உள்ள மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கடைத் தொகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் இரவு வேளையில் வரும் இளைஞர் குழுக்கள் வாள்கள்.பொல்லுகள் சகிதம் வருகை தந்து கடைகளுக்கும் கடைகளிலுள்ள பொருட்களுக்கும் சேதம் விளைவித்து வருகின்றனர்.

இரவு வேளைகளில் மதுபோதையில் இளைஞர் குழுக்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதோடு பொலிஸாரிடமும் முறையிடப்பட்டுமுள்ளது. குறித்த இளைஞர் குழுக்களின் அடாவடியை கட்டுப்படுத்துமாறு வர்த்தகர்கள். பொதுமக்கள் ஆகியோர் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281)

எல்லா மக்களையும் சில நாட்களுக்கும், சில மக்களை எல்லா நாட்களுக்கும் முட்டாளாக ஆக்க முடியும்.
~ ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வவுணதீவுச் சம்பவம் சாட்டாகிவிடக்கூடாது

தமிழகத்தைச் சேர்ந்த புலவர் இரா.சண்முகவடிவேல் கூறிய உண்மைக் கதை இது.

தமிழ்நாட்டில் உள்ள ஓர் ஊரில் இரவு வேளை விசமிகள் சிலரால் சில வீடுகள் எரியூட்டப்பட்டன.

வீடுகள் எரிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து பொலிஸார் இரவோடு இரவாகத் தேடுதல் நடத்தினர்.

அந்த ஊரில் உள்ள பஸ் நிலையத்துக்கு வந்தனர். அங்கு நடுத்தர வயதுடைய ஒருவர் உறங்கிக் கொண்டிருந்தார்.

பொலிஸார் அவரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

அந்த நபரைப் பார்த்து நீ தானே வீடுகளை எரித்தாய் என்று பொலிஸார் அதட்டினர்.

எதுவும் அறியாத அந்த நபர் ஐயா! நான் இன்னொரு ஊருக்குப் போக வேண்டியவன்.

கடைசி பஸ்ஸைத் தவறவிட்டு விட்டேன். அதனால்தான் பஸ் நிலையத்தில் தங்கினேன் என்றான்.

அவன் கூறியதைச் செவிமடுத்த பொலிஸார் அட! இது எங்களுக்கும் தெரியும். ஆனால் வீடு எரித்தவனைக் கண்டுபிடிக்கும் வரைக்கும் யாரையாவது நாம் கைது செய்ய வேண்டாமா என்ன?

அதனால் வீடெரித்தவன் அகப்படும்வரை நீ உள்ளே இரு என்றனர் பொலிஸார்.

இந்தக் கதைக்குள் நகைச்சுவை இருந்தாலும் அதற்குள் இருக்கக்கூடிய உண்மை அப்பாவிகள் தண்டிக்கப்படுகின்ற அநியாயம் நடந்தேறுகிறது என்பதுதான்.

ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டனை பெற்றுவிடக்கூடாது என்பதுதான் நீதித்துறையின் தாரக மந்திரம்.

என்ன செய்வது, எத்தனையோ அப்பாவிகள் தண்டனை பெற; குற்றவாளிகள் தப்பித்துக் கொள்கின்ற சம்பவங்கள் நம் மண்ணிலும் தாராளமாக நடக்கின்றன என்பதை மட்டும் இவ்விடத்தில் கூறிக் கொள்கின்றோம்.

இவை ஒருபுறமிருக்க, நேற்று முன்தினம் மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியில் இரண்டு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் நாடு முழுவதிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சூட்டுச் சம்பவங்கள் அறவே இல்லை என்ற நிம்மதியில் நாடு இருந்தவேளை இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது அதிர்ச்சிக்குரியது மட்டுமன்றி ஆய்வுக்குரியதாகும்.

மட்டக்களப்பு வவுணதீவில் இரண்டு பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டனர் என்பதற்காக குற்றமற்றவர்களைக் கைது செய்வதென்பது அச்சநிலையை மேலும் வலுப்படுத்துவதுடன் உண்மையான குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதற்கும் குற்றங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கும் வாய்ப்பாக அமையும்.

எனவே இரண்டு பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்பதற்காக முன்னாள் போராளிகளைக் கைது செய்கின்ற சம்பவங்கள் நடக்குமாயின் அதுபெரும் அநீதியாகும்.

ஆக, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அதனூடு அச்சமற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவது பொலிஸாரின் தார்மிகக் கடமையாக இருக்கும்

# தமிழ் மக்களின் நலன்கள், உரிமைகள் பற்றி இரகசியமாக பேச வேண்டிய அவசியமில்லை

## சுரேஸ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

எந்தவிதமான நிபந்தனையும் இன்றி ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்கு சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் தயாராக இருக்கின்றார்கள் எனத் தெரிவித்த ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்களின் நலன்கள், உரிமைகள் பற்றிப் பேசுவதாக இருந்தால் அது இரகசியமான பேச்சுக்களாக இருகக வேண்டுமென்ற எந்த அவசியமும்கிடையாது. மாறாக அவர்களுக்கான சலுகைகளைப் பெறவே இரகசியப் பேச்சுவார்த்தை நடத்த முடியும் எனவும்தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கட்டப்பிராய் சந்தியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு தாங்கள் 14 பேரும் ஆதரவு தெரிவிப்பதாக குறிப்பிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

அதன் பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு 113 இற்கு மேற்பட்ட பெரும்பான்மை அவர்களுக்கு இருக்கிறதென்றும் இந்தக கடிதம் மூலமாக சம்பந்தன் உறுதிப்படுத்தியிருக்கிறார். ஆனால் இது தொடர்பாக நாங்கள் சில விடயங்கள் பேச இருக்கின்றோம்.

அதாவது ஆரம்பத்தில் இருந்து இந்த நாட்டில்ஜனநாயகம் நிலைத்திருக்க வேண்டும். அரசியல் சாசனத்தின் பிரகாரம் ஆட்சி அமைக்க வேண்டும். ஒரு சதியின் மூலம் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து விலக்கி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தமை தவறு என்று கூறி வந்த சம்பந்தன் அதற்கு எதிராக தாங்கள் நீதிமன்றம் சென்று வழக்காடுவதற்காக 14 பேருடைய சத்தியக் கடதாசிகளையும் கேட்டுப் பெற்றுக் கொண்டிருந்தார்.

அந்தச் சத்தியக் கடதாசியில் கையெழுத்து வைப்பதில் கூட பல உட்கட்சி முரண்பாடுகள் ஏற்பட்டிருந்ததையும் நாங்கள் பார்க்கக் கூடியதாக இருந்தது. அப்பொழுது கூட என்ன சொல்லப்பட்டது என்றால் இதில் நாங்கள் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கும் ஒரு அரசியல் சாசனத்தின் அடிப்படையில் நாட்டை நிர்வகிக்கின்ற நிலைமையை உருவாக்குவதற்கும் மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியில் அமர்த்தியமை- பிரதமராக்கியமை தவறு என்ற அடிப்படையில்தான் நாங்கள் நீதிமன்றம் செல்ல இருக்கின்றோம். அதற்காகத் தான் உங்களது சத்தியக் கடதாசி எங்களுக்குத் தேவை என்று கூறப்பட்டது.

ஆனால் யார் ஆட்சி அமைக்கின்றார்கள் என்பது எங்களுக்குப் பிரச்சினையில்லை என்று இதுவரையில் கூறி வந்த சம்பந்தன் இப்போது மிகக் கடுமையான நிலைப்பாட்டை எடுத்து ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அல்லது ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைப்பதற்கு தங்களது ஆதரவு இருப்பதாக தனது பாராளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்தைப் பெற்று ஜனாதிபதிக்கு கடிதத்தை அனுப்பியிருக்கின்றார்.

தமிழ் மக்களை ஏமாற்றும் தனமான ஊடகச் செய்திகள் ஊடாக தாங்கள் என்ன செய்கின்றோம் ஏது செய்கின்றோம் என்பதை பல்வேறுபட்ட ஊடகங்கள் ஊடாக மாறி மாறி பல்வேறுபட்ட கருத்துக்களை முரண்பட்ட வகையில் கூறி வந்தவர். அதில் தாங்கள் எந்தவொரு கட்சிக்கும் ஆதரவு இல்லை என்று திரும்பத் திரும்பச் சொல்லியும் வந்தார்.

இதன்போதும் கூட சத்தியக் கடதாசிக்கு கூட தாங்கள் கையெழுத்து வைக்க மாட்டோம் என்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சொல்லியும் கூட இல்லை இது ஆட்சியமைப்பதற்கான சத்தியக் கடதாசி அல்ல இது நாங்கள் நீதிமன்றம் செல்வதற்கான சத்தியக் கடதாசி என்று கூறியவர்கள். அவ்வாறு நாங்கள் எந்தக் கட்சிக்கும் ஆதரவளிக்க மாட்டோம் என்றும் கூறியவர்கள் எந்த விதமான முன் நிபந்தனைகளும் இல்லாமல் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் அமர்த்துவதற்கான ஒரு முடிவை எடுத்து அதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்தையும் பெற்று கடிதம் அனுப்பியிருக்கின்றார்கள்.

அதனால்இப்பொழுது வெறுமனே மக்கள் மாத்திரம் ஏமாற்றப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள். இதற்கு முனபாக பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள். இதற்கு முன்பாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாறுபட்ட கருத்தைச் சொல்லி வந்த சம்பந்தன் இப்போது அதே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்துவதற்கு என்று எல்லாருடைய கையெழுத்தையும் வாங்கியிருக்கின்றார்.

ஆனால் அதே சமயம் இந்தக் கையெழுத்து வைத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏனோ தாங்கள் ஐக்கியத்தைக் காப்பாற்றுவதற்காக கையெழுத்தை வைக்கின்றோம் என்று கூறி வருவது அது ஒட்டுமொத்தமான தமிழ் மக்களையும் ஏமாற்றுகின்ற ஒரு செயற்பாடு ஆகும். ஆகவே கையெழுத்து வைப்பதற்கு உங்களுக்கு விருப்பம் இல்லாவிட்டால் நீங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்ற அடிப்படையில் இதில் கையெழுத்து வைப்பது தவறானது. ஆகவே நாங்கள் வைக்க முடியாது என்பதை சம்பந்தனுக்குச் சொல்ல முடியும். கையெழுத்து வைக்க வேண்டுமென்ற எந்த அவசியமும் கிடையாது.

ஆனால்அவ்வாறு எதனையும் செய்யாது அவர்கள் கூறியது போன்று எல்லாவற்றையும் செய்து விட்டு குற்றத்தை சம்பந்தன் மீது சுமத்திவிட்டு ஐக்கியத்தைக் காப்பாற்றுவதற்காக நான் கையெழுத்து வைக்கிறேன் என்று சொன்னால் ஐக்கியத்தைக் காப்பாற்றுவதற்காக அனைத்து இடங்களிலும் கையெழுத்து வைப்பதற்கு சில பேர் தயாராக இருக்கிறார்களா என்ற கேள்வி எழுகின்றது. அத்தோடு ஐக்கியம் என்ற பெயரிலகையெழுத்துவைப்பார்களாக இருந்தால் அது தங்களையும் ஏமாற்றி மக்களையும் ஏமாற்றுகின்ற செயற்பாடாகத்தான் நாங்கள் அதனைக் கருதுகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது தமிழரசுக் கட்சியோ ஒரு முடிவை எடுத்துச் செயற்படுத்துவது தவறானது அல்ல. அது என்ன முடிவாகவும் இருக்கலாம். அது விமர்சனத்திற்கு உட்படலாம், உட்படாமலும் போகலாம். ஆனால் தெளிவான ஒரு முடிவை அவர்கள் மக்களுக்கு ஆரம்பத்தில் இருந்து அறிவித்திருக்க வேண்டும். ஆனால் நாளாந்தம் தங்களது முடிவை மாற்றுவது மாததிரமல்ல மக்களுக்கும் வித்தியாசமாக பிழையான கருத்துக்களைக் கூறிக் கொண்டு வருவது ஏற்புடையதும் அல்ல.

ஆரம்பத்தில் இருந்து தமிழ் மக்கள் வைக்கின்ற குற்றச்சாட்டு என்னவென்றால் இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்கின்ற ஒரு தொழிலை மாத்திரம் தான் செய்கின்றார்களே தவிர தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு உருப்படியான பேச்சுவார்த்தைகளைச் செய்யவில்லை என்பதாகும். இன்றும் கூட ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கு முன்பாக அவர்களுடன் பேசி மக்களின் பிரச்சினைகள் பலவற்றையும் பேசி என்னென்ன விடயங்களைச் செய்யலாம் என்று உறுதிமொழிகளைப் பெற்றுக் கொள்ளாமல் பாராளுமன்ற உறுப்பினர்களிடம்கையெழுத்தை வாங்குவது என்பது எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் ஐக்கிய தேசியக கட்சியை ஆட்சி அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கு சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் தயாராக இருக்கின்றார்கள் என்பதை மிக வெளிப்படையாகக் காட்டுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பாலர் தினவிழா

(கரணவாய்)

வல்வை விக்னேஸ்வரா பாலர் பாடசாலையின் பாலர் தின விழாவும் வல்வெட்டித்துறையின் பட்டபோட்டித் திருவிழாவின் அறிமுக நிகழ்வும் இன்று 2ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் யாழ்.வல்வை சிவகுரு வித்தியாசாலை தையல் பாகர் அரங்கில் நடைபெறும். (இ-5)

## தற்போதைய அரசாங்கம் 2020 வரை செயற்படும் – எஸ்.பி.

தேர்தலை நடத்துவதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கிடைக்காவிட்டால் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பெரும்பான்மை உறுப்பினர்களை கொண்ட தற்போதைய பாராளுமன்றம் தொடர்ந்து தனது பணிகளை முன்னெடுக்கும் என்று பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீ அபிநாவாராம விகாரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் அமைச்சர் உரையாற்றினார். இந்த நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது.

தேர்தலை நடத்துவதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கிடைக்காவிட்டால் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பெரும்பான்மை உறுப்பினர்களை கொண்ட தற்போதைய பாராளுமன்றம் 2020ம் ஆண்டு வரையில் தனது பணிகளை முன்னெடுக்கும்.

அதன்பின்னர் தேர்தலை எதிர்கொண்டு வெற்றி வாகை. சூடப்படும் என்றும் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார். (ம-3)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

16
2018

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10-வரை)

பெண்ணே! நீயும் ஒருசெய்திக்கு கதையாகமல். நீதிமன்றத்தில் ஒரு வழக்காகாமல் இன்றே கற்றுக்கொள். பெண்களுக்கெதிரான வன்முறைகளிற்கெதிராக முகம்கொடுப்பதுஎப்படிஎன்று.


JSAC

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

யாழ் மாவட்ட கலாசார அதிகாரசபையின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பினுடைய அதிர்ஷ்டசாலி தெரிவு குலுக்கல் பிற்போடப்பட்டுள்ளது.

நேற்று முதலாம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவிருந்த மேற்குறித்த குலுக்கல் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர் வரும் டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும் என யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபா திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (ம-9)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு நவீன உணர்வகற்றும் இயந்திரம்



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு நவீன உணர்வகற்றும் இயந்திரம் ஒன்று மத்திய சுகாதார அமைச்சினால் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சையின் போது நோயாளர்களை மயக்க நிலையில் பேணுவதற்கு உதவும் நவீன உணர்வகற்றும் இயந்திரம் (Anesthesia workstation) ஒன்று கொழும்பு சுகாதார அமைச்சினால் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


கிளிநொச்சி வைத்தியசாலையின் நீண்டகால அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக இந்த உணர்வ கற்றும் இயந்திரம் இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட இருபது இலட்சம் ரூபா பெறுமதியான இந்த நவீன இயந்திரத்தின் உதவியுடன் சத்திரசிகிச்சைகளின்போது மேற்கொள்ளப்படும் உணர்விழப்புச் சிகிச்சை வசதிகள் மேலும் மேம்படுத்தப்படும் எனத் தெரியவருகிறது.

அண்மையில் புதிதாகக் கடமையைப் பொறுப்பேற்ற கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளர் மத்திய சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் வைத்தியசாலையின் அத்தியாவசிய அவசர தேவைகள் தொடர்பாக மேற்கொண்ட கலந்துரையாடலுக்கு அமைய தொடர்ந்து இந்த இயந்திரத்தைத் தற்போது அவசரமாக அனுப்பி வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. (2-312)

# முல்லைத்தீவு பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு தொல்பொருள் திணைக்கள சட்டஒழுங்கு விரிவுரை

## ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு தொல்பொருள் திணைக்கள சட்ட ஒழுங்கு சம்பந்தமான விரிவுரை ஒன்று கடந்த 29 ஆம் திகதி ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் சட்ட ஒழுங்கு சம்பந்தமாகப் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த தொல்பொருளுடன் சம்பந்தப்பட்ட 85 பொலிஸ் அதிகாரிகளுக்கு தொல்பொருள் திணைக்களத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி றோகண காரியவசம் கலந்து கொண்டு விரிவுரைகளை நடத்தியுள்ளார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஐ. குணரத்ன, மாவட்ட மக்கள் பொலிஸ் பிரிவு அதிகாரி எஸ்.ஐ.அனுர உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலே அதிகளவு தொல்பொருள் இடங்கள் தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகளை முனைப்புடன் செயற்படுத்த பொலிஸாருக்குத் தொல்பொருள் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கை குறித்தான விரிவுரைகள் வழங்கப்பட்டுள்ளமை தொல்பொருள்திணைக்களம் தனது நடவடிக்கையினை முனைப்புடன் செயற்படுத்தவுள்ளமை போன்றவை இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது. (2-281)




# வவுனியா பழைய பேருந்து நிலையத்தை மீளவும் திறக்க வர்த்தக சங்கம் நடவடிக்கை

## நாளையதினம் கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

வவுனியாப் பழைய பேருந்து நிலையத்திற்கு சகல பேருந்துகளும் வந்து தமது சேவைகளை மேற்கொள்வதற்கு வடமாகாண ஆளுநருடன் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வவுனியா வர்த்தக சங்கத்தலைவர் எஸ்.சுஜன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வர்த்தக சங்கத்தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாப் பழைய பேருந்து நிலையத்தில் உள்ளூர், வெளியூர் பேருந்து சேவைகள் இடம்பெறாமையால் வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் இதற்கு சுமூகமான தீர்வு ஒன்றினை பெற்றுத்தருமாறு பொது அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச்சங்கம், பாடசாலைச் சமூகத்தினர் கடித மூலம் தெரியப்படுத்தியிருந்தனர்.

இக்கோரிக்கைக்கு அமைவாகவும் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களுக்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கும் வவுனியா வர்த்தகர் சங்கத்தின் முயற்சியினால் புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடத்தினூடாக வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு சகல பேருந்துகள் வந்து செல்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மீள்குடியேற்றம் புனர்வாழ்வு மற்றும் இந்து கலாசார அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவுடன் கடந்த 24 ஆம் திகதி வர்த்தகச் சங்கப்பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தோம்.

இதன்போது வவுனியா பேருந்து நிலையத்திலுள்ள நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாளை 3 ஆம் திகதி திங்கட்கிழமை வர்த்தகர் சங்கப்பிரதிநிதிகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஆகிய முற்தரப்பினருடன் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டு சுமூகமான தீர்வு ஒன்றினை பெற்றுத்தருவதாக மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

# விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி, கண்டாவளை, பூநகரி மற்றும் கரைச்சி பிரதேச செயலக பிரிவுகளில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான வரட்சி நிவாரணம் நேற்று முன்தினம் செயலக மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தெரிவு செய்யப்பட்டு நேற்று முன்தினம் பூநகரி, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகங்களுக்கான 2 ஆயிரத்து 400 பேருக்கான நிவாரணப் பொருட்கள் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதிகளினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பூநகரிப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கரியாலை, நாகபடுவான் ஆகிய கிராம பகுதிகளில் 71 கிராம சேவையாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட 520 பேருக்கான வரட்சி நிவாரணம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதிகளான, பூநகரி பிரதேச சபை உறுப்பினர் ஹபீர், இணைப்பாளர் பழனியாண்டி நந்தகுமார், வட்டார பிரதிநிதிகள், பிரதேச செயலாளர் ஆகியோர் இணைந்திருந்து நிவாரணப்பொருட்களை வழங்கியிருந்தனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஆயிரத்து 897 பேருக்கு விவசாய வரட்சி நிவாரணமும் அன்றையதினம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. பளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் விவசாய வரட்சி நிவாரணம் வழங்கும் நிகழ்வு செயலக மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. (2)

# வவுனியாவில் 9 மணி நேரம் நீர் விநியோகம் தடைப்படும்

(குருமன்காடு)

வவுனியாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை 9 மணி நேரம் நீர் விநியோகம் தடைப்படும் என தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் டி.விஜயபாலன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் உயர்ந்த மட்டத்தில் நீர் விநியோகிக்கும் வகையில் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புத் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றது.

இதன்காரணமாக இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாப் பிராந்தியத்திற்குட்பட்ட பகுதிகளில் நீர் விநியோகம் தடைப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், காலை 8 மணியில் இருந்து பிற்பகல் 5 மணி வரையிலான 9 மணிநேரம் நீர் விநியோகம் தடைப்படும்என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

## தென்னை மரங்களை வெட்ட முயன்ற

# இலங்கை மின்சாரசபை பணியாளர்கள் மக்களின் எதிர்ப்பையடுத்து வெளியேற்றம்

(மன்னார்)

மன்னார் சாந்திபுரம் கிராமம் ஊடாக இலங்கை மின்சார சபையினால் அதி உயர் மின் கம்பங்கள் நாட்டப்படுவதற்காக அக்கிராம வீடுகளில் உள்ள தென்னை மரங்களை நேற்று சனிக்கிழமை காலை முதல் வெட்டுவதற்கு இலங்கை மின்சார சபை பணியாளர்கள் நடவடிக்கை மேற்கொண்ட நிலையில், சாந்திபுரம் கிராம மக்களின் எதிர்ப்பை அடுத்து தென்னை மரம் வெட்டும் நடவடிக்கைகள் கைவிடப்பட்ட நிலையில், இலங்கை மின்சார சபையின் பணியாளர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

எனினும் குறித்த கிராமத்தில் உள்ள சில வீடுகளின் வீட்டு முற்றத்தில் காணப்பட்ட தென்னை மரங்கள் சிலவற்றை அங்கு சென்ற இலங்கை மின்சார சபையின் பணியாளர்கள் வெட்டியுள்ளதாகவும் அக்கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

வட பிராந்திய (யாழ்ப்பாணம்) மின்சார சபையினால் மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் கிராமத்தின் ஊடாக அதி உயர் மின்கம்பம் அமைக்க நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எனவே அப்பகுதியில் வீட்டு வளாகத்தினுள் காணப்படுகின்ற பயன் தருகின்ற தென்னை மரங்கள் அனைத்தையும் வெட்ட வேண்டும் என்று மின்சார சபை பொறியியலாளரினால் இக்கிராம மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

மேலும் 7 தினங்களுக்குள் வீட்டின் உரிமையாளர்கள் தென்னை மரங்களை வெட்டி அகற்றாது" விட்டால் இலங்கை மின்சார சபைப்பணியாளர்கள் அதனை அகற்றுவார்கள் எனத் தெரிவித்திருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக உடனடியாக சாந்திபுரம் கிராம மக்கள் மன்னார் பிரதேசச் செயலாளர் மற்றும் மன்னார் நகர சபையின் தலைவர் ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தனர்.

எனினும் கிராம மக்களின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் அவர்கள் தென்னை மரங்களை வெட்டாது அங்கிருந்து சென்றதாக அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நடவடிக்கைகளை ஒரு போதும் தாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என சாந்திபுரம் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இதற்கு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்னார் பிரதேச செயலாளர் மற்றும் மன்னார் நகர சபையின் தவிசாளர் ஆகியோர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சாந்திபுரம் கிராம மக்கள் மேலும் தெரிவித்தனர். (2-285)

## முச்சக்கரவண்டி...

முறைக்கு வருகிறது.

பெற்றோலின் விலை குறைக்கப்பட்டதை யடுத்து இந்த தீர்மானத்தை முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் எடுத்துள்ளது.

தற்போது கட்டணமானியில் ஆரம்பக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள 60 ரூபாய் என்ற வாடகை நிர்ணயம் 50 ரூபாயாகக் குறைக்கப்படுகிறது என அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை தனியார் பேருந்து சேவைகளின் கட்டணங்களைக் குறைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.(ம-3)

## முன்னாள் போரா...

தந்தையான இராசநாயகம் சர்வானந்தன் (வயது -48) என்பவரே சரணடைந்தார்.

தானாக குற்றத்தை ஒப்புக்கொண்டு அவர் நேற்று காலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவரிடம் வாக்குமூலம் பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னரே தகவல் வெளியிட முடியும். சந்தேக நபர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு சோதனைச்சாவடியில் பாதுகாப்புக் கடமையில் இருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன் தினம் அதிகாலை துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

காலியை சேர்ந்த நிரோஷன் இந்திக, கல்முனையை சேர்ந்த கணேஸ் தினேஸ் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். அவர்களைக் கட்டிப்போட்டுவிட்டு அவர்களிடமிருந்த இரண்டு ரி-56 துப்பாக்கிகளையும் பறித்து சூடு நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிகள் இரண்டும் மர்ம நபர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-312)

## பாராளுமன்றத்...

இந்தத் தகவலை ஐக்கிய முன்னணியின் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வெளியிட்டுள்ளார். அவர் தனது டுவீட்டரில் இதனைப் பதிவிட்டுள்ளார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக மீளவும் நியமிக்கமாட்டேன் என்று திட்டவட்டமாகத் தெரிவித்த ஜனாதிபதி. ஐக்கிய தேசிய முன்னணியில் வேறொரு நாடாளுமன்ற உறுப்பினரை பிரதமர் பதவிக்கு முன்மொழியுமாறும் கேட்டுக்கொண்டார். அதனால் ஜனாதிபதிக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையிலான சந்திப்பு இடைநிறுத்தப்பட்டது.

தற்போதைய அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் புதிய முன்மொழிவுகளுடன் ஐக்கிய தேசிய முன்னணி இன்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதியைச் சந்திக்கும் என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர் மனோ கணேசனும் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மகிந்தவுக்கு ஆத...

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டம் யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

மக்கள் ஆணைக்கு அனுமதி. மக்கள் பேரணி என்னும் தொனிப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

கொட்டும் மழையிலும் ஶ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் ஆதரவாளர்களால் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பிரதமருக்கான...

சாதகமாக பதிலளித்திருக்கவில்லை.

முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்குமிடையில் நடந்த கலந்துரையாடலில் ஐ.தே.முன்னணி பிரேரிக்கும் ஒருவரை பிரதமராக ஏற்றுக்கொள்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் கூறியிருந்தது.

இந்த நிலையில் ஐ.தே.கவின் பிரதமர் தெரிவு ரணில் விக்கிரமசிங்கதான் என கடிதம் மூலம் ஐ.தே.கவிலிருந்து கூட்டமைப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதி ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(ம-3)

## ஐ.தே.கவை கூட்...

தேசிய கூட்டமைப்பினரே வழிநடத்தி வருகின்றனர்.

இதனை வழிநடத்தும் பணிப்பாளர் நாயகமாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனே செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுமந்திரனின் வழிகாட்டுதலின் பேரிலேயே ஐக்கிய தேசிய முன்னணியின் செயற்பாடுகள் இடம்பெறுவதாக குறிப்பிட்டுள்ள அவர், நாடு எந்த திசையை நோக்கி செல்கின்றது என்பதை சிந்திக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை உருவாக்குவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பே முழு வீச்சுடன் செயற்படு வதாகவும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.(ம-3)

## பொதுமக்களுக்கு...

ஏற்படக்கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிரந்தர நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சேவைகள் பாதிப்படைவதற்கு இடமளிக்காதிருக்கும் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றுமாறு ஜனாதிபதி அனைத்து அரசாங்க அதிகாரிகளிடமும் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன் போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நான் அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்களை நியமித்திருப்பது அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்பவாகும்.

எனவே அந்த அனைத்து நியமனங்களும் சட்டபூர்வமானது என்பதுடன், அதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. நாட்டில் எத்தகைய அரசியல் நிலைமைகள் ஏற்பட்டாலும் தமது அமைச்சுக்களின் நடவடிக்கைகளை உரிய முறையில் நிறைவேற்றி, நாட்டின் அனைத்து துறைகளையும் உரிய முறையில் பேணுவது அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, வீடமைப்பு, சமூக நலன்புரி அமைச்சர் விமல் வீரவன்ச, வீடமைப்பு, சமூக நலன் புரி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்ஹ, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் நிமல் கொடவலகெதர ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-3)

## வடக்கு, கிழக்கு...

அவர், நாட்டின் சொத்துகளை பாதுகாக்கவும், வீழ்ச்சி அடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும், நாட்டில் சமஷ்டி ஆட்சி உருவாகுவதை தடுக்க, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை தடுக்கவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனரணிலை அகற்றி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கினார்.

எனவே இதனை பொறுப்பேற்காது இருந்திருந்தால் அடுத்த ஏழு, எட்டு மாதங்களில் பிரதமர் பதவி இலகுவாக கிடைத்திருக்கும். அதனை விட்டு தாய் நாட்டுக்காக அவர் இதனை பொறுப்பேற்றுள்ளார்.

தற்போது பாராளுமன்றத்திற்குள் சண்டியர்களும் வருகை தந்துள்ளனர். ஆகவே தற்போது நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் சட்டரீதியானதல்ல.

ஜனாதிபதியால் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டால் அதனை சபாநாயகர் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் சபாநாயகர் அதனை செய்ய தவறியுள்ளார் என தெரிவித்துள்ளார். (ம-3)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர் மைய றோட்டறக் கழகத்தினருடன் கருகம்பனை இந்து இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்தான நிகழ்வு இன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர் கள் அறிவித்துள்ளனர். (ம-9)

## மகிந்த 50 கோடி பேரம் பேசினார்

### சாந்தி சிறிஸ்கந்தராஜா

தமிழ் தரப்புக்களிடம் மண்டியிடும் நிலையில் தேசிய கட்சிகள் உள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

மேலும் மகிந்த 6 கோடி முதல் 50 கோடி வரை தன்னிடம் பேரம் பேசினார் எனவும் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், கூழாமுறிப்பு பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட பகுதியில் அல்லலுறும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கனடா செந்தில் குமரன் நிவாரண அமைப்பின் 1.026. 500 ரூபாய் செலவில் இரண்டரை ஏக்கர் காணியில் ஒருங்கிணைந்த பண்ணை ஒன்று அமைப்பதற்கான முதற்கட்ட வேலைகள் நிறைவு செய்யப்பட்டு கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளது. அங்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏனைய உறுப்பினர்களிடம் எவ்வளவு பேரம் பேசப்பட்டது என எனக்கு தெரியாது ஆனால் என்னிடம் 6 கோடி முதல் 50 கோடி வரை பேரம் பேசப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழ். போதனாவில் கடமை நேரத்தில் 'ஸ்மாட் போன்' பயன்படுத்த தடை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் தாதியர்கள், மருத்துவ உதவியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தில் அதிதிறன் அலைபேசியைப் (ஸ்மாட் போன்) பயன்படுத்த வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தடைவிதித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் உள்ளக சுற்றறிக்கை ஒன்றை அனைத்துப் பிரிவுகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். நேற்று டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இது நடைமுறைக்கு வந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணியாளர்கள் கடமை நேரத்தில் அலைபேசியைப் பயன்படுத்தக் கூடாது என்ற நடைமுறை ஏற்கெனவே உள்ளது. எனினும் அது சீராக நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறிப்பாக நோயாளர்கள் மத்தியில் அலைபேசிப் பயன்பாட்டுக்கு வைத்தியசாலைகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## ஐ.தே.கவினால் நீதிக்கான வாகனப் பேரணி முன்னெடுப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியினால் ஜனநாயகத்தை நிலைநிறுத்தும் நீதிக்கான வாகனப் பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற சம்பிரதாயத்தை பாதுகாப்பதற்காக பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சட்டத்தையும், மக்களின் இறைமையையும், பாதுகாத்து நாடாளுமன்றத்தை முன்னோக்கி கொண்டுசெல்வதற்காக கொழும்பில் ஆரம்பித்த இந்த நடவடிக்கை மகியங்கனையில் நிறைவடைய உள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் பலத்தின் ஊடாக முன்னோக்கி செல்வதற்கான நடவடிக்கையை எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேரணியை நேற்றைய தினம் காலி, மாத்தறையை ஊடாக தெய்வேந்திர முனை பகுதியில் நிறைவடைந்தது.

பின்னர் இன்றைய தினம் தங்காலை நகரில் மக்கள் பேரணியொன்று நடத்தப்பட்டு, பின்னர் வாகனப் பேரணி கதிர்காமம் ஆலயத்தை சென்றடையவுள்ளது.

இதையடுத்து, மொனராகலை ஊடாக மகியங்கனை ரஜமகா விகாரையில் பேரணி நிறைவடைய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

ஓம் ஶ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு அருகில்,
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக்குளத்திலும்...
(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்)
(திங்கள், செவ்வாய், - வவுனியா) (C-4569)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி: 01-12-2018
சீட்டிழுப்பு இலக்கம்: 896
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 6 7 2 5 3 9

தேசிய லொத்தர் சபை

### சுபிரி வாசனா

திகதி: 2018/12/01
சீட்டிழுப்பு இலக்கம்: 1382
எழுத்து: 06
வெற்றி இலக்கம்: 43 59 63 65 38 18

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி: 2018.12.01
சீட்டிழுப்பு இலக்கம்: 1960
ஆங்கில எழுத்து: D
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 07 12 39 63

தேசிய லொத்தர் சபை

### செவன

திகதி: 2018/12/01
சீட்டிழுப்பு இலக்கம்: 140
ஆங்கில எழுத்து: B
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 11 12 52 69

தேசிய லொத்தர் சபை

## "சொர்க்கம் திருமணசேவை"

அமெரிக்காவில் (USA) வசிக்கும் 29 வயதுடைய செவ்வாய் குற்றம் உள்ள பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம், கனடாவில் வசிக்கும் 32 வயதை உடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றோம்.

TP&Viber : 0016475043336
0014166661855, 0016475043336

(C-4578)

## புதிய ஆண்டிற்கான

இரண்டாம்மொழி, சிங்கள வகுப்புக்கள்...
தரம் 6,7,8,9 வகுப்புகளுக்கு அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
ஆரம்பம் 05.12.2018 புதன்கிழமை காலை 9.00 மணி.
இடம் :- 65, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம், (இலங்கை வேந்தன் மண்டபத்திற்கு அருகில்)

ஆசிரியர் : செ.லோகேஸ்வரன்

தொடர்பு : 077 214 0220, 077 990 6867

(6609)

இன்று
அகரம் கல்வி நிலையம்
(காங்கேயன் துறைச் சாலை)
மல்லாகம் கொக்குவில்

## புதிய கல்வியாண்டு - 2019

தமிழ், ஆங்கில மொழி மூலமான தரம் 6 தொடக்கம் 11 வரையான அனைத்து வகுப்புக்களும் ஆரம்பம்.

(6631)

## 02-12-2018 ஞாயிற்றுக்கிழமை

★ தரம் 9,10,11 ⟷ காலை 6.20 மணிக்கும்
★ தரம் 8 ⟷ பி.ப 1.00 மணிக்கும்
★ தரம் 6,7 ⟷ பி.ப 1.50 மணிக்கும்
ஆரம்பமாகின்றன.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

## SCIENCE Group Classes

435, கோவில் வீதி - நல்லூர்
(கந்தன் கருணை அருகாமை)

(6647)

### புதிய கல்வியாண்டு - 2019

தரம் 6 -11 வரையிலான English Medium / தமிழ்மொழிமூலமான வகுப்புக்கள்

ஆரம்பம் : 02.12.2019 – ஞாயிற்றுக்கிழமை
காலை 9.15 AM - 12.00 மணிவரை

தரம் – 06 இரண்டாவது புதிய பிரிவு 1.00 PM - 3.00 PM

A.சியாமளரூபன்
077 346 9395 / 077 944 4882

## ஆட்கள் தேவை

கணினி திருத்துநர்
சிசிரிவி பொருத்துநர்
பழகுபவர்கள் தேவை
Computer Technician 0779086737
CCTV Installer GUNA BEST PC
Trainee 522 Manipay Road Oddumadam Junction Jaffna.

## விற்பனைக்கு

பலாலி வீதி ஊரெழு மேற்கு NK மண்டபத்துக்கு அருகில் வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
0774402249

(6629)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

(C-4571)



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

## www.AusTamilMatrimony.com.au

ஆஸ்திரேலியா, இலங்கை மற்றும் உலக நாடுகளில் வாழும்தமிழ் மனமக்களை இணைக்கும்சேவை.



Register your profile today

Ph: +61 415 150 483

(6499)

## Science வகுப்புகள்

Science (தனி, குழு வகுப்புக்கள்)
Grade 6 - 11
வீடு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0764853866

(6599)

"ஆங்கில மொழிமூல கணிதபாட வகுப்புக்கள்"
தரம் 6 - 11, கல்வியாண்டு - 2019
38, ராஜவீதி, நல்லூர்.
(சட்டநாதர் கோயில் அருகாமை)
19, நாயன்மார் வீதி, நல்லூர்.
(மூத்தவிநாயகர் கோயில் அருகாமை)
தொடர்பு: 0778645971, 0774361728

(6622)

## தரம் 6 முதல் O/L வரையான கணிதபாட வகுப்புக்கள்

பல வருட அனுபவமுள்ள கொழும்பில் கல்வி கற்பித்த ஆசிரியரினால் வீடு வந்து தனியாகவோ, சிறு குழுவாகவோ மாதம் இரு பயிற்சிப் பரீட்சைகளுடன் Model Papers, Past Papers என்பவற்றினூடாக அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். கோண்டாவிலில் பிரத்தியேக, சிறிய குழு வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. தமிழ் மொழிமூல, ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் நடத்தப்படும்.

(6615) தொடர்பு: 077 577 6999

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION MONEY TRANSFER 070 330 5500 WESTERN UNION MONEY TRANSFER

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-4517)

# MIS ICT COLLEGE

Branch I : #74,Sabapathy Lane, Kokuvil, Jaffna
Branch II: Near Kondavil Junction 16 Years

திரு.இ.குமரன்-B.Sc.

(6623)

A/L ICT O/L ICT
Gr.10 ICT Gr.6-9 ICT

O/L வழைமையான நேரங்களில்

Gr.10 New batches
04/12/2018 Tuesday
11.00 (TM) and 12.00 (EM)

A/L ICT 2021 batch
23/12/2018 Sunday
5.00 pm

Tamil / English Medium

Call: 077 6577359 Web: www.misictcollege.com

## English classes, I.T classes

பெற்றோர்களே,

2019 ஆம் ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றவுள்ள உங்கள் பிள்ளைகளின் ஆங்கில, தகவல் தொழில்நுட்ப (I.C.T) அறிவு போதுமானதாக இல்லை என உணர்கிறீர்களா?

அவர்கள் ஒரே வருடத்தில் சிறந்த முறையில் பயின்று, O/L பரீட்சையில் உயர் சித்தி பெற வேண்டுமா?

- மாணவர்களுக்கு வசதியான நேரங்களில் வகுப்புகள்.
- சிறந்த விரிவுரையாளர், அர்ப்பணிப்பான சேவைகள்.
- உயர் சித்திக்கான பாடவிதானங்கள்.
- வகுப்புக்களையும் பாடங்களையும் சரியாக பின்பற்றும் மாணவர்கள் நிச்சயமான தேர்ச்சி (A) பெறுவார்கள் என்பது உத்தரவாதம்.
- தகவல் தொழில்நுட்ப பாடம் ஆங்கிலம், தமிழிலும் கற்பிக்கப்படும்.
- பரீட்சையை தொடர்ந்து Diploma in English சான்றிதழ் பயிற்சியை தொடரலாம்.

வகுப்புகள் 3 பிரிவுகளாக நடத்தப்படும்.
வகுப்புகள் வார இறுதி நாட்களில் மற்றும் விடுமுறை தினங்களில் மேலதிக வகுப்புகள்.
வாழ்க்கை முழுதும் பயன்பெற கூடிய பயிற்சிகள்

பதிவுகளுக்கு : British College of Higher Studies (B.C.H.S)

No.15, Sirambiyady lane,
Off Stanley Road, Jaffna.
0212224550
0761380212

(C-4573)

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன


## ஜார்ஜ்...

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் காலமானார். உடல் நலக் குறைவால் ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் நேற்று காலமானார். அவருக்கு வயது 94. இவர் அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதியாக பதவி வகித்தவர்.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜார்ஜ் டபிள்யூ புஷ்ஷின் தந்தையும் அந் நாட்டின் மற்றொரு ஜனாதிபதியுமான ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் அந் நாட்டின் ஜனாதிபதியாக கடந்த 1989 முதல் 1993ஆம் ஆண்டுவரைபொறுப்பு வகித்தவர். அதற்கு முன்னதாக 1981 முதல் 1989வரை 8 ஆண்டு காலம்துணைஜனாதிபதியாகவும் இவர் இருந்துள்ளார்.

இந் நிலையில் வயோதிகம் சார்ந்த காரணங்களால் வீட்டில் ஓய்வெடுத்து வந்த ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் நிமோனியா எனப்படும்கபவாதம்சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஆண்டு கடுமையான உடல் நலக் குறைவால் ஹூஸ்டன் நகரில் உள்ள மெத்தடிஸ்ட் மருத்துவமனையில் சுமார் 15 நாட்கள் சிகிச்சைபெற்ற அவர் ஓரளவுக்கு குணமடைந்து வீடு திரும்பினார். இந் நிலையில் ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் நேற்று காலமானது குறிப்பிடத்தக்கது. (ம)

## புலிகளின்...

புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம் பிரதேசத்தில் யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளால்மறைத்துவைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படும் யுத்த உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விஷேட அதிரடிப் படையின் முல்லைத்தீவு முகாமின் அதிகாரிகளால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த உபகரணங்கள்கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது 22 50 டி56 ரகதோட்டாக்கள், ஆர்.பி.ஜி. தோட்டாக்கள்3, 6 அடிசெல் உட்பட மேலும் பல ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையில் கைப்பற்றப்பட்டுள்ள ஆயுதங்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பின்னர் கிளிநொச்சி முகாமிலுள்ள தேடுதல் மற்றும் குண்டு செயலிழப்பு பிரிவினரின் ஒத்துழைப்புடன் அழிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் சுட்டிக் காட்டியுள்ளனர். (ம)

## சாவகச்...

பொதுமகன் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. (ம-29)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
விலை : 30.00
வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்
நாதம் 194
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2049 | 02.12.2018 | தொலைபேசி : 021 222 3378

## காலத்தால் அழியாத மாவீரர் கல்லறை கல்லறை அல்ல உயிர் உள்ளவர் பாசறை





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

மாவீரர் தினம் மிக எழுச்சியுடனும் , உணர்வுபூர்வமாகவும் அனுஷ்டிக்கப்பட்டதில் ஆலடியில் இருந்த அனைவருக்கும் திருப்தியளித்துள்ளது.

அதிலும் குறிப்பாக விதானையார் விசுவலிங்கம் மாவீரர் துயிலுமில்லத்திற்குச் சென்று தன் மகனுக்கு ஈகச்சுடர் ஏற்றிய திருப்தியில் சாந்தமாக இருந்தார். இந்தத் திருப்தியோடு ஆலடி மாநாடு கூடியது.

இன்னும் நாடும் ஒழுங்கு சீருக்கு வந்ததாகத் தெரியவில்லை. டிசெம்பர் ஐந்தாம் திகதி பாராளுமன்றம் கூடும் போது பெரும்பான்மை பலத்தை நிரூபித்தால், உரிய நடவடிக்கை எடுக்கிறதாக ஜனாதிபதி மைத்திரி கூட்டமைப்புக்கு உறுதியளித்துள்ளாராம். கங்காணி கார்த்திகேயனின் முகவுரை யுடன் ஆலடி மாநாடு வழமையான தனது வாதப்பிரதிவாதங்களுக்குள் நுழைந்து கொண்டது.

**பண்டிதர்:** ஒமோம் நானும் பேப்பரில பார்த்தனான். அதுசரி இப்ப கூட்டமைப்பினர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குகிறது எண்டு வெளிப்படையாக ஆதரவு தெரிவிக்கினம். என்ன சங்கதி?

**சாத்திரியார்:** இந்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அரங்கேற்றிப் போட்டால், அதுவே இனப்பிரச்சினைக்குத் தீர்வாகி விடும் என்று கூட்டமைப்பில இருக்கிற சம்பந்தரும் சுமந்திரனும் நம்புகினம்.

**விதானையார்:** நம்பிக்கை இருக்கத்தான் வேணும். ஆனால் ஆர நம்புறது என்ற விடயமும் இங்கு கவனிக்கப்படவேணும்.

**மூப்பர்:** முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டுவந்த அருமந்த தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்தில வைத்து எரித்தது ரணில் விக்கிரமசிங்க தரப்புத் தானே. அப்படிப்பட்டவர் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அரங்கேற்றுவாரோ?

**பண்டிதர்:** உள்ள ஒன்றும் வெளிய இன்னொன்றும். பண்டிதர் இவ்வாறு கூறியதும் அதன் பொருளை உணரமுடியாதவர்கள் ஒருவரையொருவர் பார்த்தனர். என்ன பண்டிதர் ஐயா. பழைய பண்டிதர் மொழியில் கூறினால் எங்களுக்கு விளங்குமோ என்ன? மூப்பர் முணுமுணுத்தார்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா நீங்கள் என்ன சொல்லவாறியள்.

**பண்டிதர்:** அரசியலமைப்பை அமுல்படுத்துவதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கிறதாகக் கூட்டமைப்பு வெளியில கூறிக்கொள்கிறது. ஆனால் உள்நோக்கம் வேற.

**சாத்திரியார்:** உள்நோக்கம் வேற எண்டால்...

**பண்டிதர்:**ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்காவிட்டால், பாராளுமன்றத் தேர்தல் நடக்கிறது தவிர்க்க முடியாததாகிவிடும்.

**கங்காணி:** பொதுத் தேர்தல் இப்ப வராவிட்டாலும் இன்னும் ஒன்றரை வருடங்களுக்குப் பின்பெண்டாலும் தேர்தல் வரும் தானே. அப்பவும் கூட்டமைப்புக்குப் பிரச்சினை இருக்கும் தானே.


**பண்டிதர்:** பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை வருடம் எடுத்தால் அதற்கிடையில் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அரங்கேற்றி விடலாம். அது தங்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பெரும் ஆதரவைத் தரும் எண்டு கூட்டமைப்பு நம்புது.

**மூப்பர்:** அப்ப தேர்தல் வராமல் தடுக்கிறதுதான் கூட்டமைப்பின் உள்நோக்கம். அதை வெளியில் சொல்லாமல் தமிழ் மக்களுக்காகவே ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக ஆக்க முனைகின்றோம் எண்டு ஒரு சாட்டுச் சொல்லப்படுகுது என்பதுதானே பண்டிதர் ஐயா சொல்ல வந்த விடயம்.

**பண்டிதர்:** இந்தா மூப்பர் பிடிச்சிட்டார்.

**வாத்தியார்:** நீங்கள் என்ன சொன்னாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின்ர அங்கத்துவம் போலல் லோ நடந்து கொள்ளுது.

வாத்தியார் வைத்திலிங்கம் இப்படிக் கூறியதும் ஆலடி மாநாட்டில சலசலப்பு ஏற்பட்டது மட்டுமல்ல அங்கிருந்த எல்லாரும் உசார் அடைந்தவர்களாகத் தங்கள் உடம்பை நிமிர்த்திக் கொண்டனர்.



## கிரியெல்ல பேசுவதைத் தடுக்கும் உரிமை சுமந்திரனுக்கு உண்டு

என்ன வாத்தியார் சொல்லுறியள். விதானையார் விசுவலிங்கம் முந்திக் கொண்டார்.

**வாத்தியார்:** ஏன் பாராளுமன்றத்தில நடக்கிற வாதப்பிரதிவாதங்களை நீங்கள் பார்க்கிறதில்லையோ. கடந்த கிழமை நடந்த பாராளுமன்ற அமர்வில ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் லக்ஷ்மன் கிரியெல்ல எழுந்து நின்று பேசிக்கொண்டிருக்கிறார். அவரின் உரையை ஆதரித்து கட்சி உறுப்பினர்கள் மேசையில் தட்டிக் கரகோசம் செய்யினம். ஆனால் பின்வரிசையில இருந்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தன் ஆசனத்தில இருந்தபடி லக்ஷ்மன் கிரியெல்ல பேசுவதை நிறுத்துகின்றார். எனினும் அதனை லக்ஷ்மன் கிரியெல்ல கவனிக்கவில்லை.

இதனால் ஆத்திர மடைந்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எழுந்து சென்று கையை நீட்டியபடி லக்ஸ்மன் கிரியெல்ல பேசுவதை நிறுத்துமாறு கூறுகிறார்.

லக்ஸ்மன் கிரியெல்ல பேசுவது தாங்கள் போட்ட திட்டத்தைக் குழப்புவது போலவும் அந்த உரையால ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வருவது தடைப்பட்டுப் போகும் போலவும் சுமந்திரனின் முகபாவனை இருந்தது.

அதுமட்டுமல்ல கிரியெல்ல பேசுவது தவறு என்று கிரியெல்லவுக்கு அடுத்த ஆசனத்தில் இருந்த ரணில் விக்கிரமசிங்க விடவும் சுமந்திரன் கூறிவைத்தார்.

இவையெல்லாம் ஒரு கணப்பொழுதில நடந்து முடிந்தது. ஆனாலும்...

**விதானையார்:** வாத்தியார் என்ன சொல்ல வந்ததை நிறுத்திப் போட்டியள். நீங்கள் சொல்லுறதில நிறைய உட்பொருள் இருக்குது. சொல்ல வந்ததைச் சொல்லுங்கஎன்.

**வாத்தியார்:** ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் லக்ஷ்மன் கிரியெல்ல பேசுவதைத் தடுக்கிற அளவில் சுமந்திரன் எம்.பிக்கு அதிகாரம் இருக்குது எண்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் அங்கம் எண்டு சொல்லுறதில என்ன தவறு இருக்குது.

**பண்டிதர்:** வாத்தியார் சொல்லுறதில உண்மை இருக்குது. ஆனால் சுமந்திரனார் பாராளு மன்றத்தில எழுந்து போய் கிரியெல்ல பேசுவதை நிறுத்த முற்பட்டதைச் சிங்கள மக்கள் கவனித்திருப்பினம். இது அவ்வளவு நல்லதல்ல.

இப்படி பண்டிதர் கூற, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

# தமிழினத்திற்காக ஒன்றிணையுங்கள்

ஈழத்தமிழ்மக்களின்நலனை முன்னிறுத்தியதான கொள்கை அடிப்படையில், முன்னாள் நீதியரசரும் வடக்கு மாகாண சபை யின் முதலாவது முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயம் என்பதனை நெருக்கடியான இக் காலகட்டத்தில் சுட்டிக்காட்ட அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை கடமைப்பட்டுள்ளது.

ஆயுத மௌனிப்பின் பின்னரான தாயக அரசியலானது ஈழத்தமிழ் மக்களின் நலனுக்கு நேர் விரோதமான பாதையில் பயணப்பட்டு ஈற்றில் சிங்கள பௌத்த பேரினவாத நச்சு வட்டத்திற்குள் மீண்டெழ முடியாத இக்கட்டில் தமிழர்களது தலைவிதியை கொண்டு போய் நிறுத்தியுள்ளது.

இவ்வாறான இக்கட்டில் இருந்து எமது மண்ணையும் மக்களையும் மீட்டெடுக்க வேண்டுமரயின் கொள்கை அடிப்படையில் ஒன்றிணைந்த வலுவான அரசியற் கூட்டணி ஒன்றை உறுதியான தலைமைத்துவத்தின் கீழ் உடனடியாக ஏற்படுத்தியே ஆக வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களது உயிர் விதை விதைத்து இலட்சக்கணக்கான தமிழ் மக்களது உயிர்த் தியாகம் சுமந்து நான்கு தசாப்தங்களாக நடந்தேறிய விடுதலைப் போராட்டம் பாதுகாத்து நின்ற தமிழீழ மண்ணையும் மக்களையும் ஆயுத மௌனிப்பின் பின்னரான கடந்த பத்து ஆண்டுகளில், அழித்தொழித்து அடிமைப்படுத்த துடித்துக் கொண்டிருக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்திடம் கையளித்து நிற்கும் கயமைத்தனத்தினை தமிழர்களின் அரசியல் தலைமையாகக் கருதப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்யத்துணிந்துள்ள பின்னணியில்தான் மாற்று அரசியல் தலைமையின் தேவை மிக மிக அவசியமாக உணரப்பட்டுள்ளது.

தாயகம் -தேசியம் -தன்னாட்சி உரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாட்டின் அடிப்படையிலான அரசியற் செயற்பாட்டின் மூலமாக தமிழர்களது அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பக்கபலமாக இருந்து பலம் சேர்க்கும் நோக்கில் தமிழீழத் தேசியத் தலைமையால் உருவாக்கப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இச் செயற்பாடானது ஆயுத மௌனிப்பின் பின்னர் தீட்டிய மரத்தில் கூர் பார்க்கும் அயோக்கியத் தனத்தை விஞ்சியதாக அமைந்திருக்கிறது

இவ் அரசியற் பின்புலத்தில் மாற்று அரசியல் தலைமை ஒன்றை உருவாக்கும் முனைப்பில் நீண்ட காலமாக முன்னின்று பாடுபட்ட தரப்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இருந்து வருகின்றது. தமிழீழத் தேசியத் தலைமையின் உறுதியான வழிகாட்டுதலுக்கு கட்டுப்பட்டே பழக்கப்பட்ட எமது மக்களின் ஆதரவை மாற்றுத் தலைமையின் பக்கம் மடைமாற்றுவது பெரும் சவால் நிறைந்ததாகக் காணப்பட்டது.

இதுவே, கொள்கைப் பற்றுறுதியுடன் மக்கள் அரசியல் பயணத்தை தொடர்ந்து வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தல் கால அங்கீகாரத்தை பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலை தொடர்ந்து வரக் காரணமாகும்.



**ஈழத்தமிழ் மக்கள் நலனை முன்னிறுத்தி நீதியரசர் விக்னேஸ்வரனும் கஜேந்திரகுமாரும் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயம்! இவ்வாறு அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.**



இத்துர்ப்பாக்கிய நிலையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழர் விரோத செயற்பாடுகளை நேரடியாகவே எதிர்த்து நின்று, ஈழத் தமிழர்களின் உரித்துக்களை இடித்துரைத்துவரும் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கு ஆதரவாக தமிழர்கள் பெருந்திரளாக அணிதிரண்டு வருவது ஆறுதலாக இருந்து வருவதுடன் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் காலம் நிறைவடைந்த நிலையில் தான் சார்ந்த தமிழரசுக் கட்சி- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து முற்றிலுமாக தன்னை விடுவித்துக் கொண்டுள்ள சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியை ஆரம்பித்து மாற்றுத் தலைமைக்கான புதிய பாதையை திறந்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாக அமைந்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழர் விரோத நிலைப்பாடுகளை மக்கள் மன்றத்தில் முன்வைத்து வந்ததுடன்தமிழர்களது தேசிய அபிலாசைகளை உள்ளடக்கிய தீர்வை நோக்கியதாக தாயக மக்களை அணிதிரட்டும் வரலாற்றுக் கடமையிலும் ஈடுபட்டு வரும் தமிழ் மக்கள் பேரவையின் வழிகாட்டுதல் மற்றும் பங்கேற்புடன் மாற்று அரசியல் கூட்டணி ஒன்று ஏற்படுத்தப்படுவதே பொருத்தப்பாடானதாகும்

இந்நிலையில், தமிழ் மக்கள் பேரவையில் ஆரம்பம் முதலே அங்கத்துவம் வகித்து வரும் கட்சிகள் தொடர்பிலான முரண் நிலையை முன்னிறுத்தி தமிழர்களின் எதிர்கால இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் விதமான முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி வருவதானது எமக்கு நாமே தடையாக விளங்குவதற்கு ஒப்பானதாகும்.

தாயக அரசியலின் இன்றைய சூழமைவின் அடிப்படையில் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறிப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளூடாக வாக்கு வங்கியை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் ஒருபக்கமென்றால் அண்மையில் கொழும்பு அரசியலில் ஏற்படுத் தப்பட்ட அரசியல் குழப்பத்தின் பின்னணியில் அமைச் சராக்கப்பட்டுள்ள டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியும் இம்முறை கணிசமான வாக்குகளை சுவீகரித்துக்கொள்ளும் ஏது நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழர் அரசியற் பிரதிநிதித்துவம் தமிழர் விரோத சக்திகளிடம் இழக்கப்படும்பேரபாயம்ஏற்பட்டுவிடும். கொள்கையளவில் ஒன்றுபட்டிருந்தாலும் ஒன்றுபடுவதில் ஏற்படுத்தப்பட்டு வரும் முரண்பாட்டு நிலை தமிழ் மக்களின் மனங்களை சோர்வடையச் செய்துவிடும். இந்நிலையானது தேர்தல் கால வாக்களிப்பு விகிதத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் கருத்தில்கொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தை ஒன்றிணைத்ததாக உருவாக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் பேரவையின் இருப்பு தாயக அரசியல் வெளியில் இன்றியமை யாததாகும். அதனை இத் தாமதங்களும் தடுமாற்றங் களும் சிதைத்துவிடக் கூடும். ஆகவே மேற்குறித்த தரப்புகள் கொள்கை அடிப்படையில் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி ஒன்றிணைவது காலத்தின் கட்டாயமாகும்.

"மீண்டும் மீண்டும் எமக்குள்ளேயே குரோதங்களையும் விரோதங்களையும் வளர்த்துக்கொண்டு தொடர்ந்தும் எமக்குள் முரண்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமைகளுக்கு இடம்கொடாமல் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையின் அடிப்படையில் திட்டமிட்ட செயற்பாடுகளூடாக தேர்தல் அரசியலை பயன்படுத்திக் கொள்வதற்கு என்னுடன் கைகோர்க்குமாறு அழைக்கிறேன்" என கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் விடுத்த கோரிக்கையை ஈழத் தமிழர் சுதந்திர வாழ்வில் உண்மையாக அக்கறையுடய தரப்புகள் ஏற்று மாற்று அரசியல் தளத்தை பலப்படுத்துமாறு அனைத்துலக ஈழத்தமிழ் மக்கள் சார்பில் நாம் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கின்றோம்.

"மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு, அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் போக்குவதற்கு திட்டமிட்டுச் செயலாற்றுவது தான் உண்மையான அரசியல் வேலை" எனும் தேசியத் தலைவரது சிந்தனையை வேதவாக்காக கொண்டு, நாம் வாழ வேண்டும் என்பதற்காக தமது இன்னுயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களது உன்னத தியாகத்தைப் போற்றி நினைவு கொள்ளும் இந்நாளில் மண்ணுறங்கும் மாவீரர்களது கனவுகளையும், இலட்சியங்களையும் எமது தோள்களில் சுமந்து செல்வதுடன் அவ்வழி நின்று தாயக மண்ணினதும் மக்களினதும் விடுதலையை வென்றெடுக்க பாடுபடுவோம் என்று உறுதியேற்போம்.

"சுயநிர்ணய உரிமை தமிழரின் பிறப்புரிமை"

அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை!




# கரடி மனிதன்



அடர்ந்த காட்டையொட்டிய ஒரு வீட்டில் ஒரு விதவை வாழ்ந்து வந்தாள். அவளுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். மூத்தவள் பெயர் ஸ்நோ ஒயிட். இளையவள் பெயர் ரெட் ரோஸ். இருவரும் நல்ல அழகிகள். சகோதரிகள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த அன்பு கொண்டிருந்தனர். காட்டில் வசிக்கும் விலங்குகள் தான் அவர்களுக்கு உற்ற நண்பர்கள். அப்போது கடுமையான பனிக்காலம்.

ஒரு நாள் இரவு வீட்டின் கதவு தட்டப்பட்டது. ஸ்நோ ஒயிட் சென்று கதவைத் திறந்தாள். அங்கே கரடி ஒன்று குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது. கரடியைக் கண்டதும் ஸ்நோ ஒயிட் பயந்தாள். ஆனால், அந்தக் கரடி மனிதக் குரலில் பேசியது. குளிரில் நடுங்கும் தனக்கு அடைக்கலம் தரும்படி கெஞ்சியது. கரடி கூறுவதைக் கேட்டு ஸ்நோ ஒயிட் மனமிரங்கினாள். உடனே அதனைக் கணப்பருகே அழைத்துப் போனாள். கரடி கணப்பருகே அமர்ந்து கொண்டது. சிறிது நேரத்தில் சகோதரிகள் இருவரும் கரடியுடன் நெருங்கிப் பழகிவிட்டனர்.

அதன்பின் கரடி தினமும் அங்கு மாலை வேளையில் வந்துவிடும். கணப்பருகே குளிர் காயும். சிரித்துப் பேசி அவர்களுடன் விளையாடும். அதிகாலையில் காட்டிற்குள் சென்றுவிடும். பனிக்காலம் முடிந்ததும் சகோதரிகள் இருவரிடமும் கரடி பிரியா விடைபெற்றது. "இனி உங்களைச் சந்திக்க முடியுமோ என்னவோ? என்னுடைய செல்வத்தைத் தேடி நான் செல்கிறேன். இடையில் உங்களைச் சந்திக்க நேர்ந்தது. எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது" என்று மனம் நெகிழக் கூறி விடை பெற்றுச் சென்றது. ஸ்நோ ஒயிட்டும் ரெட் ரோஸும் கலங்கிய கண்களுடன் கரடிக்கு விடை கொடுத்து அனுப்பினர். கரடியும் அவர்களை விட்டுப் பிரிய மனமில்லாமல் விடை பெற்றுச் சென்றது.

நாட்கள் சென்றன. ஒரு நாள் சகோதரிகள் இருவரும் விறகு பொறுக்குவதற்காகக் காட்டிற்குள் சென்றனர். அங்கு ஒரு இடத்தில் குகை ஒன்று இருப்பதைக் கண்டனர். உள்ளே சென்று பார்க்க விருப்பம் கொண்டனர். குகைக்குள் நுழைந்தனர். குகை நீளமாகப் போய்க் கொண்டே இருந்தது. ஓரிடத்தில் இருளையும் மீறி ஒளி வீசிக் கொண்டிருந்தது. ஒளிவரும் இடமருகே சென்றனர்.

அங்கே வைரம், வைடூரியம், மரகதம், மாணிக்கக் கற்களாலான ஆபரணங்களும் தங்க நகைகளும் குவிந்து கிடந்தன. அவற்றைக் கண்டு இருவரும் பிரமித்துப் போயினர். அப்போது குகையின் இருண்ட பகுதியிலிருந்து திடீரென்று பூதம் ஒன்று பாய்ந்து வந்தது. அதன் பயங்கரமான அலறலைக் கேட்டு சகோதரிகள் இருவரும் அஞ்சி நடுங்கினர். அவர்களைக் கண்ட பூதம், "உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள். இங்கு என்னை உளவு பார்க்கவா வந்துள்ளீர்கள்?" என்று கத்தியபடி தனது நீண்ட கைகளை நீட்டியது. இருவரும் பதறிப் போன நேரத்தில் அங்கே கரடி ஒன்று வந்தது.

பூதத்தின் கவனம் கரடி மேல்திரும்பியது. அப்போது தான் இருவருக்கும் மூச்சே வந்தது. "அப்பாடா பிழைத்தோம்!" என்று எண்ணினர். கரடிக்கும் பூதத்திற்கும் கடும் சண்டை நடந்தது. இறுதியில் பூதம் கரடியால் அடித்துக் கொல்லப்பட்டது. கரடி சகோதரிகளின் அருகில் வந்தது.

"என்னைத் தெரியவில்லையா? நான் உங்கள் நண்பன். பனிக்காலம் முழுவதும் கணப்புக்காக உங்கள் வீட்டிற்கு வந்தவன் தான்!" என்றது. அதன் குரல் கேட்டு ஸ்நோ ஒயிட்டும் ரெட் ரோஸும் அடையாளம் கண்டு கொண்டனர். அப்போது அங்கே எதிர்பாராத அதிசயம் நடந்தது.

கரடி உருமாறத் தொடங்கியது. மனித உருப் பெற்றது. அரசகுமாரன் தோற்றத்தில் அலங்கார அணிமணிகளுடன் ஒரு இளைஞன் அங்கே காட்சியளித்தான். அவன் பேச ஆரம்பித்தான். "நான் ஒரு அரசகுமாரன். இந்தப் பூதத்தால் தான் நான் கரடி உருவம் பெற்றேன். பனிக்காலத்தில் நான் விறைத்து போய் இறந்து போகாதபடி நீங்கள்தான் என்னை காப்பாற்றினீர்கள். உங்களுக்கு மிக்க நன்றி. எனது செல்வங்களை எல்லாம் இந்த பூதம் அபகரித்துக் கொண்டு விட்டது. அதனை மீட்கவே இங்கு வந்தேன். அப்படி வரும் போதுதான் உங்களைச் சந்திக்கிறேன்" என்றான்.


அரசகுமாரன் செல்வங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டான். ஸ்நோ ஒயிட், ரெட் ரோஸ் இருவரையும் அழைத்துக் கொண்டு, தனது நாட்டிற்குச் சென்றான். ஸ்நோ ஒயிட்டை அவன் திருமணம் செய்து கொண்டான். இளையவள் ரெட் ரோஸைத் தனது தம்பிக்கு மணமுடித்து வைத்தான். அவர்கள் நால்வரும் நீண்ட காலம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.



சி.லக்ஷன், தரம் - 1 ஏ, யா/நல்லூர் சென்.பெனடிக்ற்.

## நம்பிக்கை தத்துவங்கள்

- சோம்பலை சாம்பலாக்கி வேதனையை சாதனையாக் குவோம்.
- உனக்குள்ளே உந்தன் பயத்தை பதுக்கிக்கொண்டு, தைரியத்தை மட்டுமே மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- தேடும்வரை வாழ்க்கை நிஜம் ஓடும்வரை வெற்றி நிஜம்.
- தட்டிப் பறிப்பவன் வாழ்ந்ததில்லை, விட்டுக் கொடுப்பவன் வீழ்ந்ததில்லை.
- செல்லும் பாதை சரியான பாதையாக இல்லாத பொழுது, வேகமாக ஓடுவதால் என்ன பலன்?
- வெற்றி என்பது தோல்விகளின் தொகுப்பு.
- இறந்தகால அனுபவங்கள் நிகழ்கால சாதனைகள்.
- கசப்புகளின்றி சாகசம் இல்லை.
- நெருப்புக்கு ஓய்வென்பது அணைவதல்ல, எரிப்பது! உனக்கு ஓய்வென்பது உறங்குவதல்ல, உழைப்பது!
- பாறைகளைச் சந்திக்காவிடில் ஓடைகளுக்குச் சங்கீதம் இல்லை.









## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகள் இல்லாவிட்டால் என்ன நடக்கும்?

**கதிர் — மானிப்பாய்**

**ஜோக் மன்னன் வியாசரே ஜோக் ஒன்று சொல்லும்?**

மனைவி:- என்னங்க ஒரு இரண்டு மூன்று நாளைக்கு நான் உங்கட கண்ணில படாமல் இருந்தா என்ன பண்ணுவீர்கள்.

கணவன்:- ரம்ப Happya Feel பண்ணுவன்டா செல்லம். அதுக்கப்புறம் திங்கள் மனைவி கண்ணில பட, செவ்வாய் பட, புதனும் அவள் கண்ணில் படல. வியாழன் கண் வீக்கம் வத்த லேசா தெரிஞ்சா மகராசி.

**கலை — மிருசுவில்**

**கற்பனைக் கதை ஏதும் தங்களிடம் இருக்கா?**

இரவு 9 மணி இருக்கும் கே.கே.எஸ். வீதியால் சென்று கொண்டிருந்தேன். என்னை முந்திய இருமோட்டார் சைக்கிள் என்னை மறித்தது. நீயா வியாசர்? ஆம் என்றேன்.

கூட்டமைப்பை ஏன் அவ்வளவு கேவலப்படுத்துகிறாய்? உண்மையைத் தானே தம்பி எழுதுறன். என்னது? குரல் உயர்கிறது. இல்லத் தம்பி கூட்டமைப்பா இல்லாமல் கூத்தமைப்பா இருக்கே என்ன பண்ண?

விட்டான் பாரு ஒரு குத்து மூக்காலை கொல கொல என்று ஊத்தியது இரத்தம். உண்மைக்குக் கிடைத்த பரிசு இதுவா என்று கத்தினேன். மனைவி கேட்டாள் என்ன கனவேதும் கண்டியளோ...! (யாவும் கற்பனை)

**சுதன் — குப்பிளான்**

**மக்கள் எல்லாம் இப்போதும் எப்போதும் அவன் பக்கம் தானே?**

தம்பி சுதன் உணர்வு என்பது இதயபூர்வமானது.

ஒருவன் செய்த தியாகங்களை நினைக்கும் போது இனந்தெரியாத உணர்வு மேலெழுமே. எம்மை அறியாமல் கண்களில் நீர்த்துளி பரவுமே அதுதான் அந்த உணர்வு.

எப்போதும் அவன் அவன்தான். அவனுக்கு நிகர் அவனே வேறு எவருமில்லை.

**றெசி — நவாலி**

**பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகள் இல்லாவிட்டால் என்ன நடக்கும்?**

இப்ப என்ன நடக்கிறதோ அதுதான் நடக்கும். சலுகைகள் கிடைக்கும் போதே மக்களுக்கு எதுவும் செய்யாதவர்கள் சலுகைகள் கிடைக்காத போது என்னத்தைச் செய்து கிழித்துவிடப் போகிறார்கள். கடுப்பேத்துறார் மைலோட்.

## போராளிகளுக்கு இறப்பே கிடையாது. இது உண்மையா?

**நேதாஜி — வதிரி**

**ஆளும் தரப்பு இல்லாத நாடாளுமன்றம் கின்னசில் இடம் பிடிக்குமா?**

சும்மா போங்கையா இதைப்பற்றி கழுவி ஊத்தி ஊத்தி வெறுத்தே போயிட்டு. விடுங்கையா ஏதும் சுவாரசியமா நடக்குதே இல்லையே. (பத்திரிகை பார்ப்பவர்கள் மைன்ட் வோயிஸ்)

**ஜனன் — வல்வெட்டித்துறை**

**ரஜினியின் 2.0 படம் எப்படி?**

இந்திய தமிழ் சினிமா வரலாற்றில் ஒரு மைல்கல். சங்கர் என்ற ஒரு மனிதனுக்குள் இவ்வளவு சிந்தனைகளா என்று எண்ணத் தோன்றும் அவ்வளவு பிரமாண்டம்.

கலை உலகில் சுப்பர்ஸ்டாக மின்னும் ரஜினி தமிழ் சினிமா எட்டாத எல்லையை எட்டி விட்டார். இறுதிவரை அவரின் இந்த உழைப்பு பேசப்படும் என்பது உண்மை.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**
**வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532, 076 636 3378 என்ற Viber இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**ஜக்சன் — அரசடி**

**போராளிகளுக்கு இறப்பே கிடையாது. இது உண்மையா?**

அநீதிக்கெதிராக போராட்டத்தில் என் நெஞ்சில் குண்டு பாய்ந்து நான் சாயும் நேரத்தில் எனது துப்பாக்கியை ஒரு கை ஏந்திக் கொள்ளும். அந்தத் துப்பாக்கி அநீதிக்கு எதிராகப் போராடிக் கொண்டே இருக்கும். இது சேகுவேராவின் சிந்தனையல்ல செயல் வடிவம்.

### பேசினால் என்ன ஆகும்?

**அதிகமாக பேசினால், அமைதியை இழப்பாய்.**
**ஆணவமாக பேசினால், அன்பை இழப்பாய்.**
**வேகமாக பேசினால், அர்த்தத்தை இழப்பாய்.**
**கோபமாக பேசினால், குணத்தை இழப்பாய்.**
**வெட்டியாகப் பேசினால், வேலையை இழப்பாய்.**
**வெகு நேரம் பேசினால், பெயரை இழப்பாய்.**
**பெருமையாக பேசினால், ஆண்டவனின் அன்பை இழப்பாய்.**

## ரஜினியின் 2.0 படம் எப்படி?

**வேதா — யாழ்ப்பாணம்**

**பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட கல்வித்தகைமை பார்த்தால் எப்படியிருக்கும்?**

பல்துண்டைக்காணோம் துணியைக்காணோம் என்று ஓட வேண்டி வரும் பரவாயில்லையா?

**நிலா — சுழிபுரம்**

**நீர் வணங்கும் கடவுள் யார்?**

நீர் இந்துவாக இருந்தால் நான் சிவனை வணங்குவேன். நீர் கிறிஸ்தவனாக இருந்தால் ஜேசு என்னை ரட்சிப்பார். நீர் பௌத்தனாக இருந்தால் புத்தன் வழியே என்வழி என்பேன். நீர் முஸ்லிம்மாக இருந்தால் அல்லா யாரையும் கைவிடமாட்டார் என்பேன்.

உலகில் ஆயிரம் கடவுள் இருக்கலாம். அவர் எங்கிருக்கிறார் என்று கேட்டால் அனைவரும் அண்ணாந்து வானத்தையே பார்ப்பார்கள்.

**ஜெனாதனு — வல்வெட்டி**

**வியாசரே What என்றால் தமிழில் என்ன?**

அடேய் என்னடா இப்படி வதைக்கிறீர்கள். பிளீஸ்டா முடியல ஏன்டா ஏன் இப்படி.

**தவறூபன் — நவாலி**

**மக்களுக்குச் சேவை செய்ய சம்பளம் தேவையா?**

மக்கள் சேவை செய்ய சம்பளம் தேவையில்லை. ஆனால் இங்கு பலர் சம்பளம் வாங்கிக் கொண்டு மக்கள் சேவை செய்கிறேன் என பீத்திக்கொண்டு திரிகிறார்கள். அவர்களை ஓட ஓட விரட்டணும்.

**தனு — கரவெட்டி**

**அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும். இதற்கு ஒரு உதாரணம் சொல்லுங்கள்?**

2009 எம் இனத்தின் தலைகளில் குண்டுகளை மழையாய்க் கொட்டி கொன்றொழித்ததை மறந்து பயங்கரவாதத்தை ஒழித்து விட்டோம் என்று வருடாவருடம் தாங்கள் வெற்றி விழா கொண்டாடிக்கொண்டு எம் உறவுகளை நினைவேந்த அனுமதிக்காதவர் படும் பாட்டைப் பார்த்தீரோ.

நான் நான் நானே தான் என்ற ஆணவம் யாரையும் தலைநிமிர்ந்து வாழ வைக்காது என்பதே உண்மை.



**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## ஏமாற்றம்

கருவண்டு விழியொன்று கண்மூடித் தூங்கும்
விண்மேகம் முட்டாத எண்ணங்கள் தோன்றும்
கண்ணோடு கண்ணோக்க விழிகள் தனை தேடும்
பண்ணோடு பாடலொன்று பாடியே மனமகிழும்
உன்னோடுதான் என உலகமென்றுகூறும்
கன்னத்தில் கன்னம் வைத்து காதல் கதை பேசும்
பெண்ணினத்தின் பேரழகி பேசி மனம் மயக்கும்
சின்னதாய் சிலுங்கலுடன் கற்பு பறிபோகும்
கெட்டபின் அழுவதில் பயனொன்றுமில்லை
பட்டபின் மரம் ஒன்று துளிர்வதும் இல்லை
சுட்டபின் சட்டியை தொட்டதும் இல்லை
கிளைவிட்டபின் மலரை மாலையாய்
தொடுப்பதும் இல்லை

பாவரன், குட்டிநகர், வவுனியா.



கவிதைக்கலசம்

## விடுதலை வேண்டும்

அடிமைக் கைதிகளாய்
எம் உறவுகள்
காணாமல் போய்விட்டனர்

தாயின் அரவணைப்பை
சிறுவயதில் இழந்து
தந்தையின் பாசத்தை
இளம் வயதில் இழந்து

குடும்பம் எனும்
அழகான சக்கரத்தை
நடுவினிலே இழந்து

சொந்த சுக துக்கங்களை இழந்து
கண்ணீர் விடுவதற்குக்கூட
உரிமை இல்லாது
உரிமைகள் பறிக்கப்பட்டு
வாழ்வுக்கு விடிவு கிடைக்குமா?

யோ. யொழினா, யா/ சித்தார்த் கல்லூரி, வல்வெட்டித்துறை

## வருவார்கள் என...

தண்டுகள் மும்மாரி பொழிய
வண்டுகள் ஊர்ந்து ஊர் எரிக்க...
பங்கருக்குள் எல்லாம்
புதையுண்டு போனது
தசைப்பிண்டங்களுடன்
வஞ்சினமாய் எம்மினம்
வதைபட்டுக் கிடந்த
வன்னியின் சோகத்தில்
செந்தமிழாய் எம்மினமும்
சிதைபட்டுப் போனதய்யா
என் தமிழும் அங்கே தான்
எனைவிட்டுப் போனதம்மா
ஓ என் தேசத்தின்
இளைய சமுதாயமே...
யாழ்மீட்டும் கைகளெல்லாம்
வாள்வெட்ட முனைந்ததுவோ?
சந்திகளெல்லாம் மந்திகளாய்
குந்தியிருந்து
மதிகெட்டு நடக்கும்
மடத்தனத்தை என் சொல்வேன்
கந்தனின் கலாசாரமாய்
கற்றவர் நிறைந்த
கவின்தரு பூமியாய்
நாளைய விடியல் நலமாய்
மாறும் என்ற நம்பிக்கையாய்
காத்திருக்கிறோம் நாமும்
இளங்காளைகள் எழுவார்கள் என...!

தமிழச்சி பிரவீனா சிவாஸ்கரன்

**இந்த உலகில் பெற்ற தாயை தவிர யாருடைய
அன்புக்கும் அடிமையாகி விடாதீர்கள் ஏமாற்றி விடுவார்கள்**
எஸ்.தர்சினி, உரும்பிராய்

## இலவசக்காட்சி

சுண்டல்... சுண்டல்...
என்றுகூவி
சொந்தங்களுக்கு சோறு தேடும்
சிறுவர்கள் ஒரு போக்கு...
உண்டுகொழுத்த உடம்பிருந்தும்
தெண்டித்தேடும்
முண்டங்கள் ஒரு போக்கு...
குடைகளுக்குள்ளேயே
குடும்பம் நடத்தும்
குமரர்களுடன்
குமரிகள் ஒருபோக்கு
வந்த இடத்தில் வளைத்துப்போட்டு
வாழ வீடு தேடும்
வாலிபர் ஒரு போக்கு
இல்லவள் போல் இணைத்து
என்னமோ... ஏதோ... செய்யும்
சோடிகள் ஒரு போக்கு...
இவைகளெல்லாம்
காற்றுவாங்கும் சாட்டில்
காலிமுகத்திடலில் காட்டப்படும்
இலவசக் கண்காட்சி

விவேகானந்தனூர் சதீஸ், கிளிநொச்சி

## ஆடும் மயிலழகாள்

பொன் மலர் பூவிரிய
காத்திருந்த வண்டெல்லாம்
தேனருந்தப் பாய்கிறதே

வண்டுகளின் ரீங்காரம்
வானைப் பிழந்ததிர
வானரங்கள் தாவியோட
கனிகளெல்லாம் தரைவீழ்ந்து
கம்பளமாய் தெரிகிறதே

பச்சைக் கம்பளமாய்
பரந்து விரிந்த புல்வெளியில்
பனித்துளிகள் படர்ந்து நிற்க
சிரிக்கும் சூரியனார்
சுண்டி இழக்கும் அழகு
ஐயகோ இதுவல்லோ அழகு

ஒடியாத கிளை ஒன்றில்
ஒடிந்துவிடும் இடையழகாள்
ஒய்யார ஊஞ்சல் கட்டி
ஆடுகிறாள் அசைந்தசைந்து

அன்ன நடையழகாள்
அருமருந்துப் பேச்சழகாள்
தின்னத் தேனமுதாள்
திகட்டாத பாவையவள்
ஆடுகிறாள் ஊஞ்சல் ஆடுகிறாள்

மாவை. நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 424



## புரிந்து கொள்ளவில்லை?

பெண்தானே என்று
இழிவாக நினைத்து
சில ஆண்கள்
தன்னுடைய பலத்தை
பெண்களிடம் காட்டுகிறார்கள்
ஏனோ அவர்களுக்கு
புரிவதில்லை நீ
இந்த உலகில் பிறந்ததும்
ஒரு பெண்ணால் என்று...

த.கஸ்தூரி
பருத்தித்துறை

## இவ்வார மௌனத்தின் தேடல் -425



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

## சிதில வாழ்வு

அவன் அடிகளும் மிதிகளும்
புதிதல்ல எனக்கு
அலறல் பருகிய
இராத்திரி பலவே..
அடகுக்கடை போன தாலியும்
சாட்சிக்கு இல்லை- எனக்கு
சாராய போதை
வெறிகொண்டவன்
முன் பேதையின் இல்லற கனவு
கண்ணீருடனும் உதிரத்துடனும்
கரைந்து போகிறது
மறுபடியும்
அவன் நசுக்கலில் சிதைந்தது
வயிற்றுப் புழுபூச்சி

சிவம் வேணுகா
கோப்பாய் வடக்கு

## போதை தந்த பரிணாமம்

பேதையரின் வழிகாட்டலால்
போதையை இவன் நாட
கோதை இவள் வாழ்விழந்து
வெதும்புகிறாள் வேதனையில்
ஒழிந்து விட்டதாய் எண்ணிய
பெண்ணடிமைத்தனம் அழிந்து
போகவில்லை இதுவரை
போதையால் அது இன்று
பரிணாமம் அடைந்துள்ளது
புதுவடிவம் பெற்றே...

செல்வி. சுவேந்திரன்
ஆர்த்திகா
தொல்புரம் கிழக்கு

## மாண்பு நிறை செயலோ?

குடிகெடுக்கும் அந்தக் குடியை - நீ
குடித்து வீடு வந்த போது
குணமுள்ள மனைவி பசியோடு
குமுறி அழுவதை நீ அறியாயோ
நம்பியுன்னை வந்தவளை
நல்லின்பந் தந்தவளை
பெருந்துன்பத்தில் ஆழ்த்துதல்
பொல்லாத பாவமன்றோ

சி.திவ்வியா
யா/ ப.மெ.ம.வி

## குடிகார மணமகன்

நிலைவத் தொட
உயர் மாளிகையையும்
மணமகளை மங்களமாக்க
தங்க நகைகளும் ஓர் இலட்சம்
ரொக்கப் பணமும் கேட்டு
மாமியின் இரத்தத்தையும்
மாமனாரின் வியர்வையையும்
குடித்தது போதாதென
சாராயக் கடைகளிலே
குடித்து முடித்தாய்
அனைத்தையும் விற்று

நாபீர், யாழ். பல்கலை

## பெண்ணின் பெருமை

நெசவுத் தறியில்- நீ
நேரிழையாயின் ஆண்
பசப்புப் பேசும் குறுக்கிழை
வாய் வீரம் மட்டும் பேசுவர்-நீ
தாயாய் மனையாய் தங்கையாய்
தளிர் குருத்தாய் பெண்ணின் பிறப்பு
வாயால் வசையும் வாழ்வும் பிறழ்வும்
வருமோ மானிடப்
பிறப்பினில் இனிமேல்

வைகதன், கொக்குவில்

## நீ மனிதனா?

பெண்களை
அடிமையாக்கி
காட்டுமிராண்டித்தனமாக
கொடுமைப்படுத்தும்
கணவனை
எந்தப் பெண் மதித்து
கூடி வாழ்வாள்
தாலி கட்டிய மனைவியை
கருணை சிறிதுமின்றி
குடிபோதை தலைக்கேற
ஆணவத்தோடு
உதைக்கிறான்
வலி தாங்கமுடியாது
கிலிகொண்டு கத்துகிறாள்
மண்ணில் புரண்டு
ஆண் ஆதிக்கம்
என்று ஒழியும்

துரை
தென்மட்டுவில்

## என்றும் மாறும் இந்தநிலை

அன்பாயிருந்த குடும்பமதை
அடித்து நொருக்க வந்தவனே
அன்பு மனையாள் கண்முன்னே
அவன் ஆருயிர் பிரிந்ததுவே
அப்பவும் தீராத அவன் கொலைவெறி
மனைவி நோக்கி பாய்ந்தனவே
என்றும் மாறும் இந்தநிலை

ஆ.ரோசி அல்போன்சா, இருதிகர்

## துரோகம் செய்யாதே

தன் அன்பு மனையாளோடு
பிற ஆடவனின் உறவு கண்டு
கொதித்தெழுந்தான் கட்டிய கணவன்
துன்பம் ஆறவில்லை
துணையவளின் கோலம் கண்டு
துணிவுடனே துணிந்து நின்றாள்
கொடுமை நிறை செயல் புரிந்தாள்

சி.ஜெ. பிறின்சிஸி, யாழ்ப்பாணம்

## வினை

அடியும் உதையுமாய்
நல்லிணக்கம் நாட்டுக்குள்ளே
நகைப்பாய் போனது
போதாதென்று
அது
வீட்டுக்குள்ளேயும்
விளையாடுகிறதே!

நல்லூர் தேன்நிலா

# பெற்றால்தான் பிள்ளையா?




மணி இரண்டிருக்கும். பண்ணையார் வீட்டிற்கும் வாசலுக்குமாய் போவதும் வருவதுமாக இருந்தார். குசினியிலிருந்து கவனித்த மனைவி செல்லம்மா என்னப்பா வீட்டிற்கும் வாசலுக்குமாய் சுடு தண்ணி குடித்த நாய்க்குட்டி போல் திரிகிறீர்கள் என்றாள். இல்லையெடி அப்பா பிள்ளை ஜானகி இன்னும் வரவில்லையே என்றார். பேசாமல் ஒரு இடத்தில் இருங்கோ. அவள் வந்து விடுவாள் என்றாள். பண்ணையார் நேர்மையானவர், கண்டிப்பானவர். அடுத்தவர்களுடன் அன்பாய் பழகுபவர். சமூகத்தில் நல்ல மனிதர் என்ற பெயர் எடுத்தவர். மற்றவர்கள் இன்பத்திலும் சரி துன்பத்திலும் சரி பங்கு கொள்ளும் மனிதரும்கூட. குறைந்தது பத்துப்பேர் அவரது பண்ணையில் வேலை செய்வார்கள். ஒவ்வொரு நாளும் வேலைக்கேற்ற ஊதியமும் கொடுத்து இருவேளை சாப்பாடும் கொடுப்பார். பிறர் மனதை நோகடிக்கமாட்டார்.

பண்ணையாருக்கு ஒரு மகள். அவள் தான் ஜானகி. செல்ல மகளும் கூட. ஜானகி அப்பா என்றழைத்தபடி வீட்டுக்கு வந்தாள். இன்றைக்கு என்ன சுணக்கம் என்றார். அப்பா கொலிச்சில் இன்று கூட்டம் நடந்தது அதனால்தான் சுணக்கம் என்றாள். ஜானகி முகம் கழுவி, உடை மாற்றி சாப்பிடத் தயாரானாள். மூவரும் உட்கார்ந்து சாப்பிட்டார்கள். பண்ணையார் தோட்டத்திற்கு சென்று மரநிழலில் சிறிது நேரம் கதைத்து வருவது வழக்கம். ஜானகியின் அம்மா பாத்திரம் கழுவச் சென்றார். ஜானகி அன்றைய பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்தாள். அப்போ ரெலிபோன் மணி ஒலித்தது. ஹலோ என்றாள். மறுபக்கத்தில் கோபியின் குரல் ஒலித்தது. கோபியுடன் கதைத்துவிட்டு படுக்கையில் விழுந்தாள். தூக்கம் அவள் கண்களைத் தழுவ மறுத்தது. நண்பர்கள் பிரியப் போகிறோம் என்று யோசித்தவளாய் அயர்ந்து தூங்கி விட்டாள். விடிந்ததும் கூடத் தெரியவில்லை. அம்மா ஜானகி என்று குரல் கொடுக்க திடுக்குற்று எழுந்து கொலிச்சுக்கு ஆயத்தமானாள். அங்கு சென்றதும் அவள் விழிகள் கோபியைத் தேடியது. லேற்றாய் கோபி வந்தான். நிகழ்வுகள் கூட நடைபெற்று எல்லோரும் விடை பெற்றுச் சென்றார்கள். கோபியைப் பிரிகிறேன் என்று சிறு சலனம் அவள் முகத்தில் தென்பட்டது. அதன்பிறகு கோபியும் ஜானகியும் தேவையிருந்தால் போனில் கதைத்துக்கொள்வார்கள்.

பண்ணையாருக்கு ஜானகி ஒரு பிள்ளை. ஆகவே மகளுக்கு அவள் சம்மதத்துடன் மாப்பிள்ளை பார்க்கும்படி புரோக்கரிடம் குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. சில நாட்களின் பின்னர் புரோக்கர் சதாசிவம் ஒரு குறிப்புடனும் மாப்பிள்ளையின் படத்துடன் பண்ணையார் வீட்டுக்கு வந்தார். பண்ணையாரிடம் இரண்டு குறிப்பையும் கொடுத்தார். பண்ணையாரும் சரி நல்ல பொருத்தம். மாப்பிள்ளையின் படம் எங்கே என்றார். சதாசிவம் படத்தைக் கொடுத்தார். பண்ணையார் படத்தைப் பார்த்துவிட்டு மனைவியை அழைத்தார். இருவரும் பார்த்துவிட்டு கறுப்புத்தான். கறுப்பென்றாலும் கஸ்தூரி என்று சொல்லி சிரித்து மகிழ்ந்தார்கள். நீங்கள் பார்த்தால் போதாது. ஜானகி பார்த்து ஓம் என்றால் தானே கல்யாணம் என்றார் புரோக்கர். ஜானகியிடம் போட்டோவைக் காட்டினார்கள். ஜானகி திகைத்து நின்றாள். மாப்பிள்ளை யாருமில்லை கோபி என்று. ஜானகியின் சந்தோசத்திற்கு அளவேயில்லை. இரு வீட்டார் சம்மதத்துடன் நாள் பார்க்கப்பட்டது. கோபியும் ஜானகியும் அடிக்கடி ரெலிபோனில் தொடர்பு கொண்டார்கள். திருமண நாளும் நெருங்கியது. அயலிலுள்ள அம்மன் கோவிலில் திருமணம் கோலாகலமாய் நிறைவேறியது. பண்ணையாரும் மனைவியும் ஆனந்தத்தில் மிதந்தார்கள். கோபியும் ஜானகியும் அளவில்லா மகிழ்ச்சியில் திளைத்தார்கள். மாப்பிள்ளை வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானார்கள். ஜானகி அம்மா அப்பாவைப் பிரிய மனமின்றி தவித்தாள். எல்லோரும் ஜானகியைக் கட்டியணைத்து ஆறுதல் கூறி அனுப்பி வைத்தார்கள். பண்ணையாரும் மனைவியும் சந்தோசத்தில் மிதந்தார்கள். பிள்ளையுடன் படித்தவனே மாப்பிள்ளையாய் கிடைத்ததற்கு.

கோபியும் ஜானகியும் இல்லறத்தில் இணைந்து ஆறு ஆண்டுகள் உருண்டோடியது. எல்லாச் சுகத்தையும் கொடுத்த கடவுள் குழந்தையைக் கொடுக்க மறுத்துவிட்டார். இன்ப வாழ்க்கையில் சிறு சலனம் தலைகாட்டியது. ஒருவரை ஒருவர் கலந்துகொள்ளாமல் கவலையில் மூழ்கினார்கள். ஜானகி செவ்வாய், வெள்ளி அருகிலுள்ள சிவன் கோயிலுக்குச் செல்வது வழக்கம். பூசை முடிந்ததும் சிறிது நேரம் காப்பகத்துப் பிள்ளைகள் விளையாடுவதைப் பார்த்து விட்டுத்தான் வீட்டிற்கு வருவாள். கோபி சரியாகச் சாப்பிடுவதில்லை. வேலையால் சுணங்கி வருவது. நித்திரையின்றி தவிப்பது. இதை அவ்தானித்த ஜானகி கோபியின் கவலையை அறிய கோபி வேலையால் வந்ததும் கோபி உங்களுடன் நான் சிறிது நேரம் பேச வேண்டும் என்றாள். என்ன பேசப்போகிறாய் என்று சலிப்புடன் கேட்டான். உங்களுக்கு என்ன பிரச்சினை. மனம் திறந்து சொல்லுங்கள் என்றாள்.

நீங்கள் வேலைக்குப் போய்ச் சுணங்கி வருகிறீகள். சரியாகச் சாப்பிடுவதில்லை. தூக்கமில்லாமல் தவிக்கிறீகள் என்றாள். எனக்கு வேலைக்குப் போகப்பிடிக்கவில்லை. எல்லோரும் பிள்ளையைப் பற்றிக் கேட்கிறார்கள். எப்படி எனக்கு நிம்மதி கிடைக்கும். சரி நாம் கவலைப்பட்டு என்ன செய்ய முடியும். ஆண்டவன் விட்டவழியை காண்போம் என்றாள். கோபி நாம் இருவரும் யோசித்து ஒரு முடிவுக்கு வருவோம். யோசித்து என்ன நடக்கப் போகுது என்றான். இல்லை கோபி நாம் இருவரும் ஒரு குழந்தையை தத்தெடுத்தால் என்ன என்றாள்.

அப்போ நீயும் இதைப் பற்றிய கவலையை மனதில் வைத்திருக்கிறாய். வெளியில் காட்டவில்லை என்றான். கோபியின் முகத்தில் சந்தோசம் தவழ்ந்தது. நமது உறவுகளுடனும் கலந்து யோசித்து முடிவெடுப்போம் என்றான். எல்லோருமாய் யோசித்து குழந்தை ஒன்றை தத்தெடுப்பதாக.

அன்று வெள்ளிக்கிழமை திருமண ஏழாம் ஆண்டு நாளான அன்று இருவரும் சிவன் கோயிலுக்குச் சென்று சிவனை வழிபட்டுக் காப்பகம் சென்றார்கள். அங்கு குழந்தைகள் குதூகலமாய் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இருவரும் இமைமூடாது குழந்தைகளைப் பார்த்தபடி நின்றார்கள். வாச்மன் இருவரையும் வரவேற்பறைக்கு அழைத்துச் சென்றார். தலைவரும் இவர்களை உட்காரும்படி பணித்தார். உரையாடல் நடைபெற்று எல்லா விபரமும் அறிந்து குழந்தையை கொடுக்க முடிவாகியது. இருவரையும் கேட்டார் பெண் குழந்தையா, ஆண் குழந்தையா என்று. பெண் குழந்தை என்றார்கள். உடனே அவர்களை அழைத்துக்கொண்டு காப்பகத்திற்குள் நுழைந்தார்கள். குழந்தைகள் இவர்களை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். இருவரும் ஒரு குழந்தையைக் காட்ட தலைவர் பது இங்கே வாருங்கள் என்று அழைத்து உங்கள் அம்மா, அப்பா வந்துள்ளார்கள் அவர்களுடன் செல்லுங்கள் என்றார். பிள்ளை மனமும் மனமில்லாமலும் அவர்கள் அருகில் செல்ல இருவரும் வாரி அணைத்து முத்தமிட்டு தடவி அணைத்தார்கள். குழந்தைகளைப் பிரிய முடியாது பது தவித்தது மற்றைய



குழந்தைகளும் சோகத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவர்களுக்கும் ஆறுதல் கூறி பதுவை அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்று இறைவனுக்கு நன்றி கூறி ஆனந்தக் கண்ணீர் சொரிய வணங்கி நின்றார்கள்.

இல்லத்திற்குக் குழந்தையுடன் குதூகலம். உற்றார், உறவினர் நல்ல மனம் வாழ்கவென வாழ்த்தி மகிழ்ந்தார்கள். அம்மா அப்பா பிள்ளை குறையேதுமின்றி குதூகலமாய் வாழ்ந்தார்கள்.

கலாநாதன்,
இறம்பைக்குளம்

# சுட்டும் விழிச்சுடர்...

## சமூக நலன் பற்றிய கண்ணோட்டம் 11

# நாய்+நகரம்=நரகம்

காலை 6 மணி. முகம் கழுவி விட்டு அன்றைய தினசரிகள் வாங்க கடை நோக்கி வீதியில் கால் வைத்தேன். கண்ணி வெடி பு(வி)தைத்த நிலம் போல் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நாய் எச்சம் (மலம்) வியாபித்திருந்தது. அகலமாய் கண் விழித்து, அடி மேல் அடிவைத்து நடந்தேன்.

ஒரு வீட்டுக் கேற்றடியில் இரு பெண்கள் அரட்டையில் லயித்திருந்தனர். "எங்கள் வீட்டு பப்பி (நாய்) ஒருபோதும் வீட்டு வளவுக்குள் ஊத்தை செய்யாது. அந்த நேரம் வெளியே தான் போய் இருக்கும்" என்றாள் ஒருத்தி வெற்றிப் பெருமிதத்துடன். அம்புலியில் காலடி வைத்த ஆம்ஸ்ரோங் கூட இப்படி பெருமிதப்பட்டிருக்கமாட்டார்.

"எங்கட லைக்கா (விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் நாயின் பெயரும் அதுதான்) அந்த நேரமும், சாப்பாட்டு நேரமும் வெளியால போயிடும். ஆனால் காவல் காக்க வந்துவிட்டால் வீட்டுக்குள்ள ஒருத்தரையும் வர விடாது" என்றாள் மற்றவள். சாப்பாட்டையும், கழிவகற்றலையும் வெளியே வைத்துக் கொண்டு வீட்டுக்கு காவல் செய்யும் அந்த நாய்க்கு "நோபல் பரிசு" கொடுக்கலாம்.

பத்திரிகையை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். "குறுக்கே ஓடிய நாயில் மோதி வயோதிபர் பலி" என்று கட்டம் போட்ட செய்தி. வயோதிபருக்கு மனதுக்குள் அஞ்சலி செலுத்தியவாறு வீடு திரும்பினேன். தெருவில் தங்களுக்குள் மினவிக் கொண்டிருந்த நாய்க் கூட்டம் என்னைக் கண்டதும் கறுவிக் கொண்டு என்னுடன் மினவ ஓடிவந்தன. இன்றைய நாள் பலனில் "பயணங்களில் ஜாக்கிரதையாக இருக்கவும்" என்று பத்திரிகையில் போட்டிருந்தது சரியென்றேபட்டது.

வீட்டுக்குள் நுழைந்ததும் ஒரு கப் சூடான கோப்பியுடன் பத்திரிகையை அலசும் ஆர்வத்துடன் குசினிக்குள் நுழைந்தேன். "பேப்பர் வாங்கிறதில இருக்கிற ஆர்வம் வீட்டுக்கு சமையல் சாமான் வாங்கிப் போடவேணுமென்டுறதில துளியுமில்லை" என்று குசினிக்குள்ளிருந்து புகைச்சல் வெளிக் கிளம்பியது. காலைக் கோப்பியை தியாகம் செய்து, வாலைச் சுருட்டிக் கொண்டு ஒரு மூலையில் சுருண்டேன். என் இன்றைய முழுவியளம் நாய் வியளமாக மாறிப் போனது.

### தெரு நாய்களும், தெறிக்கும் தகவல்களும்.

இலங்கையில் சுமார் 5 இலட்சம் தெரு நாய்கள் உலாவருவதாக புள்ளி விபரங்கள் சுட்டுகின்றன. இதில் யாழ்.மாவட்டத்தில் சுமார் 23000 தெருநாய்கள் திரிவதாகவும் கூறப்படுகின்றது. தெரு நாய்களில் பெரும்பாலானவை உரித்தாளரைக் கொண்டுள்ள போதிலும் உரிய பராமரிப்பின்மை மற்றும் கைநெகிழ்தல் காரணமாக அவை வீதிகளில் உலாவுகின்றன.

நாடு முழுவதிலும் தினமும் சராசரி 2000 பேர் வரை நாய்க்கடி மற்றும் நாய்களால் ஏற்படும் விபத்துக்களால் பாதிப்புறுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாய்க்கடிக்கு உள்ளானவர்களுக்கான தடுப்பூசிகள் மற்றும் நாய்களுக்கான தடுப்பூசிகள் ஏற்றல் போன்றவற்றிற்காக அரசு வருடாந்தம் 400 மில்லியன் ரூபாய்களை செலவிடுகின்றது. இந்த அடிப்படையில் பார்க்கும் போது நாய்களின் தொல்லைக்கு அரசு செலவிடும் பணம் வருடாந்த கல்விக்கான செலவீனத்தில் 10 விகிதமாகும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் அனுமதி உரிமம் பெறல் மற்றும் பராமரிப்புச் செலவீனம் போன்றவற்றால் பெருமளவு நிதி நாய்களை வளர்ப்போரிடமிருந்து அரசுக்கு கிடைக்கின்றது. ஆனால் எம் நாட்டில் நாய்களுக்கான உரிமப் பத்திர வரி சொற்பமாகவேயுள்ளது. ஆயினும் அதைக் கூட பலர் செலுத்துவதில்லை. மேலும் தடுப்பூசிகள் செலுத்துவதும் இலவசமாகவே இடம்பெறுகின்றது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் நாய்கள், அரசிற்கான வருமான மார்க்கமாக விளங்க, நம் நாட்டிலோ நாய்கள் அரசின் வருமானத்தைச் சுரண்டுபவையாகவே விளங்குகின்றன. ஆயினும் விலங்குகளின் நலன் பேணும் அமைப்புக்களின் அழுத்தங்கள் காரணமாக நாய்களின் தொல்லைகளுக்கெதிராக காத்திரமான நடவடிக்கையெதனையும் எடுக்க முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. இவர்களைத் திருப்திப்படுத்த 2006 ஆம் ஆண்டில் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் வீதிகளில் உலாவும் உரிமை கோரப்படாத நாய்கள் 1897 ஆம் ஆண்டு விலங்கு விசர்க்கடி சட்ட மூலத்தின் படி நச்சுப்புகையூட்டப்பட்டு கொல்லப்படும் நடைமுறை புழக்கத்திலிருந்தது.

2015 ஆம் ஆண்டில் 24 பேர் விசர் நாய்க் கடியினால் மரணித்தனர். யாழ்.மாவட்டத்திலும் இவ்விதமான 2 உயிரிழப்புக்கள் நிகழ்ந்தன. ஆயினும் குறித்த ஆண்டில் வீதி விபத்துக்களில் 2772 பேரும், தற்கொலைகளில் 3059 பேரும் உயிரிழந்திருந்தனர் என்றும், இவற்றுடன் ஒப்பிடும் போது நாய்களால் ஏற்பட்ட மரணங்கள் சொற்பமென்றும், நாய்களுக்கெதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்கக் கூடாதென்றும் விலங்கு நலன் ஆர்வலர்கள் வாதிக்கின்றனர். விசர் நாய்க்கடியால் கடந்த வருடம் 5 பேர் இறந்திருந்தனர். இவ்வருடம் அவ்விதமான இறப்புக்கள் இதுவரை பதிவாகவில்லை.

முன்பொரு காலத்தில் கஷ்டத்தின் மத்தியில் வாழ்வோர் "நாய்ச் சீவியம்" அல்லது "நாய்ப் பிழைப்பு" என தம் வாழ்வை நொந்து கொள்வ




> "நாய் கடித்தவுடன் காயத்தை 5 நிமிடங்கள் வரை தொடர்ந்து கழுவுதல் வேண்டும். சவர்க்காரம் போட்டு கழுவுவது சிறந்தது. இதன்மூலம் கடிகாயத்திலுள்ள கிருமிகள் எண்ணிக்கை குறைக்கப்படும்.
> கடித்த நாயின் உரிமையாளர் இருப்பின் அதற்கு தடுப்பூசி போட்ட விபரங்களை அறிதல் அவசியம். 10 நாட்களுக்கு குறித்த நாயின் நடத்தைக் கோலங்களை கண்காணிப்பது அவசியம். 10 நாட்களுக்குள் அது இறந்துவிட்டால் விலங்கு விசர் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கக் கூடிய வாய்ப்புண்டு. எது எவ்வாறாயினும் உடனடியாகவே வைத்தியசாலை சென்று தடுப்பூசியேற்றுவதே எம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றும் ஒரே வழி."

துண்டு. ஆனால் இன்று நாய்களுக்குள்ள சுதந்திரம் நமக்கில்லையேயென்று நாம் அவற்றை பார்த்து பொறாமைப்படும் நிலையேற்பட்டுள்ளது

### என்று தணியுமிந்த நாய்களின் தொல்லை

நாய்களால் ஏற்படும் தொல்லைகளை இக்கட்டுரை வாயிலாகத் தான் நீங்கள் அறியவேண்டுமென்பதில்லை. அவற்றை நாம் அன்றாட அனுபவிக்கின்றோம். நாய்களால் மனிதர்க மோதிக் கொண்ட நிகழ்வுகளுமுண்டு. குடு பங்கள் பிரிந்த கதைகளுமுண்டு.

நாய்களைக் கொல்லக்கூடாது, வதைக்கக்கூடா என்று சட்ட ஏற்பாடுகள் இருந்தாலும் கொழும்பு மாநகரசபை உட்பட சில உள்ளூராட்சி மன்றுக இரகசியமாக நாய்களை கடந்த வருடங்களி அழித்துள்ளதாக விலங்கு நலன் ஆர்வலர்க குற்றம் சுமத்துகின்றனர். ஆயினும் தாம் அவ்







## அக்னி

தம் செயற்படவில்லையென்றும், நாய்ப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த இனப் பெருக்கத்தடைச் சிகிச்சை மற்றும் குட்டிகளுக்கான புகழிடங்கள் போன்ற செயன் முறைகளூடாக தெருநாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்து வதாகவும் மேற்படி நிறுவனங் கள் நியாயிக்கின்றன.

தெருநாய்களின் தொல்லையை குறைக்க அரசு 4 புகழிடங்களை அகங்கம, மிடிகம, புவக்வத்த, கொன்கஸ்கென போன்ற இடங்க ளில் அமைத்துள்ளது. இதைவிட விலங்குநலன் ஆர்வலர்களும் பல புகழிடங்களை நடத்தி வரு கின்றனர். "ஓடல்" (Odel) நிறுவ னத்தின் நிறுவுநர் ஒற்ராறா குணரத்னவினால் நடத்தப்படும் புகழிடம் இவற்றில் தனித்துவமா னது.

நாடுமுழுவதும் நாய்களின் தொல்லையிருந்தாலும்,வட புலத் திலேயே அவை நகரங்களிலும், பெருவீதிகளிகளிலும் எவ்வித கட்டுப்பாடுமின்றித் திரிவது அதிக மாகவுள்ளது.

நாய்களை வளர்ப்போரில் பெரும்பாலோனோரின் அக்கறை யீனமும் பொறுப்பற்ற தன்மை யுமே தெரு நாய்களின் பெருக்க த்திற்கு முக்கியமான காரணமா கும். வீட்டில் ஈனப்படும் குட்டி களை பொதுவிடத்தில் விடுவதும், தாம் வளர்க்கும் நாய் வயோதி பத்தையடைந்ததும் அல்லது அவற்றின் மீதான ஆர்வம் குறை யும் போதும் அவற்றைக் கவனிப் பின்றி விடுவதும் இவற்றில் பிரதானமான காரணங்களாகும். இதில் எம்மவரின் பொதுநலன் தொடர்பான அக்கறையற்ற மனப் பாங்கே பிரதிபலிக்கின்றது.

ஜப்பான் நாடு சென்றுவந்த நம் பேராசிரியரொருவர் சொன்ன விடயம் நம் சிந்தனைக்குரியது. அங்கு அதிகாலையில் பெரும்பா லானவர்கள் நடைப் பயிற்சி செய் வார்கள். அப்போது தம் வளர்ப்பு நாய்களையும் சங்கிலியில் பிணைத்து அழைத்துச் செல்வார் கள். கூடவே கையுறை, கைமண்வாரி (hand shovel) மற்றும் பொலித்தீன் பை என்ப வற்றையும் எடுத்துச் செல்வார் கள். எந்தவிடத்திலாவது அவர்க ளின் நாய் மலம் கழித்தால் உடனடியாகவே கையுறையைப் போட்டுக் கொண்டு கைமண் வாரியால் அதை அள்ளி பொலித் தீன் பையில் போட்டு தம்முட னேயே வீட்டுக்கு எடுத்துச் சென்று உரியவகையில் அப்புறப் படுத்துவார்கள். இங்கோ நம்மவர் கள் நாயை அந்த நேரத்தில் வெளியே போய் இருக்க பழக்கி யுள்ளார்கள் அல்லது அதை அள்ளி வீதியில் எறிந்து விடுகிறார்கள். ஜப்பான்காரரின் மனநிலை எங்கே, யாழ்ப் பாணத்தாரின் மனநிலை யெங்கே. எம்மவர் மனநிலையில் நிச்சயம் மாற்றம் தேவை.

நாய்கள் வளர்ப்பது தொடர்பி லான இறுக்கமான நடைமுறைகள் இங்கில்லாதிருப்பதே இப்பிரச்சி னையின் அடிப்படையாகும். மேற் கத்தைய நாடுகள் போன்று வளர்ப்பு பிராணிகளை வளர்ப்பதற்கான அனுமதி பெற கடுமையான நிபந்த னைகள், உரிமவரிகள், சட்ட ஏற் பாடுகள் இருப்பின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வர வாய்ப்புள் ளது.

டெங்கு தொடர்பான கண்கா ணிப்பு நடைமுறை போல் உள்ளூ ராட்சி சபை அலுவலர்கள், சுகாதாரப் பிரிவினர், பொலிஸார் இணைந்த பறக்கும் படையணிகள் உருவாக் கப்பட்டு வீடுகள் தோறும் நாய்கள் தொடர்பான சோதனைகள் கிரம மாக மேற்கொள்ளப்படுதல் வேண் டும். ஆண்டுக்கான அனுமதி உரிமம் பெறாமை, தடுப்பூசிகள் கிரமமாக போடப்படாமை மற்றும் தெருக்களில் நாய்களை விடுதல் போன்றவற்றிற்கு எதிராக உரிமை யாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கடுமையான தண்டம் அறவிடப்படும் பட்சத்தில் நாய்த் தொல்லை கட்டுப்பாட்டிற்குள் வரவாய்ப்புள்ளது.

உள்ளூராட்சி அமைப்புக்களும் தெருநாய்கள் தொடர்பில் அக்கறை செலுத்துதல் வேண்டும். யாழ். மாநகர முதல்வரும் நாய்களின் தொல்லை தொடர்பில் கவனம் செலுத்தி பொருத்தமான நடவடி க்கை எடுக்கப்படுமென அண்மைய அமர்வொன்றில் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆயினும் கருத்துக்கள் காத்திரமான செயலுரு பெறவேண்டும்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சில நாடுகள் இலங் கையில் தெருநாய்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு அறி வுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இது நாட்டின் சுற்றுலாத்துறை வருமானத்தை பாதிக்கக் கூடிய விடயமாகவும் மாற்றம் பெறலாம்.

சீனாவிலே நாய்த் திருவிழா எனவொரு உணவுத் திருவிழா ஆண்டுதோறும் இடம்பெறுவது வழமை. இதில் நாய்க்கறி பரி மாறப்படுவதுண்டு. இத்தகைய நாய்த் திருவிழாவை இங்கும் அடிக்கடி நடத்தினால் நாய்த் தொல்லை குறையுமென்கிறான் என் குறும்புக்கார நண்பன். ஆனால் நாய்களின் பிரச்சினை ஜீவகாருண் யத்துடன் அணுகப்பட வேண்டிய தொன்று. அதேவேளை பொது நலன் தொடர்பிலும் அதிக கவனம் தேவைப்படுகின்றது.

தெருநாய்களின் ஆக்கிரமிப்பி லிருந்து எமக்கு விடுதலை கிடை க்குமா????. அதுவரையில் நம் மைச்சூழ வவ்.....வவ்... வவ்....... தான் தொடர்ந்து எதிரொலிக்கும்.

## இது நம்ம கதைகள்... 27

# கனாக் காணும் காலம்..


பறவையைக் கண்டு தானும் அதுபோல் பறக்க வேண்டுமென்ற மனிதனின் கனவே விமானத்தைப் படைத்தது. இந்தக் கனவு நனவாக அவன் சந்தித்த வேதனைகள், சோதனைகள் ஏராளம். ஆரம்பத்தில் பறவை போல் இறக்கை கட்டி பறக்க முற்பட்ட மனிதரில் சிலர் மடிந்தனர், வேறு சிலர் விழுந்து முறிந்தனர். ஆயினும் மனிதன் கனவு காண்பதை நிறுத்தாததால் அவனால் இன்று விண்ணில் மட்டுமல்ல விண்வெளியிலும் பறக்க முடிகிறது.




17.12.1903 அன்று அமெரிக்கர்களான வில்பர் ரைட் மற்றும் ஓர்வில் ரைட் ஆகியோர் தாம் உருவாக்கிய இயந்திரத்தை பறக்க வைத்து வெற்றிகரமாக முதல் விமானத்தை உலகிற்கு அறிமுகம் செய்தனர். இருப்பினும் நவீன பறப்பு முயற்சிகள் 1799 இல் ஜோர்ஜ் கெய்லி இட்ட அடித்தளத்திலிருந்து தொடர்ந்தன. 1867 முதல் 1896 வரையிலான காலப்பகுதியில் ஜேர்மனியரான ஒற்றோ லிலிந்தாள் விமான உருவாக்கல் முயற்சியில் கணிசமான முன்னேற்றம் கண்டார்.

உலகின் முதலாவது கட்டமைக்கப்பட்ட விமான சேவை அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் 1.1.1914 இல் இடம்பெற்றது. இன்று இயங்கும் விமான சேவைகளில் நெதர்லாந்தின் "KLM" (1919), அவுஸ்ரேலியாவின் "குவண்டஸ்" (1921)ஆகியவை நீண்ட கால வரலாறு கொண்ட விமான சேவைகளாகும்.

இலங்கையின் வான் பரப்பில் 12.9.1911 இல் ஆங்கிலேயரான கொலின் பிறவுன் என்பவர் தனது விமானத்தில் பறந்து பறப்பு வரலாற்றை ஆரம்பித்து வைத்தார். இலங்கையின் முதலாவது உள்ளூர் விமான சேவைய்ய "எயார் சிலோன்" 10.12. 1947 இல் இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையில் ஆரம்பித்தது. "சீத்தாதேவி" என பெயரிடப்பட்ட "டக்ளஸ் C 47" ரக விமானத்தில் கப்டன் பீற்றர் பெர்னாண்டோ என்ற விமானி தலைமையில் 16 பயணிகள் முதல் விமான சேவைப் பயணத்தில் இடம்பெற்றிருந்தனர். 1949 இல் இலங்கையின் சர்வதேச விமான சேவை ஆரம்பமாகியது. விமானப் பறப்புக்கள் பற்றிய வரலாறுகள் ஒருபுறமிருக்க, அதில் பயணிப்போர் பற்றிய சுவாரஷ்யமான கதைகளும் பலவுண்டு.



ஒரு நாட்டின் மூன்று முக்கிய அரசியல்வாதிகள் விமானமொன்றில் ஒன்றாகப் பயணித்தனர். அவர்கள் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாயினும் ஒன்றாக அமர்ந்திருந்து கலகலப்பாக சம்பாஷித்தனர். தமது அரசியல் சாணக்கியம் பற்றி பீற்றிக் கொண்டனர்.

முதலாவது அரசியல்வாதி சொன்னார் "என்னிடம் ஒரு கோடி ரூபாய் பணம் இப்போது இருந்தால் அதை 5000 ரூபாயாக மாற்றி கீழே போடுவேன். அதை பொறுக்கியெடுக்கும் இரண்டாயிரம் பேரின் வாக்குகளும் எனக்கே கிடைக்கும்".

இரண்டாவது அரசியல்வாதி நமட்டுச்சிரிப்புடன் "என்னிடம் ஒரு கோடி இருந்தால் அதை 1000 ரூபாவாக மாற்றி கீழே போடுவேன். அதைப் பொறுக்கியெடுக்கும் பத்தாயிரம் பேரின் வாக்குகளும் நிச்சயம் எனக்குத் தான் கிடைக்கும்" என்றார்.

மூன்றாவது அரசியல்வாதி தன் சால்வையை சரி செய்து கொண்டே "எனக்கு ஒரு கோடி ரூபாய்கள் கிடைத்தால், அதை 100 ரூபாயாக மாற்றி கீழே போடுவேன். அதைப் பொறுக்கியெடுக்கும் ஒரு இலட்சம் பேரின் வாக்கும் எனக்குத் தான் கிடைக்கும் " என்றார்.

இவர்கள் கதைத்துக் கொண்டிருந்ததை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த விமானி அவர்களருகே வந்து "இன்னும் சில நிமிடங்களில் இந்த விமானம் உங்களோடு சேர்ந்து கீழே விழப்போகிறது. உங்கள் கணக்குப்படி பார்த்தால் இந்த நாட்டு மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளும் எனக்குத் தான் கிடைக்கும்" என்று சொல்லிக் கொண்டு விமானத்திலிருந்த ஒரேயொரு பரசூட்டை கொழுவியவாறு கீழே குதித்தார். விமானியின் பரசூட் விரிவதை தடுமாறும் விமானத்திலிருந்து தலைவர்கள் மூவரும் விழிபிதுங்கப் பர்த்துக் கொண்டேயிருந்தனர்.

**தன்னிலை உணர்தலே தலைமைத்துவத்திற்கு அழகு**

**எப்.எக்ஸ்.அன்ரன்**



# எது இவர்களை ஒன்று சேர்க்கிறது? இவர்களின் பிரச்சினை என்ன? வெட்ட வெட்ட முளைப்பது எப்படி? அடங்காமல் இருப்பது ஏன்? அழகிய நாடு ஏன் ஐ.நா. வரை போனது?

பெரும்பான்மை சிங்கள உறவுகளே, அரசாங்க இயந்திரமே பேரினவாதிகளே, ஆட்சிப் பீடமேறிய எங்கள் அரசியல்வாதிகளே!

ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ளுங்கள். அடிமைத்தனத்தாலும் அடக்குமுறையாலும் கட்டியாளப்பட வேண்டிய காரியம் இதுவல்ல.இது உணர்வு சம்பந்தப்பட்டது. உரிமை சம்பந்தப்பட்டது. இது உயிருக்கும் உடலுக்குமான மகோன்னதமான உணர்வு. இதை அடக்குமுறையால் தற்காலிகமாக தடுக்கலாமேயொழிய நிரந்தரமாக கிள்ளியெறிய எவராலும் முடியாது என்பதை புரிந்து கொள்ளுங்கள். இவர்கள் என்றென்றும் இந்த மாவீரர்கள் தான் எங்கள் மீட்பர்கள், இனம் காக்க வந்த நாயகர்கள் என்று போற்றுவதை அதிலுள்ள நியாயத்தை ஆயினும் உணருங்கள். நீங்களும் கூர்ப்படைந்த மனிதர்கள் என்பது எங்களுக்கு தெரியும். உங்களுக்குள்ளும் மனிதாபிமானம் உண்டென்றும் எங்களுக்கு தெரியும். இவர்கள் உங்களுக்கு எதிராக ஆயுதம் தூக்கவில்லை. உங்களுக்கெதிராக ஆயுதம் தூக்க நீங்களே நிர்ப்பந்தித்தீர்கள். வரலாற்றுத் தவறுகளை அறிய முற்படுங்கள். முப்பது கால ஆயுதப் போராட்டத்துக்களுள் சிக்குண்டது தமிழர்கள் அல்ல அழிந்தது தமிழர்கள் மட்டுமல்ல.. அழகிய இந்த நாடும் இந்த நாட்டின் பொருளாதாரமும் தான்.

நாங்கள் உங்கள் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, விழுமியங்களை மதிக்கிறோம். அதுபோல எங்கள் உரிமை, சமத்துவம், கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை நாங்கள் பேண ஆசைப்படுகிறோம். நீங்கள் அதிலுள்ள நியாயத்தை அறிந்து கொள்ள ஆவல்படுகிறோம். இந்த நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியின் பின் நீங்கள் பெரும்பான்மை, நாங்கள் சிறுபான்மை என்ற சனத்தொகை வேறுபாட்டுக்கப்பால் நாங்கள் மனிதர்கள் என்று மனத்தால் ஒன்றிணைவோம். இனவாதத்தால் இந்த நாடு சுமந்த வடுக்களை மறக்காமல் இனியொரு வடுவும் போரும் பிரிவும் அவலமும் ஏற்படாதிருக்க அனைவரும் பொறுப்புடன் சேர்ந்து உழைப்போம். நாங்கள் கோருவது வன்முறையையல்ல சமத்துவத்தை,

நாங்கள் கோருவது உங்கள் உரிமையையல்ல எங்கள் உரிமையை, நாங்கள் விரும்பியது, விரும்புவது பயங்கரவாதத்தையல்ல எங்களுக்கான உரித்துரிமையை.

விளங்கிக்கொள்ளுங்கள். இந்தத் தேசம் போர்த்துக்கீசரால் ஆளுகைக்கு உட்பட முன்னர் இங்கு இரு தேசங்கள்/ நாடுகள் இருந்ததை எங்கள் வரலாறுகளும், உங்கள் வரலாறுகளும், உலக வரலாறுகளும் தெளிவாகவே காட்டி நிற்கின்றன.

வரலாற்றின் முந்தைய இலங்கைத்தீவில் தமிழர்தம் தேசத்தில் தமிழர்கள் பெரும்பான்மை இனங்களாகவும், சிங்கள தேசத்தில் சிங்களவர்கள் பெரும்பான்மையாகவும் இரு நாடுகளாக அந்நியர் வருகைக்கு முன்னர் இந்த அழகிய தீவு அமைதியாக இயங்கியிருக்கிறது. ஆனால் அந்நிய ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் இந்த நாடு ஒரு குடைக்குள் இலங்கை என்ற பெயரிலே கொண்டு வரப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தில் பெரும்பான்மையாக இருந்த தமிழர்கள் ஒட்டுமொத்த இலங்கை நாட்டிலும் சிறுபான்மை ஆகிய அந்த சோகக்கதை யாரும் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. இந்தத் தீவிலே யார் முதலில் வந்தோம் யார் வந்தேறு குடிகள் என்று அடிபடுவதற்கும் அவசியமில்லை. "சமஷ்டி" எனும் சமத்துவத்தை தாருங்கள்.

உங்கள் தேசத்தில் நீங்கள் முடிவெடுங்கள். எங்கள் தேசத்தில் நாங்கள் முடிவெடுக்க விடுங்கள்..எம் நாட்டில் நாங்கள் இருவரும் சேர்ந்தே முடிவெடுப்போம். சமத்துவமான ஆரோக்கியமான நாட்டை கட்டியெழுப்புவோம். அனைத்து துறையிலும் இணைந்தே பயணித்து வளர்வோம். பல்லின கலாசார விழுமியங்களை பேணி ஒன்றிணைந்து பயணித்து உலக அரங்கில் மேலுயர்ந்து நிற்போம். வரலாறுகளிலிருந்தும் காலம் கற்றுத்தந்த பாடங்களில் இருந்தும் பாடங்களை விளங்கி அப்பிழைகளை மீண்டும் மீண்டும் விடாது வீறு கொண்டு எழுவோம். அரசியல் சுயலாபங்களுக்காகவும், ஆட்சிப்பீடம் ஏறி சிறுகால பதவி சுகம் காண்பதற்காகவும் உங்கள் மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைககாதீர்கள். அது நாட்டுக்கிழைக்கும் பெரும் பாவம். உங்கள் சிறுகால பதவிக்காக நாட்டில் பல நூற்றாண்டு கால சரித்திரத்தை இரத்தக் கறைபடிய வைக்காதீர்கள். அது இந்த கடலில் மிதக்கும் அழகிய தீவு தாங்காது. இத்துணை அழிவையும், ஏமாற்றத்தினையும், சோகத்தையும் சுமந்து கொண்டுதான் ஏதோ ஒரு விடிவெள்ளி நம்பிக்கைக்காக தமிழர்கள் உங்கள் அனைவருக்கும் உங்கள் வாக்கை நம்பி வாக்களித்திருக்கிறார்கள் என்பதை சாமி கும்பிடும்போதோ அல்லது கழிவறையில் நீங்கள் இருக்கும் போதோ சற்றுச் சிந்தித்து பாருங்கள். நீங்கள் இன்றைய மாவீரர் நிகழ்வுகளை பார்த்து மூக்கில் விரல் வைக்கக்கூடும்., வியக்கக் கூடும். ஏனென்றால் இத் தமிழர்கள் எப்படி இத்தனை இழப்புக்கும் பின்னரும், அடித்து விழுந்த பின்னும் இப்படி உணர்வுடன் கூடுகிறார்கள்.?எது இவர்களை ஒன்று சேர்க்கிறது? என்று யோசித்து இவர்களை எப்படி அடக்கலாம், உணர்வுகளை மழுங்கடிக்கலாம் என்று சிந்திக்கும் நேரத்துக்கப்பால் இவர்களின் பிரச்சினை என்ன? இவர்கள் வெட்ட் வெட்ட முளைப்பதன் தேவை ப்பாடு என்ன? இவர்கள் எத்தனை அடக்குமுறை வந்தாலும் அடங்காது இருப்பதன் காரணம் என்ன? நாட்டில் ஏன் இரத்த வாடை வீசியது? அழகிய நாடு ஏன் ஐ.நா. வரை போனது? அனைத்தையும் கேள்வியாய் கேளுங்கள். அதற்கான முடிவுகளை எடுக்க முற்படுங்கள்.



அனைத்தும் இழந்த பின்னும் இவர்கள் தங்களுக்காக போராடிய மாவீரர்களுக்காக எந்த எதிர்பார்ப்பில்லாமல் கூடி குமுறுகிறார்கள். ஏன்? சிங்கள மக்களே!! ஒரு வேளை உங்களை பல ஆண்டு காலம் நாங்கள் அடக்கியாண்டிருந்தால் உங்கள் மனநிலை எவ்வாறிருந்திருக்கும்? அதை கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்.

வரலாற்றின் முன் பாதிகளில் இலங்கையை பல தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்துள்ளார்கள். அப்போது அவர்கள் உங்களை அடக்கு முறைக்குட்படுத்தவில்லை. எல்லாள மன்னன் உங்களை ஆட்சி செய்த விதம் தான் இன்றும் நீங்கள் அவருக்கு தீபமேற்றி வழிபடக் காரணம். அவர்கள் ஆட்சி செய்த போது உங்களுக்கான அனைத்து உரிமைகளும் தரப்பட்டது. அதனால் தான் இலங்கையில் இன்று உங்களுக்கோர் மகோன்னதமான மத, மொழி, கலாசாரமொன்று எச்சமுள்ளது என்பதை விளங்கிக்கொள்ளுங்கள்.

> நாங்கள் உங்கள் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, விழுமியங்களை மதிக்கிறோம். அதுபோல எங்கள் உரிமை, சமத்துவம், கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை நாங்கள் பேண ஆசைப்படுகிறோம். நீங்கள் அதிலுள்ள நியாயத்தை அறிந்து கொள்ள ஆவல்படுகிறோம்.

நாங்கள் புத்த மதத்திலும் அவரது போதனைகளிலும் கரிசனை கொண்டுள்ளோம். மக்கள் குறை கண்டு அரசு துறந்து துறவறம் சென்ற அந்த மகானின் போதனைகளை பின்பற்றும் உங்களிடமிருந்து நாங்கள் நல்லவற்றையும், சிறப்பானவற்றையும் , நல்லிணக்கத்தையும் காண விரும்புகிறோம்.

காலங்கள் கற்றுத்தந்த பாடங்களை விளங்காது விடின் அது இன்னொரு பாடத்தை எங்களுக்கு ஏலவே தயாரித்து வைத்திருத்திருக்கிறது. அதையும் அது தந்துவிடும் என்பதையும் புரிந்து கொள்வோம். புதிதாய் உங்களிடமிருந்து ஒன்றை எதிர்பார்க்கிறோம்.!!!

கு.மதுசூதன்

# சின்ன தல ரெய்னா மீண்டும் அணிக்கு திரும்புவாரா?

## எதிர்பார்ப்பில் ரசிகர்கள்



மிஸ்டர்.ஐ.பி.எல்., சின்ன தல என்று ரசிகர்களால் அன்புடன் அழைக்கப்படுபவர் சுரேஷ் ரெய்னா. அதிரடியான துடுப்பாட்டம் பெஸ்ட் களத்தடுப்பு, பார்ட் டைம் பந்துவீச்சு என ஒரு காலத்தில் இந்திய அணிக்கும், சென்னை சுப்பர் கிங்க்ஸ் அணிக்கும் நம்பிக்கை நட்சித்திரமாகவும் வலம் வந்தவர். ஐ.பி.எல். வரலாற்றில் சிறந்த துடுப்பாட்டவீரர், இருபது-20 ஸ்பெஷலிஸ்ட் என்று இருபது-20 இல் உலக அளவில் சிறந்த வீரராக அசத்தினார்.



இன்றும் சென்னை சுப்பர் கிங்க்ஸ் அணியின் சுப்பர் ஸ்டார். ஆனால் இன்றைய இந்திய அணியில் இடமில்லை. மீண்டும் இடம்பெற தீவிரமாக முயற்சித்து வருகிறார். இவருடைய வருகைக்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

முதல் ஓவரில் விக்கெட் விழுந்தாலும் சரி, இருபது ஓட்டங்களுக்கு 2 அல்லது 3 விக்கெட்கள் என அணி எப்படிப்பட்ட கட்டத்தில் இருந்தாலும் சரி, ஓட்ட எண்ணிக்கையை குறைக்காமல் தனது ஆட்டத்தை வெளிப்படுத்துவார். அதே சமயம் தன்னுடைய விக்கெட்டை எளிதாக பறிகொடுக்கமாட்டார்.

பொதுவாக வேகப்பந்து வீச்சில் பெரும்பாலான துடுப்பாட்ட வீரர்கள் பவுண்டரிகள் அதிகம் அடிப்பார்கள். சிக்ஸர்கள் மிகவும் அரிதாக பறக்கும். ஆனால் ரெய்னாவை பொறுத்தவரை, ஆட்டத்தின் தொடக் கத்திலும் வேகப்பந்து வீச்சில் சிக்ஸர்களை சர்வ சாதாரணமாக விளாசுவார். இருபது-20 போட்டிகளில் இவருடைய துடுப்பாட்டத்திற்கு இணை, இவர் மட்டுமே.

சென்னை சுப்பர் கிங்க்ஸ் அணி ஐ.பி.எல்.-லில் மிகச் சிறந்த அணியாக வலம் வருகிறது. அதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று சுரேஷ் ரெய்னாவின் ஆல்-ரவுண்டர் ஸ்கில் தான். இன்சைடு-அவுட், கவர் டிரைவ் ஷாட்கள் இவருடைய ஸ்பெஷல் ஷாட்கள். இவரை போல யாரும் இன் சைடு-அவுட் ஷாட்களை எளிதாக ஆடமுடியாது. தமிழ்நாட்டில் இவருக்கு என்று தனி ரசிகர்கள் பட்டாளம் உண்டு.

இவருடைய பீல்டிங் எப்பவும் தனி ஸ்பெஷல் தான். ஸ்லிப்பில் கேட்ச், லாங் பீல்டிங்கில் டைவ் கேட்ச், கிரவுண்ட் களத்தடுப்பு மூலம் ஓட்டங்களை தடுத்தல் என குறைந்தது ஒரு போட்டிக்கு 10 ஓட்டங்களையாவது அணிக்கு சேகரித்து கொடுப்பார். பார்ட்டைம் பந்துவீச்சாளராக அணியை பலமுறை வெற்றி பெற வைத்துள்ளார். டோனி தலைவராக இருக்கும் போது எதிர் அணியில் பார்ட்னர்ஷிப்பை பிரிக்க சுரேஷ் ரெய்னாவை அழைப்பார். பல



முறை முக்கியமான விக்கெட்களை எடுத்து ஆட்டத் தின் போக்கை மாற்றியுள்ளார்.

ஐ.பி.எல்.-ல் இதுவரை 172 இன்னிங்க்ஸ் ஆடி 448 பவுண்டரிகள், 185 சிக்ஸர்கள் உட்பட 4985 ஓட்டங்கள் குவித்துள்ளார் ரெய்னா. துடுப்பாட்ட சராசரி 34, ஸ்ட்ரைக் ரேட் 138. 27 முறை நாட் அவுட் துடுப்பாட்ட வீரர். 25 விக்கெட்களையும் எடுத்துள்ளார். எக்னாமி ரேட் 7.4. களத்தடுப்பில் 95 கேட்ச்கள் பிடித்துள்ளார். ஒரு பீல்டராக ஐ.பி.எல்லில் அதிக கேட்ச் பிடித்தவர் இவர் தான். ஐ.பி.எல்.-லில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற பெருமையும் ரெய்னாவுக்கு உண்டு.

டோனி சென்னை சுப்பர் கிங்க்ஸ் அணியில் இல்லாத போது ரெய்னா தலைவராக இருந்துள்ளார். ஐ.பி.எல்.-லில் சென்னை சுப்பர் கிங்க்ஸ் அணிக்கு தடை விதிக்கப்பட்ட போது குஜராத் லைன்ஸ் அணியில் தலைவராக விளையாடினார். 2016 ஐ.பி.எல்.-லில் குஜராத் லைன்ஸ் அணியை ப்ளே-ஆப் சுற்று வரை அழைத்து சென்றார். நடைபெற்ற அனைத்து ஐ.பி. எல்.-தொடர்களிலும் 300 ஓட்டங்கள் எடுத்த ஒரே வீரர் ரெய்னா.

ஐ.பி.எல்.-ல் மட்டுமல்ல. இந்திய அணியிலும் ஏராளமான சாதனைகள் புரிந்துள்ளார். இருபது-20 இல் சதம் அடித்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையை உடையவர். இருபது-20, ஒருநாள் போட்டி, டெஸ்ட் போட்டி என மூன்று போர்மேட்டிலும் சதம் அடித்த முதல் இந்திய வீரர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர். இருபது-20 போட்டிகளில் 6000 ஓட்டங்கள் எடுத்த முதல் இந்திய வீரர் சுரேஷ் ரெய்னாதான்.

2011 உலகக்கோப்பையை வெல்ல முக்கிய காரணமாக இருந்தார். அந்த உலகக்கோப்பையில் காலிறுதி மற்றும் அரை இறுதியில் இவருடைய ரன்கள் 34*, 36*. 2015 உலகக்கோப்பையில் ஒரு சதம், 2 அரை சதங்கள் உட்பட 284 ஓட்டங்கள் குவித்தார். துடுப்பாட்ட சராசரி 57. இருப்பினும் அதற்கு பிறகு இந்திய அணியில் ஒருநாள் போட்டிகளில் பெரிதாக சோபிக்கவில்லை.

சுரேஷ் ரெய்னா மீண்டும் இந்திய அணியில் இடம் பெறும் தகுதி உடையவர் என்று நிரூபித்துள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக இந்த வருடம் நடந்த இருபது-20 தொடரில் அவரது துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. 24 பந்துகளில் 31, 27 பந்துகளில் 43 என அசத்தினார். பின்னர் நடைபெற்ற இருபது-20 போட்டிகளிலும் ஓரளவு ஓட்டங்கள் குவித்துள்ளார்.

32 வயதான அவர் இன்னும் சுறுசுறுப்பாகவும், உடல் தகுதி உடனும் உள்ளார். மற்றவர்களை பாராட்டுவதில் முதல் ஆளாக இருப்பார். அது களத்தடுப்பு அல்லது சிறப்பான பந்து வீச்சு அல்லது விக்கெட் என எதுவாக இருந்தாலும் சரி. ஈகோ இல்லாமல் செயல்படும் ஒரு சில வீரர்களில் இவரும் ஒருவர். விக்கெட்டுகளுக்கு இடையே அவரது ஓட்டம் இன்றும் நன்றாகவே உள்ளது. எனவே விரைவில் மிகச்சிறப்பான ஆட்டங்களை வெளிப்படுத்தி இந்திய அணிக்கு திரும்புவார் என ரசிகர்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

# ஆக்ரோஷம்

வலம்புரி சங்குநாத வாசகர்களுக்கு இனிய ஞாயிறு வணக்கம் கூறுவதில் ஜிம்மிக்குட்டி பெருமகிழ்ச்சி அடைகிறேன். காற்றும் மழையும் மாறி மாறி வந்துவந்து போய்க் கொண்டிருக்கிற கால நிலை மாற்றம் ஒரே பிரச்சினையாக் கிடக்குது. மனிசர் எல்லாம் ஒரே வருத்தம் எண்டு ஆஸ்பத்திரியும் மருந்துப் போத்திலும் கொண்டு திரியுதுகள். காய்ச்சல், தடிமன் எண்டு எல்லா வீடுகளிலும் நோயாளிகள் தான். பெரியவர்கூட சால்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு சாய்மனைக் கதிரையில படுத்திருக்கிறார். காய்ச்சல் வந்து இப்ப கொஞ்சம் சுகம். இஞ்சிச் சம்பலோட உப்புக் கஞ்சி குடிச்சிட்டுப்படுத்திருந்தாலும்



யாராவது வந்து ஏதாவது படிப்பு விசயமாக் கேட்டால் மறுக்க மாட்டார். உடனே எழும்பி விளக்கம் குடுக்க வெளிக்கிட்டிடுவார். அப்படியொரு பண்பாடு. ஓமோம்– நல்லாசான் எண்டால் அப்பிடித் தான். படிப்பு விசயமா என்ன கேட்டாலும் யார் வந்து கேட்டாலும் உடனே உதவி செய்ய வெளிக்கிட்டிடுவார். யாரோ இரண்டு பேர் வந்திருக்கினம் ரீச்சரவை போல கிடக்கு. பெரியவர் கதிரையைக் காட்டிப் போட்டு நிமிர்ந்திருக்கிறார்.

ம்...ம்...பாலாண்ணையும் வந்திட்டார். ஏதோ தொடர்பாடலாம். வெளிப்பாடாம். மூண்டு விதமான வெளிப்பாடாம். எனக்கும் விளங்குது. ஆனால் வடிவாச் சொல்லத் தெரியேல்லை...பொறுங்கோ பெரியவரே சொல் லுறார் கேப்பம்.

"கருத்துக்களைப் பரிமாறுவதற்கு ஒருவர் இன்னொருவரோடு தொடர்பு கொள்ள வேணும். வார்த்தையாகவும் இருக்கலாம். பார்வையாலையும் உடல் மொழியாலும், சைகைகளாலும் கருத்தைப் பரிமாறலாம். உரையாடலின் இடையே கருத்துப் பரிமாற்றத்தை ஏற்பதும் ஏற்காது மறுப்பதும் நிகழும்.அவரவர் மனநிலைகளுக்கு ஏற்ப குரல் உயர்வதும் அழுத்தம் அதிகரிப்பதும் நிகழலாம். ஏற்றத் தாழ்வானவர்கள் மத்தியில் நிகழும் உரையாடல் மூன்று முக்கிய நிலைகளை வெளிப்படுத்தி நிற்பதை அவதானிக்கலாம்.

- பணிந்து போதல் –தாழ்வான வெளிப்பாடு
- ஆக்ரோஷ வெளிப்பாடு
- உறுதியான வெளிப்பாடு

எதிர்ப்புக் காட்ட முடியாதவர்களிடத்தில் அநேகமாக எல்லோருமே பணிந்து போய்விடுவது இயல்பு. இந்நிலை ஆரோக்கியமானது அல்ல. எதற்கு வீண் பிரச்சினை என்றோ தண்டனைக்கு பயந்தோ மௌனமாக அந்த நிலையில் ஏற்படும் வலியையோ அவமானத்தையோ சகித்துக்கொண்டு, தாங்கிக் கொண்டு ஏதோ தப்பிப் பிழைத்தால் போதும் என்று இருந்து விடுவார்கள்.எதிர்க்கவும் முடியாது.விலக்கவும் முடியாது. பல்லைக்கடித்துக் கொண்டு மென்று விழுங்கிக் கொண்டு இருந்து விடுவார்கள். உண்மையில் இவர்கள் பாவம். தைரியமற்றவர்கள். இவர்களின் பலவீனமான நிலையைப் பலசாலிகள் பயன்படுத்திக் கொள்ளத்தயங்க மாட்டார்கள்.

ஆக்ரோஷ வெளிப்பாடென்பது ஒரு நெருக்கடியான நிலையில் ஒருவர் இன்னொருவரது செயலை ஏற்க முடியாது என்று தோன்றும் போது சடாரென்று இடம், பொருள் பாராது கோபத்துடன் எதிர்த்து வார்த்தையாடுவதோ அல்லது செயற்படுவதோ அல்லது பிறர் முன்பு எடுத்தெறிந்து வெளிப்படுத்துவதோ நிகழும். இதனால் உறவுச் சிக்கல் ஏற்படவோ பழி உணர்வு தோன்றவோ விபரீத நிலை ஏற்படவோ வாய்ப்பு ஏற்பட்டு விடும். இந்த நிலையும் ஆரோக்கியமானதல்ல. இந்த இடத்தில அவமானப்படுத்தப்படுபவர் இன்னோர் தனியான சந்தர்ப்பத்தில இதற்காகப் பழிவாங்கும் அளவிற்குக் காத்திருப்பார்கள். இது மிகவும் ஆபத்தை விளைவித்து விடலாம்.

உறுதியாக வெளிப்பாடென்பது மிகவும் ஆரோக்கியமான ஒன்றாகும். அதாவது ஒரு நெருக்கடி நிலை தோன்றும் போது ஒருவரால் இன்னொருவர் பாதிக்கப்படும் நிலையில் பாதிக்கப்படுபவர், பாதிப்பை ஏற்படுத்தியவரை நிதானமாக நிமிர்ந்து பார்த்து பதட்டப்படாது, கோபப்படாது ஆரோக்கியமான, மரியாதையான சொற்பிரயோகத்துடன் தனக்கு ஏற்பட்டுள்ள உணர்வையும், நடந்து கொண்டிருக்கும் சம்பவத்தையும் உறுதியாக எடுத்துக் கூற வேண்டும்.சுற்றி நிற்பவர்களும் இந்த முறையைப் பண்பான முறை என்று ஏற்றுக்கொள்வார்கள்..."

பெரியவர் சற்று ஆசுவாசப் படுத்திக் கொள்ளும்படி இடைவெளிக்கு இடையிலை லதாக்குட்டி எட்டிப் பாத்திட்டு வந்து கேள்வி கேட்கிற மாதிரி நிக்கிறா.

"ஏன் தாத்தா சும்மா இப்பிடிச் சொன்னால் எல்லாருக்கும் விளங்குமோ–உதாரணத்தோடை சொன்னாத்தானே என்னைப் போல சின்னப்பிள்ளைகளுக்கு விளங்கும். ம்...சொல்லுங்கோ" பெரியவர் சிரிக்கிறார்.

"ஓமோமோம் கேளுங்கோ சொல்லுறன். ஒரு பஸ்ஸில பயணம் செய்து கொண்டிருக்கிற போது இடித்து நெருங்கித் தள்ளுப்படுறபோது ஒரு பள்ளிக்கூட மாணவி நெரிசல்படுறா.

ஆம்பிளையாக்கள் நெருக்கமாத்தள்ளினம்.அப்போது அவ எப்பிடி இந்த நிலையை வெளிப் படுத்திறா எண்டு பாப்பம்.

- நெருக்க நெருக்க ஒடுங்கி ஒடுங்கி ஓரமாகவே போறா.
- நெருக்கின உடனே "என்ன கண்மண் தெரியேல்லை தள்ளாமல் பின்னாலே போங்கோ" என்று கோபமா சத்தமாச் சொல்லுறா.
- நெருக்கின உடனே புத்தகங்களை மார்போடு அணைத்துக் கொண்டு உறுதியாக, "அண்ணை நீங்கள் நெருக்கிறதாலை கஷ்டமாயிருக்கு. ஒன்றில் முன்னுக்குப் போங்கோ. இல்லாட்டி என்னைப் போக விடுங்கோ" என்று சொல்லுறா. இந்த மூன்றாவது வெளிப்பாட்டினால் எவருக்கும் கோபமோ பழியுணர்வோ ஏற்பட வாய்ப்பில்லை.

உணர்வென்று குறிப்பிடப்பட்டது அவவுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை– சம்பவம் ஒன்று குறிப்பிடப்பட்டது. நெருங்கிக் கொண்டு தள்ளுவதை எப்பொழுதும் பிரச்சினைகளை வளர்த்து பலர் நடுவே பெரிதுபடுத்தும் போது தான் அந்தச் செயலைச் செய்தவர்கள் அவமானப்படுத்தப்படுவார்கள். அதன் விளைவு இன்னோர் தடவை ஆபத்தை ஏற்படுத்த வைத்து விடும். பணிந்து போவதும் தவ றான வெளிப்பாடு. அது தொடர்ந்து நிகழ்வதற்கு நாமே சந்தர்ப்பம் கொடுப்பதாகி விடும். எப்பொழுதுமே ஆக்ரோஷ வெளிப்பாடை நாம் தவிர்த்துக் கொண்டு உறுதியான வெளிப்பாடைப் பயிற்சி செய்து பழகிக் கொள்ள வேணும்"

கேட்டியளே அருமையான விசயம். நானும் அப்பிடித்தான். பிடிக்காத ஆக்கள் வந்தால் ஒருக்கா அழுத்தம் திருத்தமா ஒரேயொரு தடவை குலைப்பன் அவ்வளவு தான். சும்மா புலம்பிற பழக்கம் கிடையாது. சரிசரி எனக்குப் பசிக்குது. போட்டு வாறன்.

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பலே பாண்டியா
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஷ்வநாதன், ரி.ஆர்.ராமமூர்த்தி
பாடியவர்கள்: ரி.எம்.சௌந்தரராஜன், பி.வி. ஸ்ரீநிவாஸ், பி.சுசிலா, ஜமுனா ராணி



அத்திக்காய் காய் காய்
ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக்காய் காயாதே
என்னைப்போல் பெண்ணல்லவோ!
என்னுயிரும் நீயல்லவோ..!

கன்னிக்காய் ஆசைக்காய்
காதல் கொண்ட பாவைக்காய்
அங்கே காய் அவரைக்காய்
மங்கை எந்தன் கோவைக்காய்

மாதுளங்காய் ஆனாலும்
என்னுளங்காய் ஆகுமோ
என்னை நீ காயாதே
என்னுயிரும் நீயல்லவோ

இரவுக்காய் உறவுக்காய்
ஏங்கும் இந்த ஏழைக்காய்
நீயும் காய் நிதமும் காய்
நேரில் நிற்கும் இவ்ளைக் காய்


உருவங்காய் ஆனாலும்
பருவங்காய் ஆகுமோ
என்னை நீ காயாதே
என்னுயிரும் நீயல்லவோ

ஏலக்காய் வாசனைபோல்
எங்கள் உள்ளம் வாழக்காய்
சாதிக்காய் பெட்டகம் போல்
தனிமை இன்பம் கனியக்காய்

சொன்னதெல்லாம் விளங்காயோ
தூது வழங்காய் வெண்ணிலா
என்னை நீ காயாதே
என்னுயிரும் நீய்ல்லவோ..

உள்ளமெலாமிளகாயோ
ஒவ்வொரு பேச்சுரைக்காயோ
வெள்ளரிக்காய் பிளந்தது போல்
வெண்ணிலவே சிரிக்காயோ

கோதையென்னை காயாதே
கொற்றவரைக் காய் வெண்ணிலா
இருவரையும் காயாதே
தனிமையில் ஏங்காய் வெண்ணிலா




தமிழ் சினிமாவின் வர்த்தகத்தை ஒவ்வொரு முறையும் அடுத்தக்கட்டத்திற்கு எடுத்து செல்பவர்கள் தான் ரஜினியும் ஷங்கரும். அவர்கள் இருவரும் இணைந்து ஒரு படம் செய்தால் அந்த வளர்ச்சியை சிவாஜி, எந்திரனில் பார்த்து இருப்போம், தற்போது அடுத்தக்கட்டமாக உலகமே வியக்கும் 2.0 என்ற ஒரு படைப்பை இருவரும் கொடுக்க, ரசிகர்களுக்கு இப்படம் செம்ம விருந்தானதா? பார்ப்போம்.

படத்தின் ஆரம்பத்திலேயே அக்ஷய் குமார் செல்போன் டவரில் தூக்குப் போட்டு இறக்கின்றார். அதைத் தொடர்ந்து அடுத்த நாளில் இருந்து தமிழகத்தில் உள்ள அனைத்து செல்போன்களும் தொலைந்து போகிறது.

இந்த மாயம் எப்படி நிகழ்கிறது என்று ஆராய்ச்சிக்குழு அரசாங்கத்தின் கீழ் ஆராய்ச்சி செய்யும் போதே பல செல்போன் உரிமையாளர்களும், டெலிகாம் மினிஷ்டரும் இறந்து போகின்றனர்.

அதைத் தொடர்ந்து வேறு வழியில்லாமல் சிட்டியை மீண்டும் கொண்டு வர, சிட்டி அக்ஷய் குமார் திட்டங்களை முறியடித்ததா? என்பதை செம்ம மெசேஜுடனும் பிரமாண்ட காட்சிகளுடன் காட்டியுள்ளார் ஷங்கர்.

ஷங்கர் இந்திய சினிமாவை அடுத்த கட்டத்திற்கு எடுத்து சென்றே ஆக வேண்டும் என்ற குறிக்கோளுடன் வேலை செய்வார் போல. ஒரு படத்தில் பிரமாண்டம் இருக்கலாம், ஆனால், படமே பிரமாண்டமாக இருக்க முடி யும் என்றால் அது ராஜமௌலி, ஷங்கர்என்ற ஒரு சிலருக்கே சாத்தியம்.

மொபைல், நெட்வெர்க் வளர்ச்சி நம் வாழ்வில் எத்தனை ஆபத்துகளை தருகிறது, அதைவிட நம் சுற்றுச் சூழலை அது எவ்வாறு பாதிக்கின்றது, பறவையின் அழிவு, மனித இனத்தின் அழிவிற்கான தொடக்கம் என்ற நல்ல கான் செப்டை தன் ஸ்டைலில் சொல்லி அசத்தியுள்ளார்.

அதிலும் ஏதோ விட்டலாச்சாரியார் படத்தில் வரும் ஆவிக்கதை போல் இல்லாமல், இன்றைய ட்ரெண்டிற்கு ஏற்றவாரு ஆரா (Aura), பாசிட்டிவ் எனர்ஜி, நெகட்டிவ் எனர்ஜி என்று கூறி எளிதில் மக்களுக்கு புரியும் படி கூறியுள்ளார். ஆனால், நடைமுறையில் சாத்தியம் இல்லை என்றாலும், லொஜிக் இல்லாத மஜிக் தானே படமே, என்று கொண்டாடலாம்.

சரி கதை, ஷங்கர், பிரமாண்டம் இருக்கட்டும், சுப்பர் ஸ்டார் படத்தில் எப்படி என்று கேட்பது புரிகிறது. வசீகரன் கதாபாத்திரம், வாய்ஸ் மிகவும் மோசமான அதுவும் ஆங்கில வார்த்தைகளில் அத்தனை தடுமாற்றம் இருக்க, அட என்னடா இது சுப்பர் ஸ்டார் இப்படி ஆகிட்டார் என பேச, சிட்டி எண்ட்ரீ கொஞ்சம் எழுந்து உட்கார வைத்தது.

அதை தொடர்ந்து 2.0 சிட்டி அதகளம் செய்ய, 3.0 சிட்டி(சர்ப்ரைஸ் ரோபோ) வர தியேட்டரே கொண்டாட ஆரம்பித்து விட்டது.

இந்த நம்பர் 1, நம்பர் 2 இந்த போட்டியில் எல்லாம் நான் இல்லை, நான் எப்போதும் ஒன்லி ஒன் என இந்த வயதிலும் பஞ்ச் அடித்து இளம் ஹீரோக்களை அலற விடுகின்றார். அக்ஷய் குமார் அட இவர் படத்தில் இருக்கிறாரா, இல்லையா? என்று கேட்கும் அளவிற்கு செல்ல இடைவேளைக்கு பிறகு வரும் அவரின் ப்ளாஷ்பேக் காட்சிகள் ரசிக்க வைக்கின்றது. வயதான கதாபாத்திரம் என்பதால் ஜெய பிரகாஷ் வாய்ஸும் அப்படியே பொருந்தி நிற்கின்றது.

எமி ஜாக்ஸன் வெறுமென வந்துபோகும் கதாபாத்திரம் தான் பெரிதாக ஒன்றுமில்லை. படத்திற்காக உழைத்த கிராபிக்ஸ் டீமை எழுந்து நின்று பாராட்டலாம். அதுவும் 3டி டெக்னாலஜியின் டைட்டில் கார்டிலேயே நம்மை இழுத்து விடுகின்றனர். கிளைமேக்ஸில் புல்லட் பறப்பது, பறவை அருகில் வருவது என அட இது தமிழ் படம் தானா, இல்லை ஹாலிவுட் படத்திற்கு வந்துவிட்டோமா என்று எண்ண வைக்கின்றது.

இப்படி படம் முழுவதும் பிரமாண்டம், காட்சிக்கு காட்சி ஆச்சரியம் என்று இருந்தாலும், ஷங்கரின் வழக்கமான டெம்ப்ளேட் காட்சிகள் மாறவே இல்லை. அதாவது வித்தியாசமாக ஒருவரை கொலை செய்வதில் அவருக்கு அப்படி என்ன ஆசையோ, இந்தியன், அந்நியன், ஐ-யை தொடர்ந்து இதிலும் தொடர்கின்றது. அதுமட்டுமன்றி ஏதோ பொட்டிக்கட்டைக்கு போய் டீ வாங்கிட்டு வருவது போல் அசால்டாக தடை செய்யப்பட்ட ஆராய்ச்சி கூடத்திற்கு செல்வது எல்லாம் உச்சக்கட்ட லொஜிக் மீறல்.

படத்தின் டெக்னிக்கல் டீமிற்கு அடுத்த வருடம் அனைத்து விருது களும் கிடைத்தாலும் ஆச்சரியமில்லை, முத்துராஜின் கலை, ரசூல் பூக்குட்டியின் சவுண்ட் இன்ஜினியரிங், நீரவ்ஷாவின் ஒளிப்பதிவு, ஆண்டனியின் எடிட்டிங், எல்லாத்திற்கும் மேலாக ரகுமானின் பின்னணி இசை என அனைத்தும் தரம்.

படத்தின் கதை, திரைக்கதை ஐ படத்தில் விட்டதை இதில் பிடித்துவிட்டார் ஷங்கர். படத்தில் பணியாற்றிய அனைத்து டெக்னிக்கல் டீம்.

பிறகு என்ன சுப்பர் ஸ்டார் நீண்ட நாட்களுக்கு பிறகு தன் ஸ்டைலில் விளையாண்டுள்ளார். அக்ஷய் குமார் கஷ்டமான மேக்கப் போட்டும் அவர் காட்டிய மிரட்டல் எக்ஸ்பிரஷன்.

படத்தில் வரும் குட்டி குட்டி வசனம், மனுஷனுக்கு தற்போது தேவை டிவி, சினிமா, சாப்பாடு, மொபைல், நாலு பேருக்கு நல்லதுனா எதுவுமே தப்பில்லை என்று ரஜினியிடமே ரோபோ சொல்வது என சுவாரஸ்யம் தான்.

படத்தில் எல்லையற்ற லாஜிக் மீறல்கள், சுப்பர் ஹீரோ படம் மன்னித்து விடலாம் என்றா லும், ப்ரொபசர் போரா மகன் நெகட்டிவ் எனர்ஜியை வெளியே விடும் காட்சியெல்லாம் காதில் பூ சுற்றல் தான்.

அக்ஷய் குமார் கதாபாத் திரம் அத்தனை கொடூரமாக காட்டி விட்டு ப்ளாஷ்பேக்கில் அவரை அவ்வளவு சாதுவாக காட்டுவது கொஞ்சம் முரண்.

மொத்தத்தில் படம் முடிந்ததும் மொபைலை எடுக்கலாமா வேண்டாமா என்று ஒரு வகை எண்ணத்தை நமக்கே தோன்ற வைத்த ஷங்கரின் இந்த பாசிட்டிவ் எனர்ஜியே 2.0 விட 3.0 மீது எதிர்ப்பார்ப்பை எகிற வைக்கின்றது.



# மட்டக்களப்பில் மர்ம மரணம்!

# முன்னாள் போராளிகளுக்கு ஆபத்து

வவுணதீவில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆயுததாரிகளால் நேற்று முன்தினம் அதிகாலை சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நாடளாவிய ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலைகளுக்கு மத்தியில் தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் இந்தச் சம்பவம் நடந்தேறியுள்ளது.

இரண்டு கைகளும் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி குறித்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் உயிரிழந்துள்ளனர்.

கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டதோடு அவர்களின் கைத்துப்பாக்கிகளும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.


பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட முக்கிய பகுதியாக நீண்டகாலம் விளங்கியது.

இதனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் மீது கொலைப்பழியை சுமத்தும் கைங்கரியமும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு பொலிஸார் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான தகவல்கள் வெளியாகி சில மணித்தியாலங்களில் பழிசுமத்தும் படலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆளும் தரப்பு மீது எதிர்த்தரப்பு குற்றம்சாட்டுவதற்கு இந்தச் சம்பவத்தை எதிர்பார்த்திருந்தது போன்று முன்னாள் போராளிகளை இதற்குள் இழுத்து அபாண்டமான குற்றச்சாட்டை முன்வைத்திருந்தது.

முன்னாள் பிரதியமைச்சரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண முன்னாள் தளபதியுமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) வெளியிட்ட டுவிட்டர் பதிவை அடிப்படையாக வைத்து முன்னாள் போராளிகளை அச்சத்திற்குள்ளாக்கும் வகையில் கொலைப்பழி சுமத்தப்பட்டுள்ளது.







இரண்டு பொலிஸார் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை சட்டம் ஒழுங்கு, தேசிய பாதுகாப்பு விவகாரங் களுடன் தொடர்பு படுத்தி விமர்சிப்பதையோ அல்லது கருணா மீது அரசியல் ரீதியாக எதிர்ப்பு வெளியிடப்படுவதையோ யாரும் எதிர்க்கவில்லை.

ஆனால், எவ்வித விசாரணைகளும் முன்னெடுக்கப்பட முன்னரே முன்னாள் போராளிகளை குற்றவாளிகள் என்று அடையாளப்படுத்துவதைத்தான் ஏற்றுக்கொள்ளவில்லை.

இரண்டு பொலிஸார் படுகொலைச் சம்பவத்துடன் முன்னாள் போராளிகளுக்குத் தொடர்புள்ளது என்றால் அதனை ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும். குற்றவாளிகளைச் சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும்.

நாட்டில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் உள்ள நிலையில் ஒரு படுகொலைச் சம்பவத்திற்கு ஒட்டுமொத்தமாக குற்றம்சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏற்கனவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பலவருடங்களாக சிறைச்சாலைகளில் சித்திரவதைகளை அனுபவித்து நீண்டகாலப் புனர்வாழ்வின் பின் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் வாழ்வாதாரத்திற்காக ஏங்கிக்கொண்டிருக்கும் போது கொலைப்பழியைச் சுமத்துவது வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சும் வேலை.

ஆளும் தரப்பும் ஆண்ட தரப்பும் முன்னாள் போராளிகளை தமது அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

போரிலே அங்கங்களை இழந்து அவதிப்பட்டு - வாழ்வாதாரத்திற்காகப் போராடிக்கொண்டிருப்பவர்களை உயிருக்காகப் போராட வைத்துவிடாதீர்கள!

பொலிஸார் படுகொலைச் சம்பவம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளைக் கண்டுபிடியுங்கள். குற்றவாளிகள் என்று அடையாளப்படுத்திவிட்டு விசாரணைகளை முன்னெடுக்காதீர்கள!

ஏற்கனவே, எவ்வித விசார ணைகளுமின்றி நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் விடுதலை குறித்து நீண்டகாலமாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன. ஆனால், விடுதலைதான் எப்போது என்பது தெரியாமல் உள்ளது.

இது ஒருபுறமிருக்க, இறுதி யுத்த காலப்பகுதியில் இராணுவம் உட்பட முப்படையினரிடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவினர்கள் 600 நாட்களைக் கடந்த நிலையில் வீதியில் கண்ணீருடன் காத்திரு க்கின்றனர்.

அவர்களின் கண்ணீரைப் போக்க அரசோ, அரசிற்கு ஆதரவாக செயற்படுபவர்களோ, அரசை அமைக்க ஆதரவளிப்பவர்களோ எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

காணாமற்போனவர்களின் உறவினர்களின் கண்ணீரையோ, தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களின் கண்ணீரையோ நிறுத்த முடியாத நிலையில் முன்னாள் போராளிகளை இலக்குவைத்து திட்டமிடப்படும் சதி நடவடிக்கைகளைத் தடுக்காவிட்டால் அவர்களின் குடும்பங்களும் கண்ணீர்வடிக்கும் துர்ப்பாக்கிய நிலைஏற்படும்.

உள்நாட்டுப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு பத்தாவது ஆண்டை அண்மித்துள்ள நிலையில் தமிழ் மக்களின் துன்பங்களைப் பெருக்குகின்ற சூழ்நிலைகளே உருவாக்கப்படுகின்றன.

எனவே, மட்டக்களப்பு வவுணதீவில் இரண்டு பொலிஸார் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடிப்படையாக வைத்து முன்னாள் போராளிகளை அச்சத்திற்குள்ளாக்கும் செயற்பாடுகளை கைவிட வேண்டும். இந்தவிடயத்தில் அரச தரப்பாக இருந்தாலும் சரி ஆளும் தரப்பாக வரத்துடிக்கும் தரப்பாக இருந்தாலும் சரி நிதானமாகச் செயற்பட வேண் டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கை.

**எஸ். ஆர். கரன்**

# facebook

# குருவும் சிஷ்யனும்

சிவகுரு என்பது அவருடைய இப்போதைய ஞானப் பெயர். முதலில் அவரது பெயர் சிவச் சந்திரன் என்று சாதாரணமாக இருந்தது. தனக்குத் தானே ஞானம் கிடைத்ததாக அவசரக் குடுக்கை போல் எண்ணியதால் அவர் சந்திரனைத் தூக்கி எறிந்து விட்டுச் சிவத்தை மாத்திரம் முதலில் எடுத்தார். பின்பு அதை மெருகூட்டக் குருவைச் சேர்த்துக் கொண்டார். கடைசியாக மொத்த மாகச் சிவகுரு என்று தனது அடையாளத்தை மாற்றிக் கொண் டார்.

உன்னை நீ அறியாது. நீ உன்னையும் ஏமாற்றி. மற்றவர் களையும் ஏமாற்றுகிறாய்.' என்று ஒரு துறவி சிவகுரு அவரைத் தரிசிக்கச் சென்ற இடத்தில் பிரசா தமும் கொடுக்காது பேசி அனுப் பியதைப் பற்றி அவர் யாரிடமும் சொல்வது இல்லை. அவரால் அதை என்றும் மறக்க முடியாது. அதை எண்ணும் போது எல்லாம் அவருக்குக் குழப்பமாக இருக் கும். கோபம் வரும். கவலையாக இருக்கும். மான அவமானத் தைத் தான் வென்றதாய் நினை த்தாலும் அவமானமாய் இருக் கும். இந்த வாழ்வை இத்தோடு முடித்துக் கொள்வோமோ என்று அவர் பல முறை எண்ணியது உண்டு. உண்மையில் அவரு க்கு அந்தத் துறவி ஏன் அப்படிச் செய்தார் என்று இன்றும் விளங்கவில்லை. சிவச்சந்திரன் சிவகுரு ஆக முதலே அவருக்கு ஒரு சிஷ்யன் கிடைத்திருந்தான். அவன் என்றும் விலகாது அவரைப் பின் தொடர்ந்தான்.

சிஷ்யன் என்றாலும் அவன் சிஷ்யன் இல்லை என்பது போல் நடந்து கொள்வான். இது தனக் குத் தானே ஏற்படுத்திக் கொள் ளும் பிரச்சினை என்பது அவ ருக்கு அப்போது விளங்கவில்லை. ஆனால் சிஷ்யன் எப்போதும் குருவை அதைச் செய்தால் நன் றாக இருக்கும்.இதைச் செய்தால் நன்றாக இருக்கும் என்று நச் சரிப்பான். தன்வழியில் அவரை இழுத்துச் செல்வதில் வெற்றி காண்பான். அவனுக்குத் தனது பிரசன்னத்தின் நோக்கம் என்ன என்பது தெளிவாகத் தெரியும். தன்னிடம் இருந்து தனது குரு தப்பிக்க முடியாது என்பதை அவன் விளங்கி வைத்திருந் தான். அதற்கு ஏற்பவே அவன் மிகவும் தந்திரமாகச் செயற்படு வான்.

அவன் சிவகுருவைக் குடிலை விட்டு வெளியே வா வா என்று எப்போதும் இடைவிடாது நச்சரிப் பான். 'உலகே சுவர்க்கம். அதை முதலில் தரிசிக்க வாருங் கள்.' என்று ஆசை காட்டுவான். சிவ குருவை வெளியே கூட்டிச் செல்வதில் அவனுக்கு அளப்பரிய



பிரியம். முதலில் பணிவாகப் பேசிவந்த சிஷ்யன் வரவரப் பழகப் பழக அதிகாரத் தொனி யோடு பேசத் தொடங்கினான். சிவகுருவுக்கு அவன் பேசுவதில் நியாயம் இருப்பது போல் இருக் கும். அவன் சொல்வதை மறுக்க முடியாமல் இருக்கும். சில வேளை களில் அவன் சொல்வது பிழை என்று தோன்றினாலும் அவனே அது சரி என்று அதற்கான கார ணத்தை எடுத்துச் சொல்லுவான். அதில் சிவகுரு சமாதானம் ஆவார்.

சிஷ்யன் மிகவும் ஆசை காட்டுவான். அப்படி இருக்கலாம் இப்படி இருக்கலாம் என்று அழகாகக் கற்பனை ஊட்டுவான். சிவகுருவால் அதை எடுத் தெறிந்து தன்பாட்டிற்குப் போக முடிவதில்லை. சிலவேளை சிஷ்யன் ஆசை காட்டுகிறான் என்று விளங்கினாலும் அடுத்த கணமே அதிலும் உண்மை இருப்பதாகவே அவருக்குத் தோன்றும்.

சிவகுருவை சிஷ்யன் ஒரு நாள் வெளியே கூட்டிச் சென் றான். இருவரும் நடந்து சென் றார்கள். நீண்ட தூரம் அவர்கள் ஒரு நதிக்கரை ஓரமாக நடந்து சென்ற பின்பு அங்கே ஒரு அழகிய குடில் வந்தது. சிஷ்யன் குருவைப் பார்த்து அந்தக் குடிலில் இளைப்பாறிவிட்டு பின்பு மேற்கொண்டு பயணிப்போம் என்று அறிவுரை கூறினான். சிவகுருவுக்கு அதுவே சரி என்று பட்டது. அதனால் சிவகுருவும் அதை ஒத்துக் கொண்டு அந்தக் குடிலுக்குள் சென்றார். அங்கே ஆண் என்கின்ற ஒரு உருவத் தைச் செய்து வைத்தாலும் அது உயிர் பெற்று நடக்க வைக்கும் அழ்கு படைத்த ஒரு கன்னி இதயத்தைத் திருடும் பார்வை யோடு இன்பத்தை மட்டுமே தருவேன் என்பது போல நின் றாள்.

அவள் துருத்தும் அங்கம் அவர்மனதை வருத்தும்நோயைப் பன்மடங்காக்கியது. அது இருப் பதே தெரியாது இருந்தது அவ ருக்கு இப்போது நன்கு விளங்கி யது. இந்த இயற்கையின் அல் லது இறைவனின் லீலையில் தன்னையே தான் அறியாத சிவகுரு எம்மாத்திரம்? அவர் உண்மையில் தடுமாறிப் போய் விட்டார். சிஷ்யன் 'உள்ளே போங்கள். அள்ளி அணைத்து ஆசையைத் தீர்த்துக் கொள் ளுங்கள். இது குற்றமும் இல் லைப் பாவமும் இல்லை. படைக் கப்பட்டதே அனுபவிப்பதற்காய் மட்டுமே. அவள் உங்களுக்காக இன்று காத்திருக்கிறாள். அதைப் போல் உங்களுக்காக என்றும் காத்திருப்பாள். உங்களிடமும் இன்றும் துடிக்கும் இளமை இருக்கிறது. ஆண்மை இருக் கிறது. அனுபவிக்கும் ஆசை இருக்கிறது. அவளிடம் வர் ணிக்க முடியாத அழகு கொட்டிக் கிடக்கிறது. வண்ணங்களாக ஜொலிக்கும் அவள் மேனியைப் பாருங்கள். அதன் மென்மையும் தொட்டு உணருங்கள். வாசத்தை நுகர்ந்து அனுபவியுங்கள். அவ ளது என்றும் மாறாத இன்முகம் காட்டும் பண்பைப் பாருங்கள். தன்னையே இழக்கும் நிலையை உணருங்கள். இது உங்களுக் கும் அவளுக்கும் கிடைத்த மறக்க முடியாத கணங்கள். இன்று போனால் நாளை மீண்டும் திரும்பி வராத நிஜங்கள்.

(அடுத்த வாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1574

### டினேஸ் டினா

மன்னா எதிரி நாட்டு மன்னர் ஓலை அனுப்பியுள்ளார்... அரண்மனைக்கு நாம் ஏற்கனவே கொங்கிறீட் போட்டாச்சு. ஓலை வேண்டாம். திருப்பி அனுப்பிவிடும்



### றஜிகரன்

எதிரியைப் பேசவிட்டு கவனிக்கனும் துரோகியை பேசவிடாமல் கவனிக்கனும்



### குமரன்

ஆயிரம் சொந்தம் நம்மைத் தேடிவரும்... ஆனால் தேடினாலும் கிடைக்காத ஒரே சொந்தம் நல்ல நண்பர்கள்



### றஜிதன் றஜி

கேட்ட உடனே கொடுப்பதற்கு முடியாததால் தான் அப்பாவை அனுப்பியிருக்கிறாரோ கடவுள்...?



அப்பா உயிரோடு இருந்தவரை இழப்பு எதுவுமில்லை. அவரின் இறப்புக்குப் பின் இழப்பதற்கு எதுவுமில்லை

### கிருஷ்ணபிரவு

உதிக்கும் போதும் மறையும் போதும் ரசிக்கும் உலகம்



உச்சிக்கு வந்தால் திட்டித்தீர்க்கும் சூரியனை மட்டுமல்ல மனிதனின் வளர்ச்சியையும் கூட

### கோகுலன் கோகுல்

பகிர்ந்துண்ண உணவில்லை எனில் அவன் ஏழை



பகிர்ந்துண்ண உணர்வில்லை எனில் அவன் பணக்காரன்


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 160

# நீரிழிவும் இதய நோய்களும்



நீரிழிவு நோயாளிகளில் ஏற்படும் இறப்பிற்குரிய மிக முக்கிய காரணமாக இதய நோய்களே அமைகின்றன. நீரிழிவு நோயாளர்களில் இரண்டில் மூன்று பங்கானோர் இதயக்குருதிக் குழாய் நோய்களால் இறக்கின்றனர். இதயக் குருதிக் குழாய் நோய்களாவன:

- மாரடைப்பு (Heart attack)
- பாரிசவாதம் (Stroke)
- சுற்றயல் குருதிச்சுற்றோட்ட குருதிக்கலன்களில் ஏற்படும் நோய்கள்.

### நீரிழிவு நோயாளிகளில் இதயநோய் ஏற்படும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கும் காரணிகள் (Risk Factors)

நீரிழிவு நோயாளிகளில் இதய நோய்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் சாதாரண ஒருவரை விட இருமடங்கு அதிகமாகவே உள்ளது. இதற்கான காரணங்களாவன.

**• குருதியில் அதிகரித்தளவு குளுக்கோசின் அளவு**

நீண்ட காலத்திற்கு குருதியில் அதிகரித்தளவு குளுக்கோஸ் காணப்படுவது. குருதிக் குழாய்களில்கொழுப்புப்படிவதை அதிகரிக்கும். (Accelerated Atherosclerosis)

**• உயர் குருதியமுக்கம்**

அதிகரித்த கொழுப்பு படிவதனால் குருதிக்குழாய்களின் விட்டம்,மீள்தன்மை என்பன குறைவடையும். இதனால் அதிகரித்த குருதியமுக்கம் ஏற்படும். அத்துடன் உயர் குருதியமுக்கத்தினால் குருதிக் குழாய்களில் அகவணியில் பாதிப்பும் ஏற்படும். இது இதய நோய்க்கான சந்தர்ப்பத்தை மேலும் அதிகரிக்கும். (Added risk)

- இதயத்திற்கும் குருதிக் குழாய்களுக்குமான நரம்புகளைப் பாதிப்படையச் செய்தல் (Autonomic neuropathy)
- முடியுருநாடியில் அடைப்பு ஏற்படுதல். (Coronary macro vascular disease)
- நீரிழிவு நோயாளிகளில் காணப்படும்.
  - அதிகரித்த உடல் பருமன்
  - அதிகரித்த கொலஸ்ரோல்
  - புகைப்பிடிக்கும் பழக்கம்.
  - போதிய உடற்பயிற்சி இன்மை
  - மன அழுத்தம் போன்ற காரணிகளும் இதய நோய்க்கான சந்தர்ப்பத்தை மேலும் அதிகரிக்கும்.

இதனால் இவற்றை ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டு கட்டுப்படுத்துவதன் மூலம் நீரிழிவு நோயாளிகளில் இதய நோய்களால் ஏற்படும் இறப்பு வீதத்தைக் குறைக்க முடியும்.

### நீரிழிவு நோயாளிகளில் இதய நோய்க்கான அறிகுறிகள்

நீரிழிவு நோயாளிகளில் பெரும்பாலானவர்கள்.

- நெஞ்செரிவு
- உணவு சமிபாடடையாமல்இருப்பதுபோன்றஉணர்வு
- மூச்செடுப்பதில் சிரமம்
- தலைச்சுற்று
- உடல் உளைச்சல்
- கழுத்து நோ
- கைஉளைவு
- முதுகுவலி

போன்ற ஏதாவது ஒரு சில குணங்குறிகளை வெளிப்படுத்துவார்கள். சிறிய அளவினரே சாதாரண நோயாளி போன்று நடு நெஞ்சில் ஏற்படும்/இடது பக்கத்தில் ஏற்படும் அழுத்துவது போன்ற உணர்வு. அதிகரித்த வியர்வை வெளியேற்றம்,வாந்தி என்பவற்றுடன் வைத்தியரை நாடுவார்கள்.

### நீரிழிவு நோயாளர்களில் இதய நோய்கள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துதல்

- நீரிழிவு நோய் கண்டறியப்படும்போதே அந்நோயாளி வைத்தியரின் உதவியுடன் இருதய நோய்க்கான வாய்ப்பை அதிகரிக்கும் காரணிகளை அடையாளங்கண்டு சரியான முறையில் கட்டுப்படுத்துதல்.
- நீரிழிவு நோயாளிகள் ஆண்டுக்கொருமுறை தம்மை மீள பரிசோதனை செய்வதன் மூலம் தமக்கு புதிதாக உயர் குருதியமுக்கம், கொலஸ்ரோல், உடற்பருமன் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்தலும், அதற்கான தகுந்த சிகிச்சையினைப்பெற்றுக் கொள்ளலும். (இதனை நீங்கள் யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.)
- குருதியில் அதிகரித்த குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்துதல்-இது முதன்மையான கட்டுப்பாடாகும்.
- ஆரோக்கியமான உணவுப்பழக்கம் (Balanced Diet) இது ஒவ்வொரு நோயாளிக்கும் தனிப்பட்டதாக இருக்கும்.



உணவில் கலோரி அதிகம் உள்ள (மாச்சத்து உணவுகள்) கொழுப்புச்சத்து அதிகமுள்ள உணவைக் குறைப்பதன் மூலம்

- உடலில் அதிகரித்த குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்தலாம்.(இதற்கான ஆலோசனையைப் பெற நீங்கள் யாழ்.போதனா வைத்தியசாலை உணவு ஆலோசகர் (Dietician) உதவியை நாடுங்கள்)
- போதியளவு உடற்பயிற்சியும் வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்தலும்
- வேகமாக நடத்தல்-ஒரு கிழமைக்கு 5தடவை அண்ணளவாக 30நிமிடங்கள் உடற்பருமனானவர்கள் ஒவ்வொரு நாளும் ஒரு மணித்தியாலம் சுறுசுறுப்பாக நடத்தல், நீந்துதல், துவிச்சக்கர வண்டியில் சவாரி செய்தல்.
- உடற்பருமனைக் குறைத்தல்
- வைத்தியரின் ஆலோசனைக்கமைவாக உரிய நேரத்தில், உரியமாத்திரை அலகுகளை நேரந்தவறாது உள்ளெடுத்தல்.
- புகைப்பிடித்தலை நிறுத்துதல்.
- அதிகரித்த கொலஸ்ரோலை உணவுப் பழக்கங்கள், மருந்துகள், உடற்பயிற்சி மூலம் கட்டுப்படுத்தல்.
- உயர் குருதியமுக்கத்தை கட்டுப்படுத்துதல்
- உணவுக்கட்டுப்பாடு
- உணவில் உப்பின் அளவைக் குறைத்தல்
- உடற்பயிற்சி
- கொலஸ்ரோலின் அளவைக் கட்டுப்படுத்துதல்.
- புகைத்தலை நிறுத்துதல்
- சரியான மருந்துகளை உட்கொள்ளுதல்

என்பவற்றின் மூலம் உயர் குருதியமுக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

**நீரிழிவு நோயாளிகளில்**

- <40 வயதுடையவர்கள்
- சிறுநீரக நோயாளிகள்
- பாரிசவாதம் ஏற்பட்டவர்கள் தமது குருதியமுக்கத்தை **<130/80mmHg** இலும் ஏனையவர்கள் <140/90 mmHg இலும் வைத்திருப் பது நன்று.
- மனஅழுத்தத்தைக் கட்டுப்படுத்துதல்.
- கிரமமான, உடற்பரிசோதனைகள், குருதிப்பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்.
- மாரடைப்பிற்கான / பாரிசவாதத்திற்கான குணங்குறிகள் ஏற்படின் உடனடியாக வைத்தியரின் உதவியை நாட வேண்டும். (Secondary Prevention)

இதய நோயுள்ள நீரிழிவு நோயாளிகள் மேற்குறிப்பிட்ட கட்டுப்பாட்டு முறைகளாலும் இதய நோய்க்குரிய தகுந்த சிகிச்சையினைப் பெற்றுக் கொள்வதனாலும் இதய நோயாளிகளின் பாதிப்புக்களில் இருந்து விடுபட முடியும்.

Dr.பூ.லக்ஷ்மன்
இருதயநோய் நிபுணர்
யாழ்.போதனா
வைத்தியசாலை

நன்றி: யாழ் நீரிழிவு கழகம்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்